www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 99 ஜுன். 13 - ஜுன் 26, 1996 விலை 7.00

# மக்களை நோக்கி வரும் யுத்த ஜனநாயகம்!



படையினர் இறந்து போவதெப்படி?
அதிகாரிகள் யோசிக்கிறார்கள்;
தலையிலிருந்து தொப்பியைக் கழற்றி
வேர்த்த தலை மயிர்தடவி

நேற்று பதினேழு
முந்தநாள் ஒன்பது
முதல் நாள் ஆறு
நாலு நாள் முன்பாக நாற்பது!

எப்படித்தான் இறந்து போகிறார்கள்?

ஒரு சிப்பாய்
தனது சீருடையை அணிகிறபோது
வண்ணத்துப் பூச்சிகள்
சிறகசைப்பை நிறுத்திக் கொள்கின்றன.

அவன்
தனது தலைக்கவசத்தை அணிகிற போது
அணில்கள் கலவரமடைந்து ஓடி விடுகின்றன.

தனக்குப் பொருத்தமற்ற
பாரமான சப்பாத்துக்களைக்
கால்களில் இறுகக் கட்டுகிறபோது
சில் வண்டுகளின் சத்தம் நின்று விடுகிறது.

தனது துப்பாக்கியைத் தூக்கியபடி
ஒரு சிப்பாய்
இன்னொரு தேசத்தில் காலடி வைக்கிற போது
அவன் இதயம் நின்று விடுகிறது.

ஆனாலும்
அதிகாரிகள்
எப்போதும் போலவே
கேட்டுக்கொண்டே இருக்கின்றனர்.

ஒரு சிப்பாய் இறப்பதெப்படி?
படையினர் இறந்து போவது எப்படி?

*இளவாலை விஜயேந்திரன்*




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## முஸ்லிம் காங்கிரஸ் ஒழுக்காற்று நடவடிக்கை!

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தபால் தந்தித் தொலைத் தொடர்புகள் பிரதியமைச்சருமான ஹிஸ்புல்லாவுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கல்குடாத் தொகுதி அமைப்பாளரான எஸ். ஐ.முஹம்மட் தம்பி அவர்களுக்கும் எதிராக முஸ்லிம் காங்கிரஸ் ஒழுக்காற்று நடவடிக்கையொன்றின் மூலம் விசாரணை செய்யவிருக்கின்றது.

அதாவது கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட மீராவோடை முஸ்லிம்கிராமத்திற்கு நியமனம் செய்யப்பட்ட திருமண பதிவுக்காரர் விடயத்தில்பிரதியமைச்சரும்அமைப்பாளரும் முறையற்ற விதமாக நடந்து கொண்டுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் கருதுகின்றது. ஏனெனில் குறிப்பிட்ட பிரதேச சபைக்குள் வதிவிடத்தை கொண்டிராதவரும் பிரதேச செவன லொத்தர் முகவருமான லத்தீஃப் பாவா என்பவருக்கு இருவரும் சிபார்சு செய்து கடிதம் வழங்கியமையால் தகுதியான எம்.ஸி. எம்.இஸ்மாயில் என்பவருக்கு அப்பதவி கிடைக்காமல் போயிருப்பதாக கட்சியின் பொதுச்செயலாளருக்கு முறைப்பாடொன்றை நேரடியாக கையளித்து விசாரணை செய்யுமாறு வேண்டிக்கொண்டனர். இதற்கேற்ப கட்சியின் ஒழுங்காற்று நடவடிக்கைக்கு பொறுப்பானவரான சட்டத்தரணி கபூர் அவர்களை விசாரணை செய்யுமாறு முஸ்லிம் காங்கிரஸ் கேட்டுள்ளது.

இந்தவிடயத்தில் பிரதியமைச்சரின் வாழைச்சேனை பிரதேச எழுதுவினைஞரான கஸ்ஸாலி மாஸ்டர் என்பவரும் சம்பந்தப்பட்டிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸின் கல்குடாத் தொகுதி மத்தியகுழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அ.ஹரி.

## ஏன் இந்த பாரபட்சம்?

வடக்கு கிழக்கு மாகாணசபை திட்ட அமுலாக்கல் அதிகாரிகளை இலங்கை திட்டமிடல் சேவையுள் உள்ளடக்கு மாறும் இவ்வதிகாரிகளை உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள் என்ற பதவிப் பெயரில் நியமிக்குமாறும் கோரும் கடிதம் ஒன்றை வடக்கு கிழக்கு மாகாண இளம் திட்டமிடல் தாபனம் திட்டமிடல் அமைச்சின் மேலதிக செயலாளருக்கு அனுப்பி வைத்துள் ளது. இது தொடர்பான கோரிக்கை ஒன்று கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர் களாலும் ஜனாதிபதிக்கு முன் வைக்கப் பட்டிருந்தது.

வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இவ்வதிகாரிகள் மட்டுமல்லாமல் அதற்கு வெளியேயும் கூட இன்னும் 26 அதிகாரிகள் உள்ளனர். அவர்களையும் வடக்கு கிழக்கு மாகாண அதிகாரிகளுடன் சேர்த்து இலங்கை திட்டமிடல் சேவையில் சேர்த்துக் கொள்வதும் உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள் என பதவி பெயர் வழங்குவதும் நடைமுறைப்படுத்தப் படும் என்று ஜனாதிபதி அவர்கள் இக் கட்சி உறுப்பினர்கட்கு உறுதி அளித்திருந்தார்.

ஆயினும் பெப்ரவரி 1996ல் எடுக்கப்பட்ட மந்திரிசபைத் தீர்மானப்படி வெளியிலுள்ள 26 அதிகாரிகளும் இலங்கை திட்டமிடல் சேவையில் சேர்க்கப்பட்டு உதவி திட்டமிடல் பணிப்பாளர்களாக நியமிக்கப் பட்டுள்ளார்கள். ஆயினும் வடக்கு கிழக்கு அதிகாரிகளின் நிலை இன்னமும் அவ்வாறே உள்ளது.

இந்த நிலையை உடனடியாக அவதானத்தில் எடுக்குமாறு வடக்கு கிழக்கு மாகாண இளம் திட்டமிடலாளர்கள் தாபனம் மேற்படி கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. இதன் பிரதிகள் ஜனாதிபதி, நிதியமைச்சர் ஜி. எல். பீரிஸ் அமைச்சர்கள் தொண்டமான், அஷ்ரப்ஃ அடங்கிய பதினொரு முக்கியஸ்தர்கட்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. - அ.ப

## பாடசாலை மாணவர்கள் பகிஷ்கரிப்பு!

எங்காவது பாடசாலை மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டால் இனிமேல் யாரும் கவலைப்படத் தேவையில்லை. சீனக்குடா பொலிஸாருக்கு செய்தி அனுப்பி விடுங்கள். கம்பு, தடி, கண்ணீர்ப்புகைக்குண்டு சகிதம் வந்து பின்னியெடுத்து விடுவார்கள் மாணவர்களை.

கடந்த 20ம் திகதி பாடசாலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட வெள்ளை மணல் அல் அஸ்ஹர் மகாவித்தியாலய மாணவர்களை அழையாவிருந்தாளிகளாக வந்த சீனக்குடா பொலிஸார் ''வழி நடத்தப் போய் மாணவர்கள், பெற்றோர்கள், ஊரார்கள் என்று சகல தரப்பட்டவர்களின் வயிற்றெறிச்சலையும் கொட்ட வைத்துக் கொண்டிருக்கிறர்கள்.

பாடசாலை ஐம்பது வருடப் பழைமையானது. அறுநூற்றைம்பது மாணவர்கள் படிக்கிறார்கள். க.பொ.த உயர்தர வரை வகுப்புக்கள் உண்டு. ஆசிரியர்கள் பற்றாக்குறை தலை தூக்கி நிற்கிறது. ஆய்வு கூடம் உண்டு. உபகரணங்களோ தளபாடங்களோ இல்லை ஆய்வு கூட இரசாயனப் பொருட்கள் அழகாக அலுமாரிக்குள் பூட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. போதிய கட்டட வசதிகள் இல்லை, இருக்கின்ற கட்டடங்களும் பழையவை.

இந்த நிலையில் தான் போராட்டம் தொடங்கியிருக்கிறார்கள் மாணவர்கள். மாணவர்கள் இத்தகையதொரு போராட்டம் தொடங்கும் அளவுக்கு நிலைமை உருவாக ஏன் அனுமதிக்கப்பட்டது? பாடசாலை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்திருக்கலாமே என்ற வினாவுக்கு பாடசாலை அபிவிருத்திச்சபைச் செயலாளரும் முன்னாள் பிரதேசசபைத் தவிசாளருமான ஜனாப்.ஏ. சகாப்தீன் பதில் கூறினார் நாங்கள் பல தடவை இக் குறைபாடுகளைக் களைய முயன்றோம். கல்வித்திணைக்களம் கண்ணைத்திறக்க மறுத்து விடுகிறதே'' என்றார் கவலையுடன். பாடசாலை அபிவிருத்திச் சங்கச் சார்பில் கடந்த வருடம் கல்வித் திணைக்களத்துக்கு குறைபாடுகளைச் சுட்டிக் காட்டச் சென்றபோது அதிகாரியொருவரால் ''கெட் அவுட்'' சொல்லப்பட்டதை பெற்றோர்கள் சிலர் நினைவுபடுத்தினார்கள் அந்த அதிகாரியின் பெயரைக் கூட சொன்னார்கள்.


வி.

## தமிழ் இராணுவம்?

தமிழ் இராணுவவீரர்கள்நிரம்பிய படையணியை அமைக்கும்பொருட்டு அரசாங்கம் இப்போது பாரிய முயற்சிகளை எடுத்து வருகின்றது. நாடு முழுவதும் நடைபெற்றுக்கொண்டிருக்கும்வீரர்களை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையினூடே தமிழ் இராணுவமும் சேர்த்துக் கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழ்க் கட்சிகள் சில தம் உறுப்பினர்களை இது தொடர்பாக அனுப்பி வைத்துள்ளன எனவும் அறியக்கிடைக்கின்றது.

இராணுவத்திலிருந்து தற்காலிகமாக வேறு துறைக்கு மாற்றியபின் இவர்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படுவார்கள் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(யுத்திய - 19960609)



## கருணாநிதி வருகிறார்?

இந்தியாவின் தமிழ்நாட்டு முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்த வருகை தரவிருப்பதாக இந்திய தூதுவராலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டு பிராந்தியத்தில் முதலமைச்சர் பதவி வகித்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவி செல்வி. ஜெயலலிதா ஜெயராமை படுதோல்வி அடையச்செய்து பதவிக்கு வந்த கருணாநிதி அவர்கள் இலங்கை வடகிழக்குப் பிரச்சினைக்கான தீர்வினை விரும்பும் ஒருவராவர்.

தாம் இப்பிரச்சினையில் இவ்வளவு தூரம் கவனம் எடுப்பதற்கான காரணம் யுத்தத்தில் அழியும் தமிழ் மக்களின் உயிர்களையும் உடமைகளையும் பாதுகாப்பதற்காகும் என கருணாநிதி அவர்கள் கூறியுள்ளார்.

விரைவில் தாம் இலங்கை ஜனாதிபதியைச் சந்திக்கவிருப்பதாகவும் இதற்கான முன் நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். கருணாநிதி அவர்கள் இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதுடன் விடுவிக்கப்பட்ட யாழ்ப்பகுதிகளை சென்று பார்வையிடவும் இடமுண்டு.

இலங்கைக்கு முதலமைச்சர் அவர்கள் வருகை தருவதற்கு முன்னர் அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பத்தை தமக்குத் தரும்படி ஐந்து தமிழ்க்கட்சிகள் கோரிக்கை விடுத்திருந்தன. எனினும், கருணாநிதி அவர்கள் அக்கடிதம் தமக்கு இன்னும் வந்து சேரவில்லை எனக் குறிப்பிட்டிருந்தார்.

(லங்காதீப - 19960609)

## பயப்பட வேண்டாம்!

இப்போது பயங்கொள்ளத்தேவையில்லையாதலால் உங்கள் மகன்மாரை உடனடியாக இராணுவப்பணிக்கு அனுப்புங்கள் என்று இராணுவத்தளபதி ஜெனரல் றொஹான் தலுவத்த இராணுவத்தை விட்டுச் சென்றவர்களின் பெற்றோரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிள்ளைகள் மீதுள்ள அன்பு காரணமாக இராணுவப் பணிக்குச் செல்ல வேண்டாமென நிர்ப்பந்திப்பதை நிறுத்துமாறும் அவர் கோரியுள்ளார்.

இவ்வறிவித்தல் விடுவிக்கப்பட்டதிலிருந்து ஒரு மாத காலத்தினுள் பணிக்குச் சமூகமளிக்கும் எவருக்கும் எவ்வித தண்டனையும் அளிக்கப்பட மாட்டாதென அவர் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் நிரந்தர இராணுவப் பணிக்கு பத்தாயிரம் இளைஞர்களும், தொண்டர் பணிக்கு ஐயாயிரம் இளைஞர்களும் நூறு யுவதிகளும் சேர்க்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

இதுதவிர வடபகுதியில் சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபட இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றுச் சென்ற 57 வயதுக்குக் குறைந்தவர்களைத் தற்காலிக அடிப்படையில் சேர்த்துக் கொள்ள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

(லக்பிம - 19960602)

## ஐ.தே.க ஆட்களுக்கு சம்பள உயர்வு?

ஐ.தே.கவுக்கும் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் சார்பாக கடமைபுரியும் தேர்ந்தெடுக்கப்பட்ட 9 பத்திரிகையாளர்களுக்கு மட்டும் 50% சம்பள உயர்வு வழங்கப்பட்டது தொடர்பாக உபாலி நிறுவனத்தில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

இதுவரை சாதாரண நிருபர்களாக தொழில் புரிந்த ஜட்டில் வெல்லபட, ஷகன் விஜேதுங்க, பந்துல தினபூர்ண ஆகியோரின் சம்பளம் தலைவர்களின் சம்பள அளவுக்கு உயர்த்தப்பட்டமை இந்நெருக்கடிக்கு காரணமாகியுள்ளது. இவர்களின் முதல் சம்பளம் ரூபா ஆறாயிரத்தில் இருந்து இப்பொழுது ரூபா ஒன்பதாயிரத்து ஐநூறாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஷான் விஜேயதுங்கவுக்கு ஞாயிறு அரசியல்கட்டுரைகளுக்கான சம்பளத்தை தவிர்த்து ரூபா 4000 வழங்கப்படுவதாகவும் மற்றும் ரூ. 3500 எரிபொருள் பாவனைக்கும் செலூலர் தொலைபேசிக்காக ரூ. 2000 வழங்கப்படுவதாகவும் அறியப்படுகின்றது.

உபாலி பத்திரிகை நிறுவனத்தில் இருக்கும் ஐ.தே.கவுக்கு ஆதரவு இல்லாத நபர்களை வெளியேற்றும் நடவடிக்கை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் இதன்படி நிறுவனத்தை விட்டு வெளியேறவிரும்புகிறவர்களுக்கு ரூபா 2 - 3 லட்சம் வரை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருப்பதாகவும், எனினும், ஊழியர்கள் இதனை ஏற்றுக்கொள்ளாததினால், தமக்கு வேண்டப்படாதவர்களை வெளியேற்றும் சாத்தியம் இல்லாமல் போய்விட்டது எனவும், தெரியவருகிறது.

இதன்படி நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றை எடுக்க முடிவு செய்துள்ளனர்.

(ராவய - 19960609)

## சேறு பூசுகிறது அரசு!
### -மின்சார சபை ஊழியர்கள்-

வேலைநிறுத்தம் நடைபெற்ற காலத்தினுள் கொழும்பிற்கும் பிற இடங்களுக்கும் நீர் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக நீர் வழங்கும் மத்திய நிலையங்களுக்கு மின் வழங்க தவறியது தம் பிழையென்று வேலைநிறுத்தம் புரிந்தோர் ஒப்புக்கொள்கின்றனர். எனினும், வைத்தியசாலைகளில் அத்தியாவசிய செயற்பாடுகள் புரிவதற்கு மின் வழங்க முயற்சி எடுத்ததாகவும் ஆனால், இதை அரசாங்கம் மறுத்து குற்றச்சாட்டு எழுப்புவது அப்பட்டமான பொய் என்றும் இவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இரத்த வங்கி, மருந்துக் களஞ்சியம், அவசர சிகிச்சைப்பிரிவு, மற்றும் விபத்துச்சேவை போன்ற அத்தியாவசிய பிரிவுகளுக்கு மின்சார சபையின் ஜெனரேட்டர் மூலம் வேலைநிறுத்தம் தொடங்கியதிலிருந்து மின் விநியோகம் வழங்கப்பட்டதாக கூறும் இ.மி. ஊழியர்கள் இரத்த வங்கிகளிலிருந்து இரத்தம் பழுதாகியதால் அவை வீசப்பட்டன என அரசாங்கம் கூறும் பிரசாரங்களில் எந்தவித உண்மையும் இல்லையெனவும் வேலைநிறுத்தத்தின் காரணமாக 1 லீட்டர் இரத்தம் கூட வீணாக்கவில்லை எனவும் குறிப்பிட்டனர்.

பெரியாஸ்பத்திரியின் சகல பிரிவுகளுக்கும் மின் வழங்க அங்கிருக்கும் ஜெனரேட்டரின் கொள்ளளவு காணாது என்றும் இதனால் மாளிகாவத்தை கிரீட் நிலையத்தில் உள்ள 1000 கொள்ளளவு சக்தி கொண்ட ஜெனரேட்டரும் மாதம்பிட்டியவிலிருந்து 500 கொள்ளளவு சக்திகொண்ட ஜெனரேட்டரும் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவற்றை மே - 30 காலை பெரியாஸ்பத்திரிக்கு கொண்டுச் செல்ல முடிந்ததாகவும் அன்றைய பகல் சகல பிரிவுகளுக்கும் மின் விநியோகப்பட்டது என்றும் இவ் அனைத்துக் காரியங்களையும் மின்சாரசபை ஊழியர்களே செய்தனர் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

அத்துடன் சவச்சாலைக்கு முன்பிருந்தே மின் விநியோகிக்க முடியாமல் போய் விட்டது எனவும் அதுவரையில் அது அத்தியாவசிய சேவையாக வரையறுக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டனர்.

கொழும்பு ரிஜ்வே ஆஸ்பத்திரியில் இவ்வாறான அத்தியாவசிய சேவைகளுக்கென குறிப்பிட்ட ஒரு சிலரை வைத்திருந்தனர் என்றும், அன்றிரவு 2.00 மணிக்கு ஜெனரேட்டர் வேலை செய்யாதிருந்தமையால் பிரச்சினை ஏற்பட்டதாகவும் அறியக் கிடைக்கின்றது. செயற்கை சுவாசம் மூலம் உயிர் வாழவைக்கப்படும் சிறுவர்களை கையால் அமர்த்தி அங்குள்ள தொழிலாளர்கள் உதவி செய்திருந்தனர். இருப்பினும் 45 நிமிடத்துக்குள் வேறு ஒரு ஜெனரேட்டர் பொருத்தப்பட்டு மின் வழங்க அவ் ஊழியர்கள் முனைந்தனர் என ''யுத்தியவுக்கு'' தெரிவிக்கப்பட்டது.

இதைத்தவிர இதனை இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்களின் வேலை நிறுத்தமாக இதன்னக் காட்டுவதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சியை கடுமையாக விமர்சிக்கும் இலங்கை மின்சார சபை ஊழியர்கள் இலங்கை மின்சார சபையில் பத்தாயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் வேலை செய்கின்றனர் என்றும், அதில் பொறியியலாளர்களின் எண்ணிக்கை 400 மட்டுமே எனவும் குறிப்பிட்டனர்.

(யுத்திய - 19960609)

## சுரேசுக்கு களங்கம்!

முன்னர் ஈ.பி.ஆர்.எல்.எப் அலுவலகம் சென்று வந்த அதன் முன்னாள் உறுப்பினர்கள் பலரும் ராஸிக் குழுவினரின் நடவடிக்கைகளால் அதிருப்தியுற்று தற்போது அங்கு செல்வதில்லை என்று தெரிய வருகிறது. முன்னர் ஈ.பி.ஆர். எல்.எப். பக்கம் பயமில்லாமல் சென்று வந்த பொதுமக்கள் கூட இப்போது அப் பக்கம் செல்வதற்கு அச்சம் கொண்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இது தவிற ஈ.பி.ஆர்.எல்.எபிலிருந்து ஒதுங்கி இருந்தவர்களை ராஸிக் குழுவினர் தங்களுடன் திரட்டி வருவதால் பயந்த பலர் கொழும்புக்கும் மற்றும் வேறிடங்களுக்கும் தலைமறைவாகியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இன்றைய ராஸிக் குழுவினரின் நடவடிக்கைள் இந்திய இராணுவம் சென்றதுக்குப் பின்னரான காலத்தில் சிறிலங்கா அரசின் இராணுவ அட்டூழியங்களில் கலந்துகொள்ளாத ஈ.பி.ஆர். எல்.எப். இன் நடவடிக்கைகளுக்கு அல்லது ஈ.பி.ஆர்.எல்.எப். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரனின் அறிக்கைளுக்கு ஓர் பாரிய களங்கத்தையே மக்கள் மத்தியில் உண்டு பண்ணும் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை என்று அங்குள்ள மக்கள் பேசிக்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

- குரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## மின்சாரசபை ஊழியர் வேலை நிறுத்தம்:

# அரசு வாக்கு கொடுத்தது யாருக்கு?'

-நாசமறுப்பான்

வெள்ளவத்தை கடற்கரையில் ஒதுங்கிய சடலம் ஒன்று களுபோவில அரசினர் வைத்தியசாலையில் வைத்து அடையாளம் காணப்பட்டது. தண்ணீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணம் என்று மரண விசாரணையின் போது முடிவு செய்யப்பட்ட போதும் இம்மரணம் இயற்கையாக ஏற்பட்ட ஒன்றா அல்லது கொலையா என்ற சந்தேகங்கள் இன்னமும் அவரது உறவினர்கள் மத்தியில் நிலவுகின்றன.

இலங்கை மின்சார அத்தியட்சகராக பணியாற்றிய வல்வெட்டித் துறையைச் சேர்ந்த 37 வயதான நித்தியானந்தவேல் கிருபானந்த மூர்த்தி என்பவரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டவராவார். நடந்து முடிந்த மின்சார சபையின் வேலை நிறுத்தத்தில் தீவிரமாக ஈடுபட்டவர் இவர் என்றும். இந்த வேலை நிறுத்தத்தை ஆதரித்து பகிரங்கமாக பேசியும் வந்தவர் என்றும் இவர்பற்றி கூறும் உறவினர்கள், இவரது மரணத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கக் கூடுமோ என்று சந்தேகிக்கின்றனர். ஆயினும் இதுபற்றி மரண விசாரணையின் போது அவர்கள் எதுவும் தெரிவிக்கவில்லை. 'பிரச்சினையை கிளறுவது, இருப்பவர்களுக்கும் ஆபத்து' என்று கருதுவதால் தாம் மௌனம் சாதித்ததாக அவர்கள் கூறுகின்றனர்.

நடந்து முடிந்த மின்சார சபை ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை அரசு கையாண்ட விதம், அதை அடக்க அது எடுத்த நடவடிக்கைகள் என்பன இந்தக் கொலை குறித்து சந்தேகம் கொள்வதற்கு முக்கிய காரணங்களாக உள்ளன.

கொலன்னாவ மின் நிலையத்தினைச் சேர்ந்த மின்சார அத்தியட்சகரான T.HD.J செனிவிரத்ன அவசரகால சட்டவிதிகளின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். வேலை நிறுத்தத்துடன் தொடர்புடையவர் என்ற காரணத்தினாலேயே இவர் புலனாய்வுத்துறையின் தலைமையகத்தில் எத்தகைய குற்றங்களும் சுமத்தப்படாமலேயே நான்காம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவை இரண்டு மாதிரிச் சம்பவங்கள். இவை தவிர எத்தனையோ வெளியில் வராத சம்பவங்கள், இந்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளின் போது நடந்திருக்கின்றன. மின்சார சபையின் சேவையை அவரசகால சட்ட விதிகளின் கீழ், அத்தியாவசிய சேவையாக அறிமுகப்படுத்தியது, வேலைக்குத் திரும்பாத ஊழியர்கள் வேலை இழந்தவர்களாக கருதப்படுவர் என்று அறிவித்தது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோர் நாசகார வேலைகளில் ஈடுபட்டார்கள் என்று பிரச்சாரம் செய்தது போன்ற பகிரங்க மிரட்டல்களுக்கு அப்பால் ஆளும் கட்சி தொ(கு)ண்டர்களையும் பொலிஸ் படையையும் ஏவிவிட்டு மின்சார சபை அதிகாரிகளை தனிப்பட்ட ரீதியில் மிரட்டியது, கடத்தியது போன்ற நடவடிக்கைகளிலும் இந்த அரசு இறங்கியிருந்தது. இந்த வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக குரல் கொடுத்த பிற தொழிற்சங்கங்களை கூட மிரட்டுவதற்கு இந்த அரசாங்கம் தயங்கவில்லை.

உண்மையில் மின்சார சபை ஊழியர்களின் இந்த வேலை நிறுத்தத்தையும், அதன் பக்கவிளைவாக எழுந்த நீர் வினியோகத் தட்டுப்பாட்டையும் அரசாங்கம் வேறுவிதமாக கையாண்டிருக்கவே முடியாதா? மக்களை இருட்டினுள்ளே, தண்ணீர் கூட இல்லாமல் தவிக்க வைக்காமலேயே இந்தப் பிரச்சினையைத் தீர்த்திருக்க முடியாதா?

முடியும் என்பதே பொதுவான அபிப்பிராயமாக உள்ளது.

இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான 1000 கோடி பெறுமதியான சொத்துக்களை தனியார்மயப்படுத்துவதன் மூலம், கேள்விப்பத்திரங்கள் மூலம் கோரப்பட்ட ஆகக் கூடிய தொகையான 150 கோடி ரூபாவுக்கு விற்பதற்கு அரசாங்கம் எடுத்த முடிவுதான் இந்த வேலைநிறுத்தம் வெடித்ததற்கான முக்கிய காரணமாகும். அரசாங்கம் தாம் அப்படி விற்பதற்கான ஒரு ஒப்பந்தத்தை செய்யப்போவதில்லை என்று அறிவித்திருந்த போதும், அதை செய்வதற்கான வேலைகள் உள்ளே நடந்து கொண்டிருப்பதாக மின்சார சபை ஊழியர்கள் நம்பகமாக அறிந்திருந்ததால், அரசாங்கத்தின் அறிவிப்பை கணக்கெடுக்காம லேயே. தமது வேலை நிறுத்தத்தை தொடர்ந்தனர்.

'நாட்டினைப் பரிபாலனம் செய்வதற்கான உரிமையை 62 சதவீதமான வாக்குகளை எனக்கு அளித்ததன் மூலம் மக்கள் ஆணை கொடுத்திருக்கிறார்கள். மக்களின் இந்த ஆணையை 14,000 மின்சாரசபை ஊழியர்களது கோரிக்கைக்காக விட்டுக்கொடுக்க முடியாது" என்ற ஜனாதிபதியின் பேச்சு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களது சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இதில் வேடிக்கை என்னவென்றால், ஜனாதிபதியின் இந்த 62 சதவீதமான வாக்குகளை பெறுவதற்காக தேர்தலின் போது முன்வைக்கப் பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில், அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டிலேயே இருக்கும் என உறுதியளிக்கப்பட்ட முக்கியமான அரச நிறுவனங்களில் இலங்கை மின்சார சபையும் ஒன்று என்பதுதான். ஜனாதிபதி அவர்கள் தாம் கொடுத்த வாக்குறுதிகளை மறந்துவிட்டாலும் மின்சாரசபை ஊழியர்கள் அதை மறக்கவில்லை! அவர்கள் தமது வேலை நிறுத்தத்தில் உறுதியாக இருந்தார்கள்.

இதனால் அரசாங்கம் மின்சார சபையை அத்தியாவசிய சேவைக்காக பிரகடனப் படுத்தியதுடன், தொழிலாளர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்ப வேண்டும் என்று ஜே.ஆர் பாணியில் பகிரங்க மிரட்டலை விடுத்தது. வேலை நிறுத்தம் பற்றி முன்கூட்டியே அறிவிக்கவில்லை. ஐ.தே.கவின் சதிதான் 'இந்த வேலை நிறுத்தத்திற்கு காரணம் (வேலைநிறுத்தத்தின் பின்னால் யானையும் புலியும்" என்ற வாசகங்கள் கொண்ட சுவரொட்டிகள் கொழும்பு முழுவதும் ஒட்டப்பட்டிருந்தன) என்பது போன்ற நொண்டிச் சாக்குகளில் தொங்கியபடி தன்னை நியாயப்படுத்த அரசாங்கம் முயன்றது.

அத்துடன், இவ்வேலைநிறுத்தம் காரணமாக ஏற்பட்ட தண்ணீர் விநியோகப் பிரச்சினையைக் கூட அரசு தனக்கு சாதகமாகப் பயன்படுத்த முயற்சித்தது. ஏற்கெனவே புலிகளை அம்பலப்படுத்தி மக்களிடம் இருந்து தனிமைப்படுத்துவதன் மூலமாக வெற்றி கொண்ட அதே நடைமுறையை, இந்த விவகாரத்திலும் பயன்படுத்த முயற்சித்தது. தண்ணீர் தட்டுப்பாட்டுக்கு முழுக்க முழுக்க காரணம் மின்சார சபை ஊழியர்களே என்றும், அவர்கள் ஒரு ஜெனரேட்டர்களையும் இயங்க விடாமல் அதன் உதிரிப்பாகங்களை கழற்றிச் சென்றுவிட்டார்கள் என்றும் கூறி தண்ணீர் வழங்குவதற்கான முயற்சியை வேண்டுமென்றே தாமதித்தது. இதன்மூலமாக மக்களது எதிர்ப்புணர்வு மின்சார சபைமீது திரும்பும் என்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால் இது ஒன்றும் அவ்வளவாக வெற்றியளிக்க வில்லை.

இறுதியில் அரசாங்கம் மின்சாரசபை ஊழியர்களை கைது செய்யவும், கடத்திச் சென்று மின் விநியோகத்தை வழங்குமாறு நிர்ப்பந்திக்கவும் தொடங்கியது. 'பிரேமதாச பாணியில் இயங்குமாறு எமக்கு பலர் கூறுகிறார்கள்" என்று கூறி பகிரங்கமாகவே ஜனாதிபதி மிரட்டினார். ஆயினும், என்னதான் பிரேமதாச நடைமுறையை தான் கடைப்பிடிக்கப்போவதில்லை என்று அவர் அறிவித்தாலும் கூட, அரசாங்கம் இந்த விடயத்தைக் கையாண்டவிதம் ஒன்றும் பிரேமதாச கால அணுகுமுறைக்கு சற்றும் குறைந்ததல்ல.

உண்மையில் இந்த அரசாங்கம் தான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, மின்சார சபையை தனியார் மயமாக்குவதில்லை என்ற முடிவில் உறுதியாக இருந்திருக்க வேண்டும். அல்லது அப்படி ஒரு முடிவு செய்திருந்தாலும் கூட, அதை எதிர்த்து அதன் ஊழியர்கள் குரலெழுப்பிய போது தனது முடிவை மறுபரிசீலனை செய்திருக் வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டாலும் கூட இந்த விடயத்தை பின்போட்டுவிட்டு ஊழியர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியிருக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் விட்டுவிட்டு, அரசாங்கம் தான் எடுத்த முடிவில் அதாவது மின்சார சபையை விற்பதாக அதை வாங்குவதாக இருந்த கம்பனிக்கு கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதில் உறுதியாக இருந்தது.

ஆக, 62 சதவீத வாக்கு என்பதோ அந்த மக்களுக்கு கொடுத்த வாக்கோ, அல்லது 14,000 மின்சாரசபை ஊழியர்களின் உணர்வோ முக்கியமல்ல ஒரு தனியார் கம்பனிக்கு அதுவும் 150 கோடிக்கு மின்சாரசபையை தாரைவார்த்துக் கொடுப்பதாக செய்த ஒப்பந்தமே அரசுக்கு பெரிதாக இருந்திருக்கிறது! போதாததற்கு மக்களையும், மின்சாரசபை ஊழியர்களையும் ஏமாற்றிவிட்டு இதை செய்யவும் அது துணிந்திருக்கிறது!

இது எந்தளவிற்கு மோசமாக இருந்திருக்கிறது என்றால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சமசமாஜக்கட்சியே தனது ஆதரவை வேலை நிறுத்தக்காரர்களுக்கு வழங்கும் அளவுக்கு போயிருக்கிறது. அரசாங்கத்தில் அங்கம் வகித்தாலும் கூட இதை ஆதரிக்கமுடியாது என்கிற அளவுக்கு அரசாங்கம் இந்த விடயத்தில் நியாயமற்று நடந்திருக்கிறது என்பதையே இது காட்டுகிறது.

ஆக, இந்த அரசாங்கம் மக்களது ஜனநாயக உரிமைகளை மீட்டெடுத்து அதைக் காப்பாற்றும் என்று இன்னமும் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று கூறுபவர்கள் இதற்கு என்ன சொல்லப் போகிறார்கள்?

# மட்டக்களப்பு: பயணிகளின் தலைவிதி!

மட்டக்களப்பின் மேற்குப் பகுதிகள் முழுதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்து சுதந்திரமாக செயல்படும் புலிகள், மட்டக்களப்பு நகரை அண்டிய பகுதிகளிலும் தமது தாக்குதல் மற்றும் அரசின் சிவில்நிர்வாக நடவடிக்கைகளை சீர்குலைக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தனர். அந்நிலை காரணமாக அரசபடைகள் நகரில் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதை இப்போது அவதானிக்க முடிகின்றது.

கோட்டை முனைப்பாலத்தடியிலும் ஏனைய நுழைவாயில்களிலும் செல்லும் பொதுமக்கள் வாகனங்களிலிருந்து இறக்கப்பட்டு கடுமையாக சோதனை செய்யப்படுகிறார்கள். போக்குவரத்து செய்யும் பொதுமக்கள் இன்னும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ரெலிகொம், டிப்போ என்பனவற்றுக்கு பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு பணிபுரியும் ஊழியர்கள் கூட கடுமையாக சோதனைசெய்யப்பட்ட பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப் பட்டுள்ளனர். ரெலிகொம் நிறுவனத்துக்கு முன்னாலுள்ள வீதியும் வாகனங்கள் செல்ல தடை செய்யப் பட்டுள்ளது.

கல்முனை மற்றும் வாழைச்சேனை ஆகிய தூரஇடங்களிலிருந்து மட்டக்களப்பு நகருக்கு வரும் பஸ்வண்டிகளும் பிரயாணிகளும் பல தரப்பட்ட சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

காலை நேரங்களில் வரும் பஸ் வண்டிகள் சோதனைச்சாவடிகளில் உரிய நேரத்துக்கு செல்ல அனுமதிக்கப் படுவதில்லை. இதனால் அலுவலகங்களுக்குச் செல்லும் ஊழியர்களும், பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும் நேரம் பிந்தியே ஒவ்வொரு நாளும் செல்ல வேண்டியுள்ளது. பிள்ளையாரடி சத்துருக்கொண்டான் முகாம்களின் முன்னாலுள்ளவர்கள் காலைவேளையில் செல்லும் வாகனங்களிலுள்ளவர்களை இறக்கி தாக்குவதை தங்கள் நித்திய கடமைகளில் ஒன்றாகவே கருதியுள்ளார்கள் போல் தெரிகிறது. இவர்களின் தாக்குதலுக்கு நகரில் கடமைபுரியும் அரச ஊழியர் அரசபடையினரால் பல்வேறு சிரமங்களையும் ஒவ்வொரு சோதனைச் சாவடிகளிலும் சந்தித்து துயருறும் பிரயாணிகளும், மட்டக்களப்பு இ.போ சபை கால நேரத்துக்கு ஏற்றவாறு போக்குவரத்து சேவைகளை ஆரம்பிப்பதில்லை. இவர்களின் கவலையீனமும் பொறுப்பற்ற தன்மையும் பொதுமக்களை இன்னும் சினம் கொள்ள வைக்கின்றன.

அரசபடையினரின் தேவைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு உடைந்த, பழுதடைந்த நிலையிலேயே பல பஸ் வண்டிகள் உள்ளன. இப்போதும் இங்குள்ள படையினர் திடீர் திடீரென தங்கள் தேவைகளுக்கு இங்குள்ள பஸ் வண்டிகளை எடுத்துச் செல்வதையும் அடிக்கடி காணலாம்.

இருக்கின்ற ஒருசில பஸ் வண்டிகளை யாவது பாடசாலை மாணவர்களினதும், அலுவலக ஊழியர்களினதும் நன்மை கருதி சேவையில் ஈடுபடுத்தாமல் ஏனோ தானோ என்கின்ற நிலைமையை மாற்ற முன்வருவார்களானால் அது ஓரளவேனும் பொதுமக்களுக்கு திருப்தியைக்கொடுக்கும். இதை விட மக்கள் போக்குவரத்துக்கு பஸ் இன்மையால் ஒருபக்கம் சிரமப்பட இன்னொரு பக்கம் சில தினங்களுக்கு முன்னரும் மட்டக்களப்பு இ. போ சபையின் பஸ் வண்டியொன்றைக் சத்துருக்கொண்டானில் வைத்து புலிகள் தீயிட்டு கொளுத்தியுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இனங்களை ஒடுக்கும் யுகமிது..

தேசிய சமாதானக் குழு அமைப்பாளர் அஜித் ரூபசிங்க



**அஜித் ரூபசிங்க அவர்கள் மார்க்ஸிய அரசியலில் நீண்ட காலமாக ஈடுபட்டு வருபவர். அன்றிலிருந்து இன்றுவரை அவர் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பான ஸ்திரமான கொள்கை கொண்ட ஒருவர் என்று அறியப் பட்டுள்ள புத்திஜீவியாவார்.**

**இவர் தற்போது தேசிய சமாதான குழுவில் தேசிய அமைப்பாளராக இருந்து செயற்பட்டு வருகிறார்.**

**சரிநிகருக்காக அளித்த இப் பேட்டியில் தான் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் தாம் அங்கம் வகிக்கும் தேசிய சமாதான குழுவின் சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் அல்லவென்றும் அவை தன்னுடைய தனிப்பட்ட கருத்துக்கள் என்றும் தெரிவிக்கின் றார் அஜித் ரூபசிங்க அவர்கள்**

**அவரது பேட்டியின் முக்கிய பகுதிகள்:**

பொ.ஜ.மு அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்தியது. எனினும் கடந்த வருடம் ஏப்ரல் 19ம் திகதி, அப் பேச்சுவார்த்தை முறிவடைந்தது. இதன்பின் இரு பகுதியினரும் யுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அரசாங்கம் யுத்தத்தை தொடரும் அதேவேளை சமாதானத்தை காண்பதற்காக அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளையும், பேச்சுவார்த்தை மேசையில் முன் வைத்துள்ளது. அரசாங்கத்தின சமீப கால இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக நீங்கள் என்ன நினைக்கிறீர்கள?

உண்மையில் எந்தவொரு அரசாங்கமோ அரசியல் சக்தியோ யுத்த நடவடிக்கையில் ஈடுபடும் போது அரசியல் நடவடிக்கையிலும் சேர்த்தே ஈடுபடுகின்றன. இங்கும் யுத்த நடவடிக்கையும், சமாதான நடவடிக்கையும் சேர்ந்தே நடைபெறுகின்ற அதே வேளை இரண்டுக்கும் இடையில் பாரிய இடைவெளிகளைக் காணக்கூடியதாக உள்ளது. ஆயினும் என்னதான் வேறுபாடுகள் இருந்த போதிலும் இந் நடவடிக்கைகள் இரண்டினதும் குறிக்கோள்கள் ஒன்றுதான். அதாவது புலிகள் அமைப்பை சமூக அடித்தளத்திலிருந்து வேறுபடுத்தி, யுத்த ரீதியாக அழிப்பது ஆகும். அப்படிச் செய்ய வேண்டும் எனில் தமிழ் மக்களை வெற்றி கொள்ளுவது அவசியம். அதைச் செய்வதற்காகத்தான் இந்த அரசியல் தீர்வு யோசனைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

இதைத்தவிர, சர்வதேச ரீதியில் புலிகள் இயக்கத்தை தனிமைப் படுத்தும் விதத்தில் அரசாங்கம் பிரசாரங்களில் ஈடுபட்டுவருகிறது. இந்த முயற்சியில் அரசாங்கம் வெற்றி பெறும் என்று கருதுகிறீர்களா?

உண்மையில் நிலைமைகள், அவ்வாறு பார்ப்பதை தவறல்ல என்றுதான் காட்டுகின்றன ஏனென்றால், சமாதானப் பேச்சுவார்த்தையின் முறிவுக்கு புலிகளே காரணம் என்று காட்டுவதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சிகளின் பயனாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது. சர்வதேச அழுத்தங்கள், ஆலோசனைகள் என்பவற்றுடன் அரசாங்கம் மிகவும் திறமையான முறையில் இந்தப் பேச்சுவார்த்தையை நடாத்தியது. இறுதியில் பேச்சுவார்த்தை முறிவடைந்ததற்கான முழுக் காரணமும் புலிகளே என்று கூறக் கூடிய விதத்தில் அது அப்பேச்சுவார்த்தையை திறமையாக நடாத்தியது.

ஜனாதிபதி இவ்விடயத்தில் எவ்வாறு செயற்பட்டார் என்று கூற எனக்குத் தெரியாது. ஆனால் இந்திய அரசு உட்பட பல சக்திகளின் தாக்கங்கள் இதன் பின்னணியில் செயற்பட்டிருந்தன. இப்போது சர்வதேச மக்களது சமூகம் அரசாங்கத்தின் நிலைப் பாட்டை ஏற்றுக்கொண்டுள்ள நிலமையே நிலவுகின்றது என்பது தெளிவு.

இந்தச் சக்திகள் தந்திரமாகவும் திறமையாகவும் செயற்பட்டுள்ளன என்று நீங்கள் கருதுவதாகத் தெரிகிறது. அப்படியானால் சர்வதேச மக்கள் அரசின் நிலையை ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு சென்றது ஏன்?

சர்வதேச அரசியல் நிலையை நோக்கின், புலிகள் தொடர்பாக இந்திய அரசாங்கம் தெளிவான முடிவையே எடுத்துள்ளது. புலிகளை அடிபணிய வைப்பதே இந்திய அரசாங்கத்தின் நோக்கம். இந்தியாவின் அத்தேவைக்கு ஐக்கிய அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஆதரவு தெரிவிக்கின்றன. இவ் ஏகாதிபத்திய நாடுகளின் விருப்பம் என்னவெனில், இந்தியாவை பிராந்திய வல்லரசாக மாற்ற உதவி புரிவதாகும். அதனால், இந்தியா எது சொன்னாலும், அதன் பின்னால் ஏகாதிபத்திய நாடுகள் அணி திரள்கின்றன. இன்றைய நிலவரம் இதுதான்.

இந்தியா, புலிகளை அடிபணிய வைக்க முயற்சிக்கின்றது என கூறினீர்களா? அது ஏன்?

புலிகளை இந்தியாவால் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால்தான். இந்தியா வெவ்வேறுபட்ட உதவிகளை வழங்கி அவ்வியக்கத்தை கட்டியெழுப்பியது, தன்னுடைய தேவைக்காகவே அன்றி தமிழ் மக்களின் விடுதலையின்பால் உள்ள அக்கறையால் அல்ல. உண்மையில் இந்திய அரசு நவீன ஏகாதிபத்திய அரசு என்பதை நாம் அறிவோம். அதுவும் இனங்களை மதிக்காது, செயற்படும் ஒரு அரசு. அவர்களுக்கு தேவைப்பட்டது, தமக்கு கட்டுப்படக்கூடிய தம்முடைய கட்டுப்பாட்டில் நிற்கக் கூடிய, தமது தேவைகளை தீர்க்கக் கூடிய ஒரு சக்தி இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் அதிகாரத்தில் இருப்பதே ஆகும். அது இப்பொழுது நடைபெற வில்லை. எவ்வாறாயினும், புலிகள் தமது இனத்துக்காக போராடும் ஓர் அமைப்பு ஆகும். வேறு அரசாங்கத்திடமிருந்து இவ் அமைப்பு உதவி பெற வேண்டியிருந்தது உண்மைதான். எனினும் அவர்கள் நடைமுறையில் நிரூபித்துக்காட்டிய ஒரு விடயம் உண்டு. அது தம் இனத்தின் அபிலாசைகட்காக அர்ப்பணிப் புடன் இயங்கும் ஒரு அமைப்பு என்ற விடயமாகும்.

இத்தகைய நவீன காலனித்துவ அல்லது ஏகாதிபத்திய அமைப்புகளுக்கு புலிகள் போன்ற அமைப்புகள் தேவையில்லை. இதுவே அதற்கான காரணமாகும்.

அதாவது நீங்கள் புலிகள் அமைப்பினை ஓர் தேசியவாத அமைப்பு என்று கூற முற்படுகிறீர்களா?

தனது இனத்தில் சுயநிர்ணய உரிமை. விடுதலை என்பவற்றுக்காக நேர்மையாகவும் தியாகரீதியாகவும் 10 வருடங்ளுக்கு மேலாக, இலங்கை அரசுக்கு எதிராக மட்டுமல்ல, இந்திய இராணுவத்திற்கு எதிராகவும் போர்புரிந்த ஓர் அமைப்பு அது.

அதாவது புலிகள் அமைப்பு ஏகாதிபத்திய விரோதத் தன்மை கொண்டது என்கிறீர்கள்

இரண்டு பக்கங்களும் உள்ளன.

இன்றைய யுகத்தை எடுத்தால், இனங்களை அடிபணிய வைப்பதே, ஏகாதிபத்திய சர்வதேச திட்டமாக உள்ளது. முன்னரைவிட அணுகு முறை இன்று மாற்றமடைந்துள்ளது. முன்னைய ஏகாதிபத்தியங்கள் பழைய காலனித்துவம் என்ற முறையில் நேரடியாக அடிமைப்படுத்தின. இன்று சூட்சுமமான முறையில் ஏகாதிபத்தியம் ஏழை நாடுகளையும், இனத்தையும் அடிமைப்படுத்துகின்றது. அதாவது சர்வதேச நிதித் தொடர்புமூலமாக செய்யும் அடிமைப்படுத்துவதாகும்.

எனவே ஏதாவது ஒரு வர்க்க சக்தி நவ காலனித்துவ நாட்டுக்கு எதிராக எழுச்சியுறும் போது அது ஏகாதிபத்திய விரோத போராட்டத்தின் ஒரு பகுதியாகவே கொள்ளப்படும். மற்றப்பக்கத்தில் இப்பொழுது புலிகள் ஏகாதிபத்தியங்களின் ஆதரவுகளை பெறுகின்றனர், பெறமுயற்சிக்கின்றனர். இந்த அடிப்படையில் பார்த்தால் புலிகளின் செயற்பாட்டை ஏகாதிபத்திய விரோத செயற்பாடு எனக் கூறமுடியாது. ஆயினும் தேசிய இனப் பிரச்சினையை எடுத்தால் அது நவ காலனித்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான ஒரு பிரச்சினையாகும். உழைக்கும் வர்க்கம் தவிர்ந்த வேறு எந்த சக்திக்குமே சுயாதீனமாக அவ் விடுதலை பிரயாணத்தை மேற்கொள்ள முடியாது. ஏனெனில் மற்றெல்லா சக்திகளும் எந்தவொரு இடத்திலாவது நிதிக்கு அடிபணியும் நிலை ஏற்படும்.


உழைக்கும் வர்க்கத்துக்கு மட்டுமே அனைத்து மக்களையும் ஒன்றுபடுத்தி புரட்சியை மேற் கொள்ள முடியும். என்றாலும் பல்வேறு வர்க்கங்களும் கூட தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராக போர் புரிகின்றன. இன உரிமை அச்சக்திகளின் பிரதான உரிமை. தேசிய சுயநிர்ணயத்திற்கான ஜனநாயக உரிமை.

அதாவது புலிகள் அமைப்பு உழைக்கும் வகுப்பினை பிரதிநிதித்துவப்படுத்தாத ஓர் அமைப்பு என்றா கூறுகின்றீர்கள்?

ஆம்! உழைக்கும் வர்க்க அமைப்பாக அவர்களை குறிப்பிட முடியாது. அது சிறு முதலாளிய முற்போக்குவாத, ஜனநாய வாதிகளின் வர்க்க இயல்பினைக் கொண்ட ஓர் இயக்கமாகும்.

"ஜனநாயகம்" என்று நீங்கள் குறிப்பிட்டது புலிகள் அமைப்பின் உள் அல்லது வெளி வியூகத்தில் ஜனநாயக காரணிகள் இருக்கின்றன என்பதனாலா?

வரலாற்று ரீதியாக பார்ப்பின் தன் இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள், புரட்சியின் ஒரு பகுதியாகவே தோன்றியுள்ளன. அதற்கு எந்த வர்க்கம் தலைமை தாங்கினாலும் அது ஜனநாயக புரட்சியின் ஒரு பகுதியாகவே கொள்ளப்பட்டது. முன்பு இருந்த இம் முதலாளித்துவ ஜனநாயக புரட்சியானது ஒக்டோபர் புரட்சிக்குப் பின்னர் இல்லாது போய்விட்டது. இப்பொழுது உள்ளது. மக்கள் ஜனநாயக புரட்சி. அதாவது, உழைக்கும் வர்க்கத்திற்கு தலைமைத்துவம் வழங்கக் கூடிய புரட்சி. எவினும் உழைக்கும் வர்க்கம் மட்டுமே தேசிய ஜனநாயக உரிமைக்காக முன்நிற்பதில்லை. நசுக்கப் படுகின்ற எல்லா வர்க்க சக்திகளுமே இதில் இணைந்து நிற்கும். இதன்படி புலிகள் இப் போராட்டத்தில் முன் நிற்கின்றனர். அவர்கள் செய்யும் செயற்பாடுகளை நோக்கும் போது அது, ஜனநாயகப் புரட்சியின் ஒரு பகுதியாகவே உள்ளது.



**இன்றைய யுகத்தை எடுத்தால் இனங்களை அடிபணிய வைப்பதே ஏகாதிபத்திய சர்வதேச திட்டமாக உள்ளது. முன்னரை விட அணுகுமுறை இன்று மாற்றமடைந்துள்ளது. முன்னைய ஏகாதிபத்தியங்கள் பழைய காலனித்துவம் என்ற முறையில் நேரடியாக அடிமைப்படுத்தின. இன்று சூட்சுமமான முறையில் ஏகாதிபத்தியம் ஏழை நாடுகளையும் இனத்தையும் அடிமைப்படுத்துகின்றது......**

இலங்கை இராணுவத்தினர் யாழ் குடாநாட்டை விடுவித்ததன் பின்னர், சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த, அரசாங்கம் முயற்சித் தது. ஆனால் இன்னும் இராணுவத்தினரால் அரச நிர்வாகப் பிரிவுக்கு சிவில் நிர்வாகம் வழங்கப்படவில்லை. இந்நிலைமையை நீங்கள் காண்பது எவ்வாறு?

இலங்கை இராணுவத்தினர் யாழைக் கைப்பற்றியமை நன்மையான விடயமல்ல. கைப்பற்றுவதால் நாடு இரண்டு படும் நிலை ஏற்படலாம். யார் என்ன கூறினாலும், யுத்தத்தின் விளைவு திருமணம் அல்ல, விவாகரத்தே ஆகும். குண்டு விழும்போது அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் மனதில் நம்பிக்கையீனமும் வஞ்சமும்தான் ஏற்படுகின்றன. இராணுவ நிர்வாகத்தினால் இவ்விளைவுதான் ஏற்படும்.

எனினும் அரசாங்கத்தின் பால் இருக்கும் நம்பிக்கையின் அடிப்படையில், லட்சக்கணக்கான அகதிகள், இராணுவத்தினர் உள்ள பிரதேசத்துக்கு வந்துள்ளனர் என அரசாங்கம் கூறுகிறதே. அதுபற்றி....

14 வருடம் இருண்ட வாழ்க்கை வாழ்ந்து துன்பம் அனுபவித்த மக்கள் அவர்கள். அவர்களைப்போன்று அழிவுகளுக்கும் துன்பங்களுக்கும் உலகத்தில் வேறு எவரும் முகம் கொடுத்திருக்க மாட்டார்கள். இப்பொழுது அவர்கள் துன்பப்படுவதை விட, வீடுகளுக்குச் சென்று சாதாரண வாழ்க்கை வாழவே விரும்புவர். அது அனைவருக்கும் தேவையான ஓர் விடயம். இதன்மூலம், மக்கள் அரசாங்கத்தை நம்பிவந்தனர் என குறிப்பிட முடியாது. இம்முடிவுக்கு வர எந்தவொரு சாட்சியமும் இல்லை.

வடக்குப் பிரதேசத்திலும் அதே போல் கிழக்குப் பிரதேசத்திலும், யுத்த நடவடிக்கைகள் நடைபெற்ற வண்ணமே உள்ளன. புலிகள் இதற்கு முகம் கொடுக்கத் தயங்குகின்றனர் என்பதும் தெரிகின்றது. புலிகளின் இப்போக்குப்பற்றி என்ன கருதுகிறீர்கள்?

கொரில்லா யுத்தத்திற்குரிய சில விதிமுறைகள் என்ன என்பதை தாம் முதலில் அறிய வேண்டும். கொரில்லா யுத்தம் எனின், தற்காலிக பின்னடைவுகளுக்கு முகம் கொடுப்பது இயல்பு. இந்நிலை IPKF காலத்திலும் காணப்பட்டது. இது புதிய விடயமல்ல. தற்காலிக தந்திரோபாயத்தின்படி அவர்கள் வன்னிக்கு மாறியுள்ளனர். கொரில்லா யுத்தத்தின் போது நிலங்களை கைப்பற்றுதல் முக்கியமானதல்ல. ஏனெனில், நிலப் பிரதேசம் எந்நேரமும் பேரம் பேசக்கூடிய ஓர் பொருள். இங்கு முக்கியமானது மக்களின் ஆதரவு. விருப்பு அக் கொரில்லா அமைப்புக்கு, உள்ளதா இல்லையா என்பதாகும்.

இப்பொழுது புலிகளுக்குத் தேவைப்படுவது சிறிய படையணியாகும். அவர்களுக்கு பாரிய படை ஒன்று தேவைப்பட்டாலும் போர் வீரர்கள் என்ற அடிப்படையில் 10,000 - 12,000 பேரே தேவைப்படுவர். அரசாங்கத்திற்கு, அப்படியல்ல. பாரிய இராணுவம் தேவைப்படும் வேளைகளில் 110,000, 120,000 இராணுவ வீரர்கள் தேவைப்படுவர்.

புலிகளுக்கு தமது போர் வீரர்களை உயிர் வாழவைக்க வேண்டும் என்ற பிரச்சினை இல்லை. அவர்கள் கடினமான முறையிலேயே பயிற்றுவிக்கப் பட்டுள்ளனர். துன்பங்களுக்கும், தியாகங்களுக்கும் முகம் கொடுக்கும் சக்தி அவர்களிடம் அதிகளவில் உள்ளது. எனவே பிரச்சினைகள் பெரிதாகும் போது, பின்னடைவினையே எந்தவொரு கொரில்லா அமைப்பினரும் கைக் கொள்கின்றனர். எனினும், கிழக்கில் பிரச்சினை வித்தியாசமானது. அங்கு இவர்களின் அதிகாரம் இருக்கவே செய்கின்றது. அதை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். அதே போல் இன்னமும் கிழக்கில் ஓர் முழுமையான யுத்த நடவடிக்கையை மேற்கொள்ள முடியாத நிலையே உள்ளது. 'ரிவிகிரண' என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கை கைவிடப்பட்டது. யுத்த மூலமான இறுதி வெற்றி எப்பக்கத்தை சேரும் என்பதை தற்போதைய வெற்றியின் மூலம் முடிவு எடுத்தல் விஞ்ஞான ரீதியானதல்ல.

பொ. ஜ. மு. அரசாங்கத்தினால், முன் வைக்கப்பட்டுள்ள, அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் பற்றி கருத்து தெரிவிக்க முடியுமா?

நான் ஆரம்பத்தில் இருந்து கூறி வருவது இதுதான்: தீர்வு யோசனைகள் மூலம் நேர்மையான முறையில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு முன் வைக்கப்பட வேண்டும் ஆயின், அது உத்தியோக ரீதியாக புலிகளுக்கு முன்வைக்கப்படல் வேண்டும். புலிகளின் பிணத்திற்கு மேல் தான் தமிழ் மக்களிற்கான ஜனநாயக அரசியல் தீர்வு வைக்கப்பட வேண்டும் என தீர்மானிக்க எந்தக்காரணமோ நியாயமோ இல்லை.

தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய கட்சி எந்த அரசியல் கட்சி எனத் தீர்மானிக்க வேண்டியது அரசாங்கம் அல்ல, தமிழ் மக்களே ஆவர்.

உண்மையில் தீர்வு யோசனைகள் தொடர்பாக உத்தியோகபூர்வமான நம்பிக்கையும், கௌரவமும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றால் யோசனைகள் உத்தியோகபூர்வமாக புலிகளுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**அரசாங்கம் மூன்றாவது மத்தியஸ்தம் ஒன்று இன்றி, நேரடியாக புலிகளுடன் பேச வேண்டும் எனக் கருதுகின்றீர்களா?**

இல்லை – நான் அப்படிக் கூறவில்லை. உண்மையில் வரலாற்று, அனுபவங்கள் நமக்கு எதைக் குறிப்பிடுகின்றன? சகல அரசாங்கங்களும் இப்பிரச்சினையுடன் விளையாடி உள்ளன. மாறாக, எந்தவொரு அரசாங்கமும், கொள்கையுடனும் ராஜ தந்திரத்துடனும் இவ் விடயத்தின் பால் செயற்படவில்லை. தன்னுடைய கீழ்த்தர எண்ணங்களுக்காகவே அவை செயற் பட்டுள்ளன. இதனால் மத்தியஸ்தம் அவசியம். ஆனால் மத்தியஸ்தம் மிகவும் பயங்கர மானது. விளக்கமாக கூறுவதனால் ஏகாதிபத்தியவாதிகள் எப்போதும் தமது நோக்கங்களில் வெற்றி பெறுவதற்காகவே பாடுபடுகின்றனர். அவர்கள் தான் பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றனர். நான், ஏகாதி பத்திய நாடுகள் மத்தியஸ்தம் செய்வதை விரும்பவே இல்லை. அது சுயாதீனத் தன்மைக்கு குந்தகமானது. மத்தியஸ்தம் செய்யப்படுதெனில் இரண்டு பிரிவினருக்கும் நம்பகமான இரு பிரிவினரும் நியமிக்கும் நாட்டில் வாழும் பிரஜைகளின் சக்தி மூலம் மூன்றாவது மத்தியஸ்தம் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். இதற்கு சர்வதேச ஒத்துழைப் பைப் பெற்றுக் கொள்ளலாம். அதுவேறு விடயம். பிரதானமாக இது நம் பிரச்சினை. நம்மால் தீர்த்துக் கொள்ளக் கூடிய பிரச்சினை.



**இன்றைய சந்தர்ப்பத்தில் தமிழ் கட்சிகள், மற்றும் அமைப்புகளின் கடமைகள் பற்றி திருப்தி அடைகின்றீர்களா?**

திருப்தி அடைதல் அல்ல, எனக்கு பெரும் எதிர்ப்புணர்வே உள்ளது. ஏனெனில் அவர்கள் புலிகளின் அடக்கு முறைபற்றிக் குறிப்பிடு கின்றனர். எனக்கு அதுதொடர்பாக தமிழ் கட்சிகளுடன் முரண்பாடு இல்லை. வரலாற்று ரீதியாக புலிகளின் போராட்டத்திற்கு ஜனநாயக நியாயப்பாடு இருந்தாலும் இது அடக்கு முறையையும் உள்ளடக்கியது. எல்லைக் கிராமங்களில் உள்ள நிராயுதபாணி ஏழை மக்கள் மீதான தாக்குதல்களை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். உண்மையில் அவர்கள் குறுகிய தேசியவாதத்தையும் கடைப் பிடிக்கின்றனர். அவர்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை ஒன்றுபடுத்தி துன்பப் படும் அனைத்து மக்களின் விடுதலைச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். குறுகிய தேசிய வாதத்தால் விடுதலையைப் பெற்றுக்கொள்ள முடியாது. எனினும் பிற தமிழ் அமைப்புகளின் நிலை இதற்கு மாறானது. அவர்கள் நவகாலனித்துவத்தின் கீழ் இருப்பவர்கள் என்ற ரீதியில் செயற் படுகின்றனர்.

இக்காலத்தில் இத் தமிழ் கட்சிகள் என்ன செய்துள்ளன? ஒன்றில் இந்தியாவின் ரோ அமைப்பிடம் செல்கின்றன, இல்லாவிட்டால் இலங்கை அரசாங்கத்திடம் செல்லுகின்றன. எந்தவொரு அரசியல் சுயாதீனத் தன்மையும் அற்ற கட்சிகள், அமைப்புகள், இவை இவர்கள் தமிழர்களால் நிராகரிக்கப்பட்டவர்கள். இவர்களுக்கு அடித்தளம் என்பது இல்லை. புலிகள் IPKF ஆக்கிரமிப்பின் போது, இலங்கையின் சுயாதீனத்தை காப்பாற்றவும் தேசியத்தைக் காப்பாற்றவும் போர் புரிந்தனர். இவ் அமைப்புகள் அக் கொள்கைகளுக்கு முரணாக செயற்பட்டன.

**இத் தமிழ் கட்சிகள், மற்றும் அமைப்புகள், ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு ஜனநாயக அடிப் படையில் செயற்படுவதை நீங்கள் காணவில்லையா?**

அவர்கள் தமது இனமக்களுக்காக ஜனநாயக அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனில், தெளிவாக யுத்தத்தை நிறுத்துங்கள் என்று கூறி அதற்காக இயங்கியிருக்க வேண்டும். அப்படிச் செய்துவிட்டு புலிகள் உள்ளிட்ட ஏதாவதுஒரு பிரதிநிதித்துவத்கை ஏற்படுத்தி மிருக்கலாம்.

**வடக்கில் இருக்கும் கட்சிகள் பற்றி கூறினீர்கள்? தொண்டமான் பற்றி?**

தொண்டமான் அவர்களும் நவ காலனித்துவ அதிகாரங்களின் ஒரு சக்தி. அவரின் அரசியல் நிலை பற்றிய தெளிவு நம்மிடம் உள்ளது. அவர் எப்படியாவது, தன்னுடைய வர்க்கத்தின் தேவைகளுக்காக இப் பிரச்சினையில் முற்போக்குத்தனமான நிலையில் உள்ளார் என்பதைக் கூற முடியும். ஏனெனில், அவர் தமிழ் மக்களின் விடுதலை தொடர்பாக தெளிவான நிலையில் இருந்துள்ளார். அதே போல் புலிகள் அமைப்பு சுயநிர்ணயத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளும் சண்டையில் மக்களின் உரிமைக்காக நிற்கிறார். இதனால் பிறகுழுக்களை விட வித்தியாசமான

**நம் நாடு இரத்தக் குளமாகியுள்ளது. சுதந்திரம் போய்விட்டது. அரசாள்வது அடக்குமுறையும் பொய்யும் தான். இவ்வாறு சென்று கொண்டிருந்தால் முழுநாடும் அழிந்து விடும். ஏகாதிபத்தியத்திற்கு முற்றாக உட்படும் நிலை ஏற்படும்.**

உருவம் அவரிடம் உள்ளது. எனினும், அவர் நவ காலனித்துவ நிர்வாகத்தின் ஒரு கணு என்பதை மறந்து விடக்கூடாது.

**நாட்டின் பிரதான எதிர்கட்சியான ஐ.தே.க., அரசாங்கத்தினால் முன் வைக்கப்பட்ட தீர்வு யோசனைகள் தொடர்பாகவும், யுத்தம் தொடர் பாகவும் அமைதி யான போக்கைக் கடைப்பிடிப்பது தொடர்பான உங்கள் அபிப்பிராயம்?**

நாம் ஏன் இவ்வளவு பெரிதாக ஆச்சரியப்பட வேண்டும். எந்தவொரு கட்சியாவது அரசாங் கத்தை அமைத்து பிரச்சினையை தீர்க்க முனையும் போது எதிர் கட்சி அம்முயற்சியை தடுத்து விடுகின்றன. இதுவல்லவோ நமது வரலாறு. ஆனால் ஐ.தே.க. அப்படி செய்யாமல் இருப்பது எமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஆனால், இப்பொழுது ஐ.தே.க. ஓர் பிணம். நாம் கதைப்பது அரசியல் பிணம் பற்றியதாகும். மக்கள் குருதி நிரம்பிய அந்த பிணத்தை நிராகரித்து விட்டனர். அவர்களுக்கு இப்போது தேவைப்படுவது வெள்ளைப் பூச்சு பூசுவதாகும்.

இச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு தமிழ் வாக்குகள் தேவைப்படு கின்றன. அதனால்தான் அவர்கள் அமைதியாக இருக்கிறார்கள். ஏனெனில் முக்கியமான வாக்குப் பலம் அவ்விடத்தில் இருப்பதனாலாகும். இது வாக்கு விளையாட்டு.

யோசனைகளின் குறைநிறைகளை ஐ.தே.க. முன்வைக்காதது ஏன்? அதன் நல்ல விடயங்களையும், மாற்றுக் கருத்துக்களையும் முன் வைக்கலாம் அல்லவா? அவற்றை ஐ.தே.க. செய்யாதது என்றே நினைக்கின்றேன்.

எவ்வாறாயினும் நம் நாடு இரத்தக் குளமாகி உள்ளது. சுதந்திரம் போய்விட்டது. அரசாள்வது அடக்கு முறையும் பொய்யும் தான். இவ்வாறு சென்று கொண்டிருந்தால் முழு நாடும் அழிந்து விடும். ஏகாதிபத் தியத்திற்கு முற்றாக உள்படும் நிலை ஏற்படும். ஆகவே யுத்தத்தின் மூலம் அன்றி நேர்மையாக பொறுப்புடன் வெளி அழுக்கமின்றி ஜனநாயக அடிப்படையில் உருவாக்கப்படும் தேசிய பிரச்சினைக்கான தீர்வின் அடிப்படையில் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வழியில் சமாதானம் மூலம் தீர்வுக்காக முயல்வது நம் அனைவரது கடமையாகும்.

– அனுருத்த

# மட்டக்களப்பு: வயல்கள் தரிசாகின்றன! மனங்கள் கொதிப்பாகின்றன!!



மட்டக்களப்பில் அமுல்செய்யப்படும் அரசின் செயற்பாடுகளால் மக்கள் அல்லல்படுவது ஒரு புறம் இருக்க இப் பிரதேச மக்களின் விவசாய நடவடிக் கைகள்யாவும் முற்றும் முழுதான பாதிப் புக்குள்ளாகியுள்ளன. கடந்த பலவரு டங்களாக மட்டக்களப்பு மாவட்டத்திற் கும் ஏனைய மாவட்டங்களுக்கும் உணவுக்குரிய நெல்லை உற்பத்தி செய்த பல்லாயிரக்கணக்கான நெல்வயல்கள் பாரிய பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரிய குளங்களாகிய உன்னிச்சை, றூகம், வாகனேரி, நவகிரி ஆகியவற்றின்மூலம் நீர்ப்பாய்ச்சலுக்குள்ளாகக் கூடிய 18 ஆயிரம் ஏக்கர் நெல்வயல்களில் ஆயிரம் ஏக்கர் நிலம் கூட நெற்செய்கை பண்ணப்படவில்லை.

வவுணத்தீவுப் பகுதியில் உன்னிச்சைக் குளத்தின் பாசனத்தின் கீழ் 6000 ஏக்கர் செய்கை பண்ணக்கூடியதாக இருந்தும் இதுவரை 300 ஏக்கர் மட்டுமே நெற் செய்கை பண்ணப்பட்டுள்ளது. செங்கலடி பிரதேசத்தில் உள்ள றூகம் குளத்தின் பாசனத்தின் கீழ் 4500 ஏக்கர் நெல்வயல் செய்கைபண்ணக் கூடியதாக இருந்தும் இன்று வரை 100 ஏக்கர் வயல் மட்டுமே செய்கை பண்ணப் பட்டுள்ளது. வாழைச் சேனைப்பகுதியில் வாகனேரி குளத்தின் நீர்ப்பாசனத்தின் கீழ் 3000 ஏக்கர் நெற் செய்கை பண்ணக்கூடியதாக இருந்தும் இதுவரை 100 ஏக்கர் வரையே நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெல்லாவெளிப்பகுதியில் உள்ள நவகிரி குளத்தின் கீழ் இன்று வரை 25 ஏக்கர் வயல் கூட நெற்செய்கை பண்ணப் படவில்லை.

மட்டக்களப்பின் பிரதான தொழிலான விவசாயத்திற்கு ஏற்பட்டுள்ள இந்நிலை மைக்கு அரசின் கண்மூடித்தனமான கடந்த கால நடவடிக்கைகளும் தற் போதைய நடைமுறைகளுமே பிரதான காரணமாகும். இந் நெல்வயல்கள் அனைத்தும் இராணுவத்தின் கட்டுப் பாடற்ற பிரதேசத்தில் இருப்பதும், கடந்த போகத்தின் போது நெற்செய்கை பண்ணப்பட்டு விளைந்த வயல்கள் அனைத்தும் இராணுவ நடவடிக்கையின் போது அழிக்கப்பட்டதுமே முக்கிய காரண ங்களாகும். இதைத்தவிர விதை நெல்லைக்கூட நடுத்தெருவில் கொட்டிச் சீரழிக்கும் நடவடிக்கைகளும் உரவகை களைப் பெறுவதில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் இவற்றையெல்லாம் கடந்து நெற்செய்கை பண்ணினாலும் விளைந்து அறுவடை செய்யும் தறுவாயில் எல்லாம் நாசமாகி விடுமோ என்ற பெரும்பாலான விவசாயி களின் அச்சமுமே இந்நிலைமைக்குக் காரணம். அத்தோடு மட்டக்களப்பு மாவட்டம் ஒரு நிர்வாக அலகுக்குக்கீழே இருந்தாலும் இராணுவச் செயற்பாட்டைப் பொறுத்தவரை இது இராணுவம் ஒருபக்கம் STF ஒருபக்கம் என பிரிபட்டு நிற்கின்றது. இவ்விருபகுதியினருக்கும் இடையேயுள்ள முரண்பட்டதன்மை காரணமாக ஒவ்வொரு பகுதியினரும் வெவ்வேறு விதமான கட்டுப்பாடுகளை விதிப்பதனால் இவ்வாறு அல்லல் படுவதை விட தொழில் செய்யாமல் இருப்பதே மேல் என்ற நிலைக்கு விவசாயிகள் வந்துள்ளனர்.

ஆனால், இந்நிலைபற்றி அரசோ அல்லது இராணுவத் தரப்போ பெரிதாகக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அரசைப் பொறுத்தவரை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் எந்தவித மான செயற்பாடுகள் நடந்தாலும் அதன்மூலம் பயனடைவது புலிகளே தவிர மக்கள் அல்ல என்ற முடிவின் அடிப்படையிலேயே அனைத்து முடிவுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் காரணத்தினால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து நகருக்கும் ஏனைய இடங்களுக்கும் மக்கள் செல்லும் போது இராணுவச் சோதனை நிலையங்களில் வெயிலில் கால்கடுக்க மணித்தியாலக் கணக்கில் மக்களை தாமதப்படுத்தி இன்பம் காணுவதிலும், இவ்வாறான மக்களில் இளவயதினரை புலியாகவே பாவித்து கேள்விகள் கேட்பதும், அருவருப்பான வார்த்தைகளில் பேசுவதும் இதற்கும் ஒரு படி மேல் சென்று பெண்கள் என்றும் பாராமல் தாக்குவதும் தற்போது அனைத்து இடங்களிலும் நடைபெறு கின்ற சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது. இதன் காரணத்தினால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள இளம் ஆண்களும் பெண்களும் வெளியில் பயணம் செய்வதற்கே பயந்து வாழ்கின்ற நிலையும் உருவாகிவிட்டது. கடந்த பல வாரங்களாக மட்டுநகரின் கிராமங்களை அண்டிய பகுதிகளில் இடம் பெறும் தாக்குதல்களும் பொதும க்களை பீதிய டையச் செய்துள்ளன. மட்டக்களப்பில் நடைபெறும் தாக்குதல்களின் விளைவு கள் அதிகமாக இருந்தும் தணிக்கை காரண மாக பல விடயங்கள் வெளிவராமலே போய் விட்டன. ஆனால் உண்மை நிலையோ படு மோசமானதாக உள்ளது. அப்பாவி மக்கள் தாக்கப்படுவதும், கிராமங்கள் மீது கண்மூடித்தனமான முறையில் இடம் பெறும் குண்டு வீச்சுக்களும் பொதுமக்களை உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு திரிய வேண் டிய நிலையை ஏற்படுத்தி விட்டன.

அத்தோடு வடக்கில் நடைபெறும் இராணுவ நடவடிக்கையின் எதிர் விளை வாக பல விடயங்கள் இங்கேயே அரங்கேறுகின்றன. புலிகளின் போக் கைப் பார்க்கின்ற பொழுது வடக்கில் வாங்கியதற்கு கிழக்கில் கொடுப்பது என்று கங்கணம் கட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டதாகவே கருதவேண்டி யுள்ளது. எந்த நேரம் எங்கே என்ன நடக்கும் என்று புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு பரவலான முறையில் சம்பவங்கள் நடைபெற்ற வண்ணமே இருக்கின்றன. பகலில் கூட வீட்டில் நிம்மதியாக இருக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. மட்டக்களப்பில் உள்ள இராணுவத்தினரின் பலமும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதால் நிலைமை புலிகளுக்கு சாதகமாகவே காணப்படுகின்றது. மட்டுநகரின் மையப்பகுதியான பட்டினப்பகுதியைக் கூட கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடியாமல் அரசு திணறுவது நன்கே தெரிகிறது. பாதுகாப்பின் பெயரால் பல வீதிகள் மூடப்பட்டு விட்டன. நாலா பக்கமும் இராணுவ முகாம்களால் சூழப்பட்டு இருந்தாலும் சோதனைச் சாவடிகளுக்கு மட்டும் குறைவேயில்லை. ஆண்களைச் சோதிப்பதை விட பெண்களே பலமான சோதனைக்குள் ளாக்கப்படுகின்றனர். சற்றுக் கறுப்பான பெண்களைக் கண்டுவிட்டால் இராணுவத்தினருக்கு பெண்பு[illegible] கண்டு பிடித்து விட்டதுபோன்ற தன்மை ஏற்பட்டு விடுகின்றது. எவ்வளவிற்கு அவர்களைக் கொடுமைப்படுத்த முடியுமோ அவ்வளவுக்கு மோசமாக நடந்து கொள்கிறார்கள். இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்களைக் கண்டு கேட்டால் பல கதைகளை ஒவ்வொரு பெண்ணுமே கூறுவார்கள். இந்நிலையில் தான் மட்டக்களப்பின் உண்மையான தன்மை விளங்குகின்றது.

இதன் மறுபக்கத்தில் மட்டக்களப்பு தொடர்பாகவும் இங்கு மேற்கொள்ளப் படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும் அரசு ஒட்டு மொத்தமான ஒதுக்கல் முறையையே கடைப்பிடித்து வருகின்றது. தானும் எதுவும் செய்யாமல் செய்பவனையும் செய்யவிடாமல் வைக்கல் பட்டறை நாய்போல் செயற்ப டுகின்றது. மட்டக்களப்பை அரசு புறக்க ணித்தபோது பெருமளவு உதவிகளை மட்டக்களப்பிற்குச் செய்தது NORAD நிறுவனமே. இதுவரை சுமார் 500 மில்லியன் ரூபாய்களுக்கு மேல் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகச் செலவிட்டுள்ளது. இவ் வருடத்தில் செலவிடுவதற்கு 150 மில்லியன்களுக்கு மேல் ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்தும் அரசின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் ஒப்புதல் கிடைக்காமையால் எதுவுமே இன்னும் நடைபெறவில்லை. வருடத்தில் 5 வது மாதமும் முடிவடையும் இந்நிலையில் அரசின் இப்போக்கு திட்டமிட்ட முறையில் மட்டக்களப்பிற்கு செய்யப்படும் புறக்கணிப்பு என்றே கொள்ள வேண்டியுள்ளது. ''சாமி வரங் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடான்'' என்பது இங்குதான் பொருந்துகின்றது.

மறுபக்கத்தில் மாவட்டத்தின் கல்வி,. மற்றும் ஏனைய துறைகளும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதையும் காணமுடிகின் றது. படுவான் கரை என ஒருபகுதியை குறிப்பிட்டு ஏதோ தீண்டத்தகாத நப ரைப்போல் அதைக் கவனிப்பதும் இப்பிர தேசத்தில் எந்த ஒரு அபிவிருத்தி நடவ டிக்கையையும் செய்ய முன்வராமல் இருப்பதும் அடிப்படையில் இப்பிரதே சங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களாக இருப்பதே காரணமாக உள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வரலாற்றுப் படிப்பினைகளும் முன்நகர்வும்



ராம்பிரசாத்

பொஸ்னியாவில் அமெரிக்காவினாலும் ஐரோப்பிய நாடுகளாலும் அரசியலமைப்பு திணிக்கப்பட்டதாலும் பொஸ்னிய நிர்வாகம் உலக வங்கியினாலும் ஐரோப்பிய பிரதிநிதியாலும் கட்டுப்படுத்தப் படுவதாலும் பொஸ்னியாவில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் எமக்குத் தெரிந்தவையே.

அங்கு மோதலில் ஈடுபட்டிருந்த இரண்டு இனங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய காலனித்துவ முறையை ஒத்த அரசியலைப்பும் நிர்வாக முறையுமே திணிக்கப் பட்டுள்ளன.

இந்நிலைமை இலங்கையில் ஏற்படாது தடுக்கப்பட வேண்டுமாயின் தமிழ்மக்களால் அங்கீகரிக்கப்படும் தீர்வுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு உடன்பாடு காணப்பட வேண்டும்.

மேற்படி தீர்வுத் திட்ட அடிப்படையில் சமாதான உடன்பாடு ஏற்படுவதற்கு அடிப்படையாக யுத்தநிறுத்தம் ஏற்படுத்தப்பட வேண்டும். யுத்தநிறுத்தத்தைக் கண்காணிக்க ஐ.நா. படைகள் இங்கு வரவழைக்கப்படலாம். வேறு தனிப்பட்ட நாட்டுப்படைகளை இங்கு வரவழைப்பது தவிர்க்கப்பட வேண்டும். யுத்தநிறுத்த மீறல்கள் ஏற்பட்டாலும் முறைப்படுத்துவதில் முழுக்கவனமும் செலுத்தப்பட வேண்டும். தென்னாபிரிக்காவில் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் கிறிஸ்ஹானி கொல்லப்பட்ட போதும் தென்னாபிக்காவில் சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டன. இஸ்ரேல் பிரதமர் ராபின் கொலை செய்யப்பட்ட போதும் பாலஸ்தீன சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படுகின்றன.

அத்துடன் தமிழ்ப் பிரதேசத்தில் புனர்வாழ்வு, புனர்நிர்மாண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். நீண்ட காலத்தில் நிரந்தர அமைதியை நிலைநாட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்வுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட பிரதான விடயங்களுடன் நுண்ணியதான பல விடயங்களையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப கவனிக்க வேண்டும் வெளிநாட்டு தலைமீட்டால் ஏற்படும் சகலவிதமான சாதக பாதக அம்சங்களையும் ஏற்று எமது நோக்கத்தை சரியாக நிறைவேற்ற வேண்டும்.

அப்படியான தலைமீட்டினால் சமாதானம் நிலைநாட்டப்படுவதில் ஏற்படும் சிக்கல்கள் மட்டுமன்றி முழு நாட்டிற்கும் பல புதிய சிக்கல்கள் பிரச்சினைகள் ஏற்படலாம்.

தலைமீட்டின் தன்மையை பொறுத்து அரசியல் பொருளாதார, சமூக பண்பாட்டு ரீதியாக புதிய சிக்கல்கள் பொதுவானதாக ஏற்படலாம். அவற்றை வெற்றி கொள்வதில் இலங்கை அரசு நிதானமாகவும் திட்டமிட்டும் மிகவும் பொறுப்புடனும் செயற்பட வேண்டும்.

அதிகபட்சமான கோரிக்கைகளை முன்வைப்பதும் பின்னர் மிகவும் குறைவான சலுகைகளை நியாயப்படுத்தல்களுடன் ஏற்றுக் கொள்வதும் இலங்கை மிதவாதி தமிழ் தலைமைகளின் பலவீனமான பண்பாகும். இந்தவகையில் தமிழீழத்தை முன்வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணி மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்றுக் கொண்டமை உச்சமான சறுக்கலாகும். இந்த மிதவாதத் தமிழ் தலைவர்களின் சறுக்கல்களின் பாதிப்பினால் 80 களின் தமிழ்மக்களின் போராட்டத்தில் பல முனைகளிலும் ஆயுத நடவடிக்கைகளை இணைக்க வேண்டிய நிர்ப்பந்தம் அதிகரித்தது.

பண்டா – செல்வா, டட்லி – செல்வா ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்ட அன்றைய நிலைமைகளை விட 80 களில் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் பல்வேறு விதங்களிலும் வேறு ஒரு பண்புரீதியான மாற்றங்களுடன் வளர்ச்சியடைந்தது.

1983 ஆம் ஆண்டு யூலை கலவரத்திற்குப் பின்னர் தமிழ்மக்களின் போராட்டத்தில் ஓர் சடுதியான பாய்ச்சல் ஏற்பட்டதெனலாம். இதனை அடுத்து தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டு வாழ்வியல் அம்சங்களிலும் பாரியமாற்றங்கள் ஏற்பட்டன. தமிழ்மக்கள் மீதான தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளும், இனஒதுக்கங்களும் தமிழ்மக்களின் சகல அம்சங்களையும் மாற்றமுறச் செய்தன. இவற்றினால் தமிழ்மக்களின் பிரச்சினைகளில் சர்வதேச சமூகத்தின் கவனமும் குறிப்பாக இந்தியத் தலையீடும் பிரதான இடத்தை வகிக்க ஆரம்பித்தன.

இந்தியாவிலிருந்து வழங்கப் பட்ட ஆலோசனைகள் செலுத்தப் பட்ட அழுத்தங்கள், நிர்ப்பந்தங்கள் சட்டவரைவும் தமிழ்மக்களின் தேசிய அபிலாஷைகளை பூர்த்தி செய்வதாக இல்லை. அத்துடன் தமிழர் போராட்டம் பன்முகப்படுத்தப்பட்டதாக வளர்ச்சியடையாமல் 1987 இற்கு பின்னர் விடுதலைப்புலிகளின் இராணுவரீதியான தாக்குதல்கள் மட்டுமே தமிழ்மக்களின் போராட்டமாக குறுகிப்போனது. விடுதலைப் புலிகளின் இராணுவ வல்லமை பொதுஜனஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளால் பின்னடைவு கண்டதனால் தமிழர் போராட்டம் அசைவற்ற ஓர் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்நிலைமை திம்பு பேச்சுவார்த்தையின் போது தமிழர் போராட்டம் இருந்த நிலைமையை விட மிகவும் பலவீனமான நிலைமையாகும். போராட்டத்தில் தமிழ் மக்களின் பங்களிப்பு, சர்வதேச குறிப்பாக இந்திய தலையீடு என்பவற்றில் ஏற்பட்டுள்ள சரிவு, தமிழ் இயக்கங்களின் இராணுவ பலவீனம், பாராளுமன்றத்திலும் வெளியிலும் தமிழ் தலைமைகளின் திராணியற்ற போக்கு என்பவற்றால் தமிழ்மக்களின் போராட்டம் இக்கட்டான சந்தியில் அசைவின்றி நிற்பதாகவே தோன்றுகிறது.

இருநாட்டு அரசாங்கத்திற்கு மிடையிலும் நடைபெற்ற சந்திப்புக்கள் என்பவற்றின் விளைவாக திம்பு பேச்சுவார்த்தை இடம் பெற்றது.

திம்பு பேச்சுவார்த்தையும் இணக்கப்பாடுகளும் தமிழ்மக்களின் போராட்ட வளர்ச்சியின் பலாபலன்கள் என்றே கருதமுடியும். இதனை ஒரு தர்க்கரீதியான வளர்ச்சியின் விளைவாகவும் கருதலாம்.

திம்பு பேச்சுவார்த்தையின் போது சகல தமிழ் அமைப்புக்களிடமும் காணப்பட்ட புரிந்துணர்வு, ஐக்கியம், தீர்வுதிட்டத்தை முன்வைப்பதில் காணப்பட்ட பொது உடன்பாடு என்பன மிகவும் முன்னேற்றகரமாக கொள்ளப்படுகின்றது. திம்பு மாநாட்டில் முன்வைக்கப்பட்ட எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட 4 அம்சங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் முக்கியத்துவம் வாய்ந்ததாக கொள்ளமுடியும்.

அந்த அடிப்படையில் ஏற்பட்ட இலங்கை–இந்திய ஒப்பந்தம், பின்னர் கொண்டுவரப்பட்ட மாகாணசபை திட்டம் என்பன தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்கன. மாகாணசபை திட்டம் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை பூர்த்தி செய்க்கூடியதாக இருக்காதபடியாலும் இலங்கையிலும் இந்தியாவிலும் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினாலும் நெருக்கடிமிக்க நிலமைகளை தோற்றுவித்தது.

பின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைத்த தீர்வுதிட்ட யோசனைகளும், இதனால் இலங்கை அரசாங்கம் தமிழ்பிரதேசங்களில் இராணுவ நடவடிக்கைகளை அதிகரித்து தமிழ்பிரதேசங்களை ஆக்கிரமித்து (தீர்வொன்றை கொடுப்பதாக இருந்தால்) பேரினவாத அக்கறைகளுடன் சமரசம் செய்து கொள்ளும் தீர்வு திட்டமொன்று தமிழ்மக்கள் மீது திணிக்கக் கூடிய பலமான நிலையில் இருக்கிறது.

இந்நிலைமையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் அக்கறை கொண்டுள்ளவர்கள் யதார்த்தத்தை கண்டு குழப்பி விடாமல் நிதானமான வழிவகைகளை தேடவேண்டும்.

திம்பு பேச்சுவார்த்தையின் போது இருந்த நிலைமையை விட தமிழ்மக்களின் போராட்டம் பலவீனப்பட்டதாகவே இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனால் போராட்டத்தின் பலவீனப்பட்ட நிலைமை காரணமாக எதனையாவது தீர்வு திட்டமாக ஏற்றுக்கொள்ளமுடியும். போராட்டத்தின் பலவீனத்திலிருந்து தீர்வு திட்டத்தின் தன்மையை அணுகும் பேரினவாத போக்கிற்கு தமிழ்த் தலைமைகளோ, தமிழ்மக்களோ அடிமையாகி விடக்கூடாது. திம்பு பேச்சு வார்த்தையின் போக்கிற்கு அபிலாஷைகளை விட தற்போது தமிழ்மக்களின் அபிலாஷைகள் குறைந்து இருப்பதற்காகவோ, அல்லது அன்றைய நிலையிலேயே இருப்பதாகவோ கொள்ளப்படலாகாது.

திம்பு இணக்கப்பாடு எவ்வாறு இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் குறைத்து வரையப்பட்டன என்பதுவும், மாகாணசபை திட்டத்தில் எப்படி இலங்கை – இந்திய ஒப்பந்த அடிப்படைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதுவும் மாகாணசபை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட பேரினவாத சிக்கல்களின் தன்மைகள் எவ்வாறானவை என்பதுவும் கணக்கில் எடுக்கப்படவேண்டும். அதாவது போராட்டங்களின் விளைவால் கிடைக்கின்ற நிவாரணங்கள் எவ்வாறு அர்த்தமற்றவை ஆக்கப்பட்டன என்பதிலிருந்தும் பாடங்களைக் கற்கவேண்டும்.

இவற்றின் அடிப்படையில் தமிழ்மக்களின் தீர்வுத் திட்டத்தை முன் வைக்க வேண்டும். அந்த வகையில் பார்க்கின்றபோது திம்பு இணக்கப்பாட்டையோ, அதற்கு குறைவானதையோ தீர்வுத் திட்டயோசனைகளாக தமிழ்மக்கள் சார்பில் முன்வைக்கப்படமுடியாது. நிச்சயமாக திம்பு இணக்கப்பாடுகளை விட வளர்ச்சியானதாகவே இருக்க வேண்டும். அதாவது பௌத்த சிங்கள பேரினவாத வளர்ச்சியின் அபாயங்களை சரியாக மதிப்பிட்டே தமிழ்மக்களின் தேசிய அபிலாஷைகளை நிலைநாட்டுவது பற்றிய தீர்வுத் திட்டங்களை முன்வைக்க வேண்டும். அதற்கு தமிழ் தலைமைகளிடையே ஒரு முனைப்பட்ட உடன்பாடு ஏற்படவேண்டும்.

வெளிநாட்டு தலைமீட்டிற்கான அடிப்படைகள் ஏற்பட்டுள்ள வேளையில் தமிழ்மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அடிப்படைகள் அடங்கிய தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படுவது அவசியம். இன்று அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள சடடவரைவுகள் கூட பாராளுமன்ற தெரிவுக்குழுவில் உயிரற்றதாக்கப் படுவதையே (சட்டவரைவுகள் மிகவும் முற்போக் கிலானவை அல்ல) காணமுடிகின்றது.

தீர்வுத் திட்டம் என்பது அடிப்படையில் தமிழ்மக்களின் தேசிய அபிலாஷைகளையும் இறைமையையும் உத்தரவாதப்படுத்தும் வகையிலே அமையவேண்டும். ஏலவே திம்புவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் தர்க்கரீதியான பண்புரீதியாக மாற்றத்துடன் வெளிப்படவேண்டும்.

மேற்கூறப்பட்ட நிலைமைகளை விட இனப்பிரச்சனை என்பது வடக்குகிழக்கு வாழ் தமிழ்மக்களினதாக மட்டும் விளங்கிக்கொள்ளலாகாது. இனப்பிரச்சினை தீர்வு என்பது இன்று வடக்கு கிழக்கு தமிழ்மக்கள், முஸ்லீம் மக்கள், மலையக மக்கள் வடக்குகிழக்கிற்கு வெளியில் வாழும் தமிழ்மக்கள், வடக்கு கிழக்கில் வாழும் சிங்களமக்கள் என்போரை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

இவற்றையெல்லாம் மறந்து அல்லது மறைத்து பழைய பேச்சுவார்த்தைகள் போன்று இனப்பிரச்சனை தீர்வை நாளாந்த நிகழ்ச்சி நிரல் வகையினத்துக்குள் முடக்குவதாயின் பழைய பல்லவிகள் பழைய ஒப்பாரிகள் என்ற நிலைக்கு அரசாங்கம் செல்வதாயின் (செல்கிறது) தமிழ் தரப்பு எவ்வாறு அவற்றை முகம் கொடுப்பது என்பதை சரியாக விளங்கிக் கொள்ளவேண்டும் அதைவிடுத்து இருக்கும் நிலைமைகளுக்கு ஏற்ப பேரினவாதத்திற்கு இசைவாக நடந்து கொள்வதை அரசியல் இராஜதந்திரமாக காட்டமுற்படுவது அரசியல் சூனியமாகும்.

பொதுவாக தமிழ்மக்களுக்கு பிரச்சனை இருப்பதாக ஏற்றுக்கொள்வதும் மறுகணமே அப்படி பிரச்சனைகள் எதுவும் இல்லையென்று கூறுவதும் இலங்கை அரசாங்கங்களினதும், ஐ.தே கட்சி சுதந்திரக்கட்சி தலைமைகளினதும் வழமையான நடைமுறையாகும். தமிழ்மக்களின் பிரச்சனை என்பது தேசிய இனப்பிரச்சனை என்று கூறுவதும் பின்னர் தேசிய இனப்பிரச்சனை என்று கூறுவதும் பின்னர் அது ஒரு பயங்கரவாதப் பிரச்சனை என அறைந்து கூறுவதும் நாளாந்த நடைமுறையாகி விட்டதை அசட்டை செய்யமுடியாது

இவற்றின் தொடர்ச்சியாக மாறிமாறி அரசியல் திருப்பங்கள் நெருக்கடிகள் ஏற்படும்போது சமாதான முயற்சிகள் யுத்தநிறுத்தம், ஒப்பந்தங்கள் போன்றன சர்வசாதாரண நிகழ்ச்சிகளாகி வருவதையும் வரலாறு எடுத்தியம்புகிறது.

இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்து இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக முழு இலங்கைக்கென அடிப்படைக் கொள்கைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்

1. இலங்கை ஒரு மதச்சார்பற்ற ஒரு இனச்சார்பற்ற, தேசிய

→8

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடந்த மேமாதம் 29ந்திகதி ஆரம்பித்து மூன்று நாட்களுக்கு மேலாகத் தொடர்ந்த மின்சார சபை ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக இலங்கையின் தென், கிழக்குப் பிராந்தியங்கள் முழுவதும் ஸ்தம்பித நிலையினை அடைந்தன. குறிப்பாகக் கொழும்பு மாநகரத்தில் மக்கள் சொல்லொணா அசௌகரியங்களை அனுபவிக்க வேண்டியதாயிற்று. எங்கும் எரிபொருள் தட்டுப்பாடு. குடிப்பதற்கே தண்ணீர் தேடியலைந்தவர்கள் எத்தனையோபேர். அலுவலகங்கள், பாடசாலைகளையெல்லாம் இழுத்து மூடவேண்டியதாயிற்று. தொழிலகங்கள் தம் வருமானத்தில் கோடிக்கணக்கான ரூபாய்களை இழந்தன. இலங்கையின் கோழி, மீன், பால், உணவுத்துறைகளில் இதனால் ஏற்பட்ட நட்டங்களை ஈடு செய்ய இன்னும் பல மாதங்கள் எடுக்கலாம் என சந்தை அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வளவு அழிவுகளும் சிரமங்களும் இருந்தாலும்கூட, இந்த வேலைநிறுத்தம் தாராள பொருளாதாரக் கொள்கைகள் பற்றியும், தனியார் மயமாக்கல் பற்றியும் விவாதங்களை மக்கள் மத்தியில் கிளப்பி ஒரு நன்மையைச் செய்திருக்கின்றது என்றே கூறவேண்டும். ரூ. 400 கோடி பெறுமதியுள்ள, வருடாந்தம் ரூ. 30 கோடி இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனத்தினை தனியொரு முதலீட்டாளருக்கு ரூ.120 கோடிக்கு அரசு விற்பனை செய்ய முடியுமா என்பது சர்ச்சைக்குரிய விடயம். அதிலும், இந்நிறுவனம் நாட்டின் தொழிற்துறையினதும் ஏனைய துறைகளினதும், மூலநாடியாகவுள்ளது. இந்தத் தருணத்தில், லங்கா மின்சார கம்பெனி தனியார் மயப்படுத்தப்பட வேண்டுமா கூடாதா என்ற விவாதத்தினை விட்டு சிறிது அப்பால் சென்று பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் நிலைப்பாட்டினைச் சற்று நோக்குதல் அவசியம்.

1994ம் ஆண்டு பொதுத்தேர்தலின்போது அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைக்கு எதிரான மாற்றுத்திட்டம் ஒன்றினை மக்கள் முன்வைக்கவேண்டிய தேவை அப்போது போட்டியிட்ட பொ.ஐ.முன்னணியைச் சார்ந்த கட்சிகளுக்கு ஏற்பட்டது. சர்வதேச ரீதியில் மையத்திட்ட பொருளாதாரக் கருத்தியலுக்குக் கண்கூடாக ஏற்பட்ட தோல்விகளும், தாராள பொருளாதாரக் கொள்கையின் நடைமுறைப்படுத்தலால் நன்மை பெற்ற வர்க்கங்களும், பல்வேறு குழுக்களும் உள்நாட்டில் ஸ்திரம் கொண்டிருந்தமையும் ஒருங்கு சேர்ந்து எதிர்க்கட்சிகளுக்கு தாராள பொருளாதாரக் கொள்கைகளை ஒடுக்கும் துணிவினைக் கொடுக்கவில்லை. ஆயினும், மனிதாபிமான உருவுடனான திறந்த பொருளாதாரம்' என்ற கோஷத்தை அவர்கள் முன்வைத்தனர். வறிய மக்களைப் பாதிக்காத, நாட்டின் செல்வங்களை அந்நியருக்குத் தாரை வார்க்காத பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்துவோம் என்று சூளுரைத்தனர். சந்திரிகா குமாரணதுங்க 62.5 வீத வாக்குகளினால் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் முதன் முதலாகப் பேசும் போது ''முதல் முக்கியமாக எமது பொருளாதாரக் கொள்கைகளுக்காகவே மக்கள் பொ.ஐ.மு. அரசாங்கத்தினைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.'' எனப் பறைசாற்றினார் இன்று இரண்டு வருடங்களின் பின் இந்த அரசின் பொருளாதாரக்கொள்கைகள் என்னவாக இருக்கலாம் என டக் - டிக் - டுக் - போட்டுத்திண்டாடிக் கொண்டிருக்கின்றனர் மக்கள்.

தெளிந்த முறையிலும் ஆக்கபூர்வமாகவும் இவ்வரசாங்கத்தின் கொள்கை வகுத்தல் நெறியினை விமர்சனம் செய்யவேண்டுமாயின் லங்கா மின் கம்பெனியின் தனியார் மயமாக்கல் நடவடிக்கையினையே எடுத்துக்கொள்ளலாம். இங்கு, மின் உற்பத்தியினைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு வருமானம் ஈட்டும் நடவடிக்கையான அதன் விநியோகத்தினை மட்டும் தனியார் கைகளுக்குக் கொடுக்க எத்தனிக்கிறது அரசு. எந்த அடிப்படையில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது என்பதே முதற்கேள்வி. தனது செயற்பாட்டுக்குக் கீழ் இயங்கும் நிறுவனங்கள் அனைத்தையும் ஆய்ந்து, செயற்திறன் காட்டாது நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை நிரற்படுத்தி பகிரங்கமாக மக்கள் முன் சமர்ப்பித்து அதேவகையில் தானா ஒவ்வொன்றாக விற்கத்தொடங்கியது? மக்களுக்கு இன்றியமையாத அத்தியாவசிய தேவைகளை தனியார் மயப்படுத்தும் போது தனியொரு முதலீட்டாளரின் ஆதிக்கத்திற்குட்படுத்தாது (Creating a monopoly) ஒன்றுக்கு மேற்பட்ட முதலீட்டாளர்கள் மத்தியில் பகிர வேண்டிய தேவை பற்றிய கொள்கை வகுக்கப்பட்டதா? தனியார் மயப்படுத்தலின் பின் அக்கம்பெனிகள் வரையறையில்லாது தமது சேவைகளின் விலைகளை அதிகரிப்பதைத் தடுக்கவும், தரம் குறைந்த சேவைகளை வழங்குவதைத் தடுக்கவும் சகல அதிகாரங்களும் பொருந்திய ஒரு ஒழுங்குச் சபையினை நிர்மாணிப்பதைப்பற்றிப் பேசப்பட்டதா? இக்கம்பெனிகளின் நடவடிக்கைகளை மேலும் தட்டிக்கேட்கு முகமாக சிவில் சமூகத்தில் ஒரு நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் வேரூன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா?

மனித முகத்துடனான திறந்த பொருளாதாரம்

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை நீக்கம்

ஊழலற்ற திறந்த ஆட்சி

வெளிப்பாட்டுச் சுதந்திரம்

**இலங்கை மக்களின் மேல் கட்டவிழ்க்கப்பட்ட இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய பித்தலாட்டம்!**

தனியார் மயமாக்கலுக்கு செயற்திறன் அதிகரிப்பு முக்கிய காரணமென்று கருதப்படுகின்றது? நாட்டுக்குப் போதுமான அளவு மின் உற்பத்தி செய்ய முடியாமல் திணறும் அரசு தனது உற்பத்தி செயற்திறனை அதிகரிக்கவல்லவா தனியார் முதலீட்டை அழைத்திருக்க வேண்டும்? இற்றைவரை போதுமான மின் உற்பத்தி செய்யப்படாத நிலையில் அதன் விநியோகத்தினை தனியார் மயப்படுத்துவது எந்தத் தர்க்கத்தில் அடங்குகின்றது என்பது புரியாத புதிராகும். இந்தியா மற்றும் பல நாடுகளில் தனியார் முதலீட்டின் மூலம் மின் உற்பத்தியினை அதிகரிக்க பல யுக்திகளை அவ்வரசுகள் கையாளுகின்றன. காற்று, சூரியவொளி போன்ற மூலவளங்களிலிருந்து மின் உற்பத்தி செய்வதற்கு பல்வேறு ஊக்குவிப்புக்களையும் அனுசரணைகளையும் வழங்குகின்றன. பாரிய தொழில் துறைகளைச் சார்ந்தவர்கள் அவர்களுக்குத் தேவையான மின்சாரத்தினை உற்பத்தி செய்யத் தூண்டப்படுகின்றனர். இவர்களின் மின் உற்பத்திக் களங்கள் அவ்வத் தொழிற்பேட்டைகளுக்குத் தொலைவில் அமைக்கப்பட வேண்டுமாயினும் கூட, அக்களங்களிலிருந்து பிரதான சுற்றோட்டத்திற்கு விநியோகிக்கப்படும் மின் அலகுகளுக்கு சமனான அலகுகள் அரசினால் இலவசமாக இத்தொழிற்பேட்டைகளுக்கு வழங்கப்படுகின்றது. உதாரணமாக தமிழ்நாட்டில் காற்றாலைப் பண்ணைகள் ஸ்தாபிக்க கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே இயலும் என்றாகில், அங்கு உற்பத்தியாகும் மின் சுற்றுவட்டாரங்களுக்குப்பயன்பட, அதன் முதலீட்டாளர் இவ்விநியோகத்திற்கு சமனான அலகுகள் மின்சாரத்தினை தமது ஆலைக்கு கோயம்புத்தூரில் பெற்றுக்கொள்ளலாம்.

பொ.ஐ.மு. அரசு இதையெல்லாம் எங்களுக்குச் செய்து காட்டவேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லை. குறைந்த பட்சம் கொள்கை ரீதியிலாவது இவற்றை ஆராய்ந்து தீர்வினை வரையறுத்தார்களா என்றே கேட்கின்றோம். எமக்கு சோஷலிஸம் தான் வேண்டாம், மனிதாபிமான உருவுடனான திறந்த பொருளாதாரக் கொள்கை போதுமென்றே வேண்டுகின்றோம். வாக்குறுதிகளை நிறைவேற்றக்கேட்கவில்லை. அவை நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் ஏதேனும் எடுக்கப்பட்டனவா என்றே கேட்கின்றோம்.

இவ்வாறாக பொ.ஐ.மு. கொடுத்த வாக்குறுதிகளின் பேரில் கேள்விகளை எழுப்பிக் கொண்டு போகும்போதுதான் இந்த அரசாங்கத்தின் தாராளவாத (Liberal) முகமூடி கிழிந்து தொங்குவதை காண முடிகின்றது.

அரசு கட்டில் ஏறியவுடன் ஜனாதிபதி ஆட்சி முறையினை ஒழிப்பேன் என்றார் சந்திரிகா. கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற என்னென்ன நடவடிக்கைகளை எடுத்தார். எங்களூரின் எந்தக் குழந்தைக்கும் தெரியும், ஐ.தே.கவின் ஆதரவின்றி ஜனாதிபதி ஆட்சி முறை மாற்றம் காணாது என்பது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பே இதற்கு ஆதரவு தர முன்வந்த ஐ.தே.கவை உதாசீனம் செய்தார் ஜனாதிபதி. ஐ.தே.க.இல்லாமலேயே இதைச்செய்து முடிக்க எனக்குத் தெரியும் என்று நேரடியாகவே காலஞ்சென்ற காமினி திசாநாயக்கவுக்கு செய்தியனுப்பினார். ஆட்சியைக் கைப்பற்றிய பின்னரோ ஐ.தே.கவினைச் சாடுவதும், கண்டனம் செய்வதும், பழிசுமத்துதலுமே தொடர்ந்தன. இதேவேளை நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையின் நீக்கல் எவ்வாறோ சமாதானத் தீர்வுடன் பின்னிப்பிணைந்து விட்டது. இன்னும் ஜனாதிபதி அமைப்பு அகன்றபாடில்லை.

''திறந்த ஆட்சி'' (Transparency) என்பதே இவர்கள் அரசு கட்டில் ஏற உபயோகித்த அடுத்த படியாகும். ஏயர்லங்கா, ஏயுர்பஸ், ஹில்டன் விடுதி, காலித்துறைமுகம், புத்தளம் சிமெந்துக் கூட்டுத்தாபனம், தொலைத்தொடர்பு அமைச்சின் கேள்விப்பத்திரம் கோரல் நடவடிக்கை போன்ற இன்னோரன்ன உடன்படிக்கைகளில் அமைச்சரவையில் நடந்த தகிடுதத்தங்கள் இன்னும் முழுமையாக வெளிவரவில்லை. ஹில்டன் விடுதி உடன்படிக்கையில் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒப்பந்தங்களில் அதனை இணைத்து விட்டார் என நீதி அமைச்சினால் பாராளுமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தும் ஏ.எஸ். ஜயவர்தனவை அமைச்சரவையின் எதிர்ப்பையும் மீறி ஜனாதிபதி மத்திய வங்கியின் ஆளுநராகப் பதவி உயர்த்தினார். போதாக்குறைக்கு புத்தளம் சிமெந்துக் கூட்டுத்தாபனம் தனியார் மயமாக்கல் தொடர்பாக வெடித்த தவக்கால் ஊழலில் ஒரு காரணகர்த்தாவாக ஜனாதிபதியின் பெயரும் அடிபட்டது. இந்த ஊழலில் தவக்கால் கம்பெனியுடன் சட்டத்திற்கு புறம்பான ஒப்பந்தங்களைப் பேரம்பேசியவர் ஏ.எஸ். ஜயவர்தன என்றும் பத்திரிகைச் செய்திகளில் பல கதைகள் வெளியாகின. இதே போன்று, தன் பிறப்புச் சான்றிதழ் பத்திரத்தில் பிறந்த திகதியை மாற்ற எத்தனித்து மோசடி செய்ய முயன்றவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தும் எட்மன்ட் ஜயசிங்கவை வெளிவிவகார அமைச்சிற்குப் பதவியுயர்த்தியது இந்த அரசு. எங்கே ஐயா திறந்த ஆட்சி.

லஞ்ச ஊழலினை ஒழிப்போம் என்ற கோஷமே பொ.ஐ.மு. நாட்டுக்கு அளித்த அடுத்த வாக்குறுதியாகும். லஞ்ச ஊழல் ஆணையாளர் நெலும் கமகே ஐ.தே.க. அரசினால் வஞ்சிக்கப்பட்ட கதை பொ.ஐ.மு.யின் தேர்தல் மேடைகளுக்கு கலகலப்பு மூட்டின. ஆனால் அவர்கள் அரசாங்கம் பதவிக்கு வந்தபின் லஞ்ச ஊழல் விசாரணைகள் எங்கோ மூலையில் முடங்கிவிட்டன. தான் பதவியேற்ற ஆரம்பகாலத்தில் குறிப்பிட்ட ஒருவர் தனக்கு ரூ.5 கோடி லஞ்சம் வழங்க முயற்சித்தார் என ஜனாதிபதியே திடுதிப்பென்று அறிவித்தார். இக்குற்றச்செயல் செய்தவர் விசாரணைகளுக்குள்ளாக்கப்படவேண்டுமென்று பல பத்திரிகைகள் வேண்டியும் சந்தேக நபரின் பெயர் கூட வெளியில் வரவில்லை. கமகே இன்று ஈயோட்டிக் கொண்டிருப்பதாகக் கேள்வி.

இவ்வாறாக வெகுஜன தொடர்பு சாதனங்களுக்கு சுதந்திரம் அளிப்பதென்றும் ஜனநாயகத்தை மீண்டும் இலங்கையில் மலரச் செய்வதென்றும் பற்பல வாக்குறுதிகள். ஐ.தே.க. ஆட்சியில் காணாதவகையில் ஈழப்போர் சம்பந்தமான முழுச் செய்திகளும் செய்தித் தணிக்கையின் கீழ் இருட்டடிக்கப்பட்டது இவர்களின் ஆட்சிக்காலத்திலேயேயாகும். பொலிஸினையும் இராணுவத்தினரையும் கொண்டு வன்முறைகளினூடாக இலங்கை மின்சாரசபை ஊழியர்களின் வேலைநிறுத்தம் முறியடிக்கப்பட்டது. நவசமசமாஜக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் கூடிய வேளையில் பொலிசின் அதிரடிப்பிரிவினர் சுற்றிவளைத்து சோதனை மேற்கொண்டுள்ளனர். இக்கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன ஐ.தே.கவின் அடக்கு முறை ஆட்சிக்காலத்தில் கூட நடவாத சம்பவம் இன்று நடந்துள்ளது என இதைப்பற்றிய கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார். பொதுத்தேர்தல் காலகட்டத்தில் பொ.ஐ.மு.யினால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளில் பிரபலமானதும் மிகமுகியமானதும் சமாதானத்தினைக்கொண்டு தரும் வாக்குறுதியாகும். இன்றோ முன்னெப்போதும் கண்டிராத வகையில் யுத்தப்பயங்கரவாதத்தில் வட- கிழக்கு நசுங்கி அழிந்து கொண்டிருக்கிறது. அரசாங்கம் பிரச்சாரம் செய்வது போல் யுத்தம் மீண்டும் ஆரம்பித்ததற்கு முழுப் பொறுப்பாளிகளும் விடுதலைப்புலிகளே என்று நாம் ஒரு பேச்சுக்காக ஏற்றுக்கொள்வோமே. இந்தத் தோல்வியை நாம் மனப்பூர்வமாக மன்னித்தாலும் மற்றத் தோல்விகளுக்கு எல்லாம் யார் மீது பழி சுமத்தப்போகின்றனர் என்று எண்ணம் இல்லாமலில்லை. அதற்கு இருக்கவே இருக்கின்றது ஐ.தே.க. பொ.ஐ.மு.வின் அங்கத்துவக் கட்சியான சமசமாஜக்கட்சி அலுவலகத்திலிருந்து கொண்டே அக்கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவரினால் வழிநடத்தப்பட்ட மின்சாரசபை ஊழியர்களின் வேலைநிறுத்தம் கூட ஐ.தே.கவின் சதித்திட்டமே என்று விளக்கியது போல எத்தனையோ கதைகள் கிடைக்காமலா போய்விடும்.

பொதுத்தேர்தலுக்கு முந்திய காலகட்டத்தில் சந்திரிகா அணியினர் உபயோகித்த ''ஜனநாயகவாத மொழி''யினைக் கேட்ட பலரும் தமது சந்தேக உள்ளுணர்வுகளையும் மீறி நம்பிக்கையின் ஒளிக்கீற்றாக இந்த அரசாங்கத்தினை எதிர்பார்த்திருந்தனர். புத்திஜீவிகள் கூட சந்திரிகா நேர்மையுடனும் விசுவாசத்துடனும் தீர்வுகளைக் காண விளைகின்றார் எனத் தீர்க்கதரிசனம் கூறினர். அந்நேரத்தில் நண்பரொருவர் மட்டும் இதைப் பற்றி கருத்து வேறுபாட்டினைக் கொண்டிருப்பதை அவதானித்தேன். குமாரதுங்கவை நட்புரீதியில் அறிந்திருந்த அவர் ''பொறுத்திருந்து பார், இலங்கை மக்களின் மேல் கட்டவிழ்க்கப்பட்ட இந்நூற்றாண்டின் மிகப் பெரிய பித்தலாட்டம் இது.'' (The Biggest hoax of the country) என்று கூறினார். இரண்டு வருடங்களின் பின்பு இன்று நான் இக்கூற்றை ஆமோதிக்கிறேன். இதே போன்று இலங்கை மக்களில் பெரும்பான்மையோருக்கு இன்று அதிருப்தியின் சலனங்கள் தோன்றியிருக்கின்றன.

இவ்வாறிருந்தும் கூட இவ்வரசாங்கத்திற்கு எதிராக அணிதிரளத் தயங்குகின்றனர் பலர். மாற்றரசாங்கம் ஐ.தே.க.வாகவே இருக்கும் என்ற நிச்சயத்தினால் இவ்வரசாங்கத்தின் பல நடவடிக்கைகளை நியாயப்படுத்தவும் முயல்கின்றனர். பொ.ஐ.மு. பாசிஸத்தை நோக்கிய பாதையில் இன்று சென்று கொண்டிருக்கிறது. மின்சார சபையின் வேலைநிறுத்தத்தினை நொருக்கிய முறைகளிலிருந்து நாம் இதனை உய்த்துணரலாம். எப்படியெனிலும் ஆளத் தகுதியுள்ள அரசாங்கமே ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொள்வதை நிச்சயப்படுத்தும் செயன்முறையே ஜனநாயகமாகும். நல்லதொரு மாற்றுக் கட்சி இல்லையென்ற காரணத்தினால் நாட்டின் நலன்களைப் புறக்கணிக்கும் ஒரு அரசினை நாம் தொடர்ந்து ஆதரித்தல் ஜனநாயகத்திற்கு புறம்பான செயலாகும். அவ்வாறு செய்வோமாகில், பண்டாரநாயக்காவின் குடியுரிமையைப் பறித்து மக்களுக்கிருந்த மாற்றுவழியினை இல்லாதொழித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அடியொற்றி சகல தேசத்தலைவர்களும் செல்லக் கூடும். ஏனெனில், உகந்த மாற்றுக்கட்சியொன்றினை இல்லாதொழித்தலே ஆளுங்கட்சியினை ஆட்சிப்பீடத்தில் ஸ்திரப்படுத்தும் சாதனமாக அமைந்துவிடும்.



**'முதல் முக்கியமாக எமது பொருளாதாரக் கொள்கைகளுக்காகவே மக்கள் பொ.ஐ.மு அரசாங்கத்தினைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்'**

ஜனநாயக முறையானது தம்மீது பாரிய பொறுப்புக்களை சுமத்தியிருக்கும் மக்களுக்கு அரசாங்கம் வகை சொல்லும் நடவடிக்கையாகும். வகை சொல்லி முடியும் கட்டத்தில் அவ்வரசாங்கத்தினை மக்கள் கணிக்கும் நடவடிக்கையே தேர்தல் ஆகும். ஒரு அரசாங்கம் வாக்குகளின் சக்தியினால் கவிழ்க்கப்படும் செயலானது ஆட்சிப்பீடத்தில் ஏறும் மாற்றுக்கட்சிக்கு எச்சரிக்கையாகின்றது. அந்தக் கட்சியும் தவறிழைக்கும் பட்சத்தில் மக்களால் மீண்டும் மீண்டும் தூக்கியெறியப்படும். இவ்வகையில் மக்கள் விட்டுத்தராது தம் உரிமைகளைப் பிரயோகிப்பதனாலேயே அரசு முறையில் சீர்திருத்தங்கள் கொணரப்படுகின்றன. சமூக சட்ட முறைமைகள் பண்படுத்தப்படுகின்றன. இதை விடுத்து அரசியல் கானல் நீரான பொ.ஐ.மு. அரசாங்கத்தின் நியாயவாதிகளாகத் தொடர்ந்தும் செயற்படுபவர்கள் வரலாற்றுப்போக்கில் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் மக்களால் புறக்கணிக்கப்படுவார்கள் என்பது திண்ணம்.

-அநுஷா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





மலையகம்:

# இளம் கர்ப்பிணிப் பெண் கொலை! பின்னணியில் சாதிவெறி?

**"பத்தனை திம்புள்ள தோட்டத்தைச் சேர்ந்த 20 வயது இளம் பெண் தனது கணவனால் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டுள்ளாள். கொல்லப்பட்ட போது இவள் 5 மாத கர்ப்பிணி"**

வீரகேசரி செய்தி-

இச்சம்பவத்தின்பின்னணியாக இருந்தது மலையகத்தில் நீறுபூத்த நெருப்பாக தருணம் பார்த்து குமுறக் காத்திருக்கும் சாதித் திமிர்தான். 20 வயது நிரம்பிய 5 மாத கர்ப்பிணியான சரஸ்வதியை கண்டிப்பகுதி தோட்டமொன்றில்இருந்து கூட்டிவந்து காதல்மணம் புரிந்த கணவன் தனது பெற்றோரின் தொந்தரவுகள் தாங்க முடியாமல் அவளை திம்புள்ள காட்டில் கூட்டிப்போய் அடித்துக் கொன்று எரித்ததாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

பெண் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவள் என்பதால் குடும்பத்தவரதும், சமூகத்தவரதும் அவமானம், அவலம் அவனை கொலைகாரனாக மாற்றியதா? அவளை பலியாடாக்கியதா? என்றால் மலையகத்தின் எழுதப்படாத உடன்பாடாகப் பின்பற்றப்பட்டு வரும் சாதிய ஒழுங்குகளும் சம்பிரதாயங்களும் மட்டுமல்ல புதியன போலத் தோன்றி புரையோடிப் போயிருக்கும் சாதியமைப்புக்கு அமைப்புவடிவம் கொடுத்து வருகின்ற கனவான்களும், சிந்தனையாளர்களும், அரசியல் தலைவர்களும், நிறுவனங்களும், அந்த சமூக கட்டமைப்பும், அதன் கருத்தியலும் சித்தாந்தமும் கூட அதன்காரணகர்த்தாவாக இருப்பதைக் காணலாம்.

மலையக தமிழ் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் 80 சதவீதத்திற்கும் அதிகமானவர்களாக இருந்த போதும் அவர்கள் மீதான அரசியல் சமூக கட்டுப்பாட்டை ஆதிக்க சாதியினர்களும், அதிகாரம் படைத்தவர்களும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற நிலையில் ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியல் வாழ்வும் சமூக இருப்பும் மேட்டுக்குடி ஆதிக்க சக்திகளின்விலைபொருளாகக்கணிக்கப்பட்டு வரும் நிலையில் மலையக சமூகத்தின் சாதி அமைப்பானது தளம்பளற்ற நிலையில் பேணப்பட்டுவந்திருக்கின்றது.

தென்னிந்திய கிராமங்களில் இருந்து குடியமர்த்தப்பட்ட சமூக அமைப்பு அப்படியே பிரதியீடு செய்யப்பட்ட நிலையில் இற்றைவரை எவ்விதமான பாரிய மாற்றமும் இன்றி இது இருந்துவருகின்றது.

இலங்கையின் வடகிழக்கு மாகாணத்தைப்போலவோ, தமிழகத்தைப் போலவோ மதம் கொண்ட சாதிவெறி மலையகத்தில்குடியேறியிருக்கவில்லை என்ற போதும் இனிவரும் நாட்கள் அவ்வாறு இருக்கப்போவதில்லை எனக்கருத இடமிருக்கின்றது.

மலையக தமிழ் சமூகத்தை நோக்கிய டசின்கணக்கான சாதியச்சங்கங்கள் தோற்றம்பெற்றுள்ள நிலையில்அவற்றின் அமைப்பு வடிவமும் சித்தாந்தமும்தமது சாதியினர் உயர்ந்தவர்கள். தமது குலமரபுப்பண்பாடு எல்லாவற்றையும் விட உயர்ந்தது. தம் சாதியினர் ஏனைய சாதியினரால் மலினப்படுத்தப்படுகின்றனர் என்ற உணர்வுகளின் வெளிப்பாடாகவும் நாட்டின் வர்த்தக மற்றும் அரசியல் தளங்களில் ஏற்பட்ட தளம்பல்கள் அதில்இருந்து தப்பிப் பிழைக்க எவ்வித அரசியல், பொருளாதார, சமூக விஞ்ஞானகண்ணோட்டமும் இல்லாதவர்கள் சாதித்துவத்தை தம் ஊன்றுகோலாக கையில் எடுத்திருக்கின்றனர்.

அடுத்தடுத்து நிகழ்ந்த வன்முறைகள், அதனோடு சேர்ந்துமலையக தமிழ் சமூகத்திற்கும் தலைமைத்துவத்திற்கும் ஏற்பட்ட பின்னடைவுகள், அரசியல் தளத்தில் பரந்துபட்ட மலையக தமிழ் மக்களுக்கு வாக்குரிமையும், பிரஜாவுரிமையும் வென்றெடுக்கப்பட்டமை என்பனவற்றின் விளைபயனாக சாதியம் ஒரு சக்திமிக்க உணர்வுபூர்வமான ஆயுதமாக பயன்படுத்தப்பட்டு வ்ருகின்றது.

தேர்தல்களின் போது பகிரங்கமாகவே சாதியைக்கூறி வாக்கு கேட்கும் ஒருபாரம்பரியம் மலையகத்தில் தோன்றியிருக்கிறது. சாதியை உயர்த்தியும், தாழ்த்தியும் அனாமதேயப் பிரசுரங்கள் மலையகமெங்கும் வலம் வருகின்றன. சாதிச்சங்கங்களும் தமது பிரச்சாரத்தையும், இயக்கத்தையும் தோட்டங்களுக்குள் கொண்டு செல்ல பிரயத்தனம் எடுத்து வருகின்றன. இவற்றிடையே அரசியல் தளத்திலும் பொருளாதாரத் தளத்திலும் கடும் போட்டி எழுந்திருக்கின்றது.

தமிழ்ச் சமூகத்தின் வெட்கங்கெட்ட சாதிமுறையில் இக்கருத்தியல் சாதனத்தை ஆயுதமாகக் கொண்டு அதிகார வகுப்பினராகத் திகழ்ந்துவரும் வேளாளர்கள் 1980களில் தோற்றுவித்த 'ஆறுநாட்டு வேளாளர் சங்கம்' கொழும்பு நகரை மையமாகக் கொண்டியங்கும் இந்திய வம்சாவளி வேளாள முதலாளிகளின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்டது. இச்சங்கம் பெரும் தனவந்தர்களின் தலைமையில் ஏனைய சாதிகளைச் சேர்ந்தோர் மீதான மேலாட்சியை நிலைநாட்ட கடுமையான பிரயத்தனம் செய்கின்றது. இதற்குப் போட்டியாக 'முக்குலத்தோர் சங்கம்', 'இலங்கை இந்திய ஒடுக்கப்பட்ட சமுதாய பேரவை', 'அகம்படியார்சங்கம்' என ஒரு டசினுக்கும் மேற்பட்ட சாதிச் சங்கங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இவை அரசியல், கல்வி, வேலைவாய்ப்பு போன்ற துறைகளில் தத்தமது சாதியினரை முன்னிலைப்படுத்தும் எத்தனத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இச்சங்கங்களில் 'இலங்கை - இந்திய ஒடுக்கப்பட்டோர் சமுதாய பேரவை' முற்போக்கான அமைப்பாக இருந்தது. அதன் சாராம்சத்தில் அம்பேத்கார், தலித்திய இயக்கம் என்பவற்றின் சிந்தனைகளை உள்ளடக்கியிருந்தது. எனினும் தன் செயற்பாடுகளில் குறித்த சில சாதிகளின் மேலாட்சி வெளிப்பட்டமையாலும் வர்க்கரீதியான ஒடுக்குமுறைக்குள்ளானோர் இணைக்கப்படாமையினாலும் இவ்வியக்கம் வளர்ச்சியுற முடியவில்லை. இவ்வமைப்பை கட்டுவதில் மலையகத்தின் சில தொழிற்சங்கவாதிகள், தொண்டர் ஸ்தாபனத்தினர் ஆகியோர் முன்னின்றனர். இவ்வமைப்பு, அரசியல், சித்தாந்தத் தளங்களில் எவ்வித முன்னேற்றகரமான கோட்பாட்டையும் முன்வைக்கவில்லை.

ஏனைய சாதிச்சங்கங்கள் அகமண முறையை வலியுறுத்தல், சாதிரீதியான உணர்வை வளர்த்தல், சாதிய மேலாட்சியை நிலைநாட்டுதல், கல்வி, வேலை வாய்ப்பு, அரசியல் தளங்களில் போட்டியிடக்கூடிய நிலையை உருவாக்குதல். என்பவற்றின் மூலம் அவ்வச் சாதியினரின் தனவந்தர்களின் மேலாட்சிக்குத் தக்கதாகவும் அவர்களின் நலன்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காகவும் கட்டமைக்கப்படுகின்றன.

மலையகத் தோட்டங்களில் பிரதியிடப்பட்டுள்ள சாதிவாரியான தமிழக கிராமிய கட்டமைப்பில், அனைத்து சாதியினரும் தொழிலாளர்களாக ஒரே வர்க்கத்தினராக இருந்த போதும் ஓரளவுக்கு இறுக்கமான சாதிக்கட்டுப்பாடு பின்பற்றப்பட்டு வருகின்றது. இந்நிலையில் நகர்புற முதலாளிகளின் நலன்களுக்காக உருவாக்கப்பட்ட சாதிச் சங்கங்கள் தோட்டங்களில் பரவத் தொடங்கி இருக்கின்றன. தோட்டங்களை சூழவுள்ள சிறு நகரங்களில் தொடர்புமையங்கள் உருவாக்கப்படுகின்றன. இவற்றில் சில அமைப்புகள் சனத்தொகை மதிப்பீடுகள் நடாத்தி அவர்களின் அரசியல் பலம், வாக்குபலம் குறித்து ஆராய்ந்து வருகின்றன. இவற்றுக்கு கல்விகற்ற அதிபர்கள், ஆசிரியர்கள், புல்கலைக் கழகப்பேராசிரியர்களும், மாணவர்களும் உடந்தையாக இருக்கின்றனர்.

இவ்வாறான சாதியத்தின் புதிய பரிமாணம் தான் திம்புள்ள இலட்சுமிக்கு நேர்ந்தது போன்ற கொடுமைகளை மலையகமெங்கும் விதைக்கப் போகின்றன.

'ஆறுநாட்டு வேளாளர் திருமண முறைகள்' குறித்து அண்மையில் வெளியிடப்பட்ட ஒரு நூல் நுணுக்கமாக குலகோத்திர மரபுகளையும் அகமண முறைகளையும் விவரித்திருக்கின்றது. ஆறுநாட்டு வேளாளர் தசாப்தவிழாமலர் தென் இந்திய வேளாளர் சாதியின் தோற்றம், அதன் வரலாறு மற்றும் சான்றுகளுடன் மிகப்பெரியளவில் வெளியிடப்பட்டுள்ளது. வேளாள, புத்திஜீவிகள், கல்வியாளர்கள் குறித்தும் விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இலங்கையின் வேளாள பெரியகங்காணிகளின்பட்டியல் தொகுக்கப்பட்டுள்ளது. இதற்குப் பின்புலமாக கொழும்பின் பிரபல கல்லூரிகளின் வேளாள ஆசிரியர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் இருந்திருக்கின்றார்கள்.

இவ்வாறான பின்புலத்தில் ''சாதியம்'' மலையக மக்களின் விடுதலைக்கான தடைக்கல்லாக வளரும் சாத்தியமிருக்கின்றது. மலையக அரசியல் தொழிற்சங்க இயக்கங்களும் சாதியம் சார்பான தலைமையையும், கட்டமைப்பையும் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வளர்ச்சிப்போக்கை சமூகமாற்றம், தேசிய விடுதலை குறித்து சிந்திக்கும் சகல புரட்சிகர அரசியல் சக்திகளும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதனை எவரும் மேல்கட்டுமானத்தின்பகுதி என்றும் அதன் பரிமாணம் குறைவானதென்றும் அலட்சியப்படுத்தமுடியாது. இந்தியப் பொதுவுடமை இயக்கங்களில் வர்க்கத்தை மீறிய சாதிய தன்மை ஒரு சமூக யதார்த்தமாக இருப்பதை கவனிக்கத்தவறியமையால் அதன் அடித்தளம் நிலையற்றதாய் இருக்கிறது.

வெறும் பொருளாதாரவாத வரட்டு சூத்திரங்களுக்கு அப்பால் நாம் சாதியத்தின் பரிமாணம் அதன் கருத்தியல் ஆதிக்கம், சாதிவர்க்க உறவுநிலை, என்பன குறித்து விரிவான விழிப்புணர்வை பெறுவது அவசியமானதாகும்.

-நந்தன்-

## வரலாற்றுப்...

இனங்களின் அல்லது தேசங்களின் கூட்டமைப்பாகும் (Confedera-tion) என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்

2. இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையக தேசிய இனங்கள் அல்லது தேசியங்கள் இருக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

3. இலங்கையின் வடக்கு கிழக்கை தமிழ்மக்களினதும் முஸ்லிம்கள் வாழும் பகுதியை அவர்களினதும் மலையகமக்கள் செறிந்து வாழும் பகுதிகளை அவர்களினதும் சிங்கள வாழும் ஏனைய பகுதிகளையும் அவர்களினதும் பாரம்பரிய பிரதேசங்களாக ஏற்றுக் கொள்ளவேண்டும்

4. இலங்கை நாடெங்கும் சிங்களம், தமிழ் என்பவற்றை தேசிய மொழிகளாகவும் சிங்களம், தமிழ் ஆங்கிலம் என்பவற்றை ஆட்சி மொழிகளாகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

5. மக்கள் எந்தெந்த மத அடையாளங்களை பேண விரும்புகிறார்களோ அதனைப் பாதுகாக்கும் ஏற்பாடுகள் செய்யப்படுவதை உறுதிப்படுத்தி இருக்க வேண்டும்.

6. சமயப்பாகுபாடு, இனப் பாகுபாடு, இனவன்முறை, சமயவன்முறை என்பவற்றையும் மேற்படி பந்தி 1 தொடக்கம் 5 வரையுள்ள விடயங்களுக்கு மாறாக நடந்து கொள்வதையும் அரசியலமைப்பு குற்றங்களாக்கவேண்டும்.

மேற்படி அடிப்படைக்கொள்கைகளை இலங்கை அரசியலமைப்பின் அடிப்படைகளாக இயற்ற வேண்டும்.

இவற்றின் அடிப்படையில் எல்லா தேசிய இனங்களின் அரசியல் பொருளாதார பண்பாடு சமூக உரிமைகளை உறுதி செய்யும் வகையில் மத்தியில் பொறுப்புக்கள் தேசிய இனங்களின் பிரதிநிதிகளிடம் பிரித்தளிக்கப்பட வேண்டும். பாராளுமன்றம், செனற்சபை அமைச்சரவை என்பவற்றில் தேசிய இனங்களின் பிரதிநிதித்துவத்தையும் பங்களிப்பையும் உறுதிசெய்ய வேண்டும்.

இதைவிட தேசியங்கள் அல்லது தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிசெய்யும் வகையில் அவற்றின் பிரதேசங்களில் அவற்றுக்கென பிரதேசரீதியான ஆட்சி முறைமைகளை ஏற்படுத்த வேண்டும். அவை சுயமாக இயங்குவதுடன் அவற்றின் கூட்டிணைவை நிச்சயப்படுத்தி உறுதிசெய்ய கட்டுப்பாடுகளையும் திட்டங்களையும் வகுக்க வேண்டும்.

இங்கு முன்வைக்கப்பட்ட விடயங்கள் உயர்ந்த பட்ச விடயங்களாகவும் இவை நடைமுறை சாத்தியமற்றதாகவும் ஒதுக்கிவிடாமல் இவற்றை வெளித் தலையீட்டுடன் எவ்வாறு எய்துவது என்பது பற்றியும் நடைமுறை சாத்தியமாக்குவதற்கான வழிமுறைகள் பற்றியும் சிந்திக்கவேண்டும்.

## 'நியாயப்படுத்த முடியாத அவசரகாலச் சட்டங்கள்"

-வாசு

''லங்கா சமசமாஜக் கட்சி அவசரகாலச் சட்டத்திற்கு இனிமேல் ஆதரவளிக்கப்போவதில்லை என்பதை ஏற்கெனவே நாம் ஜனாதிபதிக்கு அறிவித்து விட்டோம். மூன்று அவசரகாலச் சட்ட விவாதங்களுக்கு முன்னர் நான்கூட இது தொடர்பாக பாராளுமன்றத்தில் அறிக்கையொன்றை விடுத்திருக்கிறேன். அவசரகாலச் சட்டம் நியாயப்படுத்தப்பட முடியாத ஒன்று என்பதால், நாம் அதை ஆதரிக்க முடியாது. ஜனாதிபதி தான் தனது முடிவை மாற்ற வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார் வாசுதேவ நாயணயக்கார எம்.பி.அவர்கள்.

கடந்த 6ம்திகதி நடைபெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு மீதான வாக்கெடுப்பின் போது. அதை எதிர்த்து வாக்களித்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் அபிப்பிராயம் தெரிவிக்கும் போதே வாசு அவர்கள்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த இலங்கை மின்சார சபை ஊழியர்களது வேலை நிறுத்தத்தை தமது கட்சி ஆதரித்தது என்றும் அவ்வாறு ஆதரித்தற்கான காரணம் என்னவென்றால், இப்படி ஒரு வேலைநிறுத்தம் நடந்திராவிட்டால் இலங்கை மின்சார சபையை தனியார் மயமாக்கும் LECO ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்திருக்கும் என்றும், வாசு அவர்கள் குறிப்பிட்டார்.

பொ.ஐ.மு. அரசாங்கத்தின் வாக்குறுதிகளுக்கு முரணான நடவடிக்கைகளை குறிப்பாக தனியார் மயமாக்கல் நடவடிக்கைகளை ல.ச.ச.க. எதிர்க்கத் தொடங்கியிருப்பது அரசாங்கத்துள் பலத்த சலசலப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரியவருகிறது. இதற்காக ல.ச.ச.க. மீது நடவடிக்கை எடுக்கப்படக் கூடும் எனவும் பேசப்படுகிறது.

எவ்வாறாயினும் ஜனாதிபதியால் ல.ச.ச.க. வின் அமைச்சர் பதவிகளைப் பறிக்கமுடியுமே ஒழிய அதை பொ.ஐ.மு. விலிருந்து வெளியேற்றமுடியாது என்றும், ஏனென்றால், அதற்கு பொ.ஐ.மு. னுள் 2/3 பெரும்பான்மை வாக்குகள் அவசியம் என்றும் அரசியல் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ் முஸ்லிம்களின் தலைவிதியை நிர்ணயிக்க வேண்டியவர்கள் யாழ் முஸ்லிம்களே!

*யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் சார்பில் ஐவர் ஒப்பமிட்டு அனுப்பிய கடிதம் இது!*

யாழ் மாவட்டம் சூரியக்கதிர் -2 இராணுவ நடவடிக்கை மூலம் மீட்கப்பட்டு அங்கிருந்து வெளியேறிய தமிழ் மக்கள் மீண்டும் தத்தமது பகுதிகளில் மீளக்குடியேற்றப்படுவதாகக் கேள்விப்படுகிறோம். அங்கு புனர்நிர்மாண வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்படப் போவதாக அரசு அறிவித்துள்ளதையும் பத்திரிகைகள் தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலமாக அறிகிறோம்.

இவ்வேளையில் தென்னிலங்கையிலுள்ள சில அரசியல் கட்சிகளும், சில முஸ்லிம் அமைப்புக்களும் யாழ் முஸ்லிம்களின் மீள் குடியேற்றம், முஸ்லிம் பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்நிர்மாண வேலைகள், தூதுக்குழுசெல்ல வேண்டி அவசியம் போன்ற விடயங்களைப் பற்றி அண்மைக் காலங்களில் பத்திரிகைகள் மூலம் அறிக்கைகள் வெளியிடுவதை காணக்கூடியதாக உள்ளது. இவற்றில் சில வரவேற்கக் கூடியனவாகவும் இன்னும் சில யாழ் முஸ்லிம் - தமிழர் ஐக்கியத்தை சீர்குலைக்கக் கூடியனவாகவும் அமைந்துள்ளமை வேதனைக்குரியது. இவ்விதமாக அறிக்கைகள் விடுபவர்களை மிகத் தயவாகவும் அன்பாகவும் நாம் கேட்டுக் கொள்வது யாதெனில், உங்களுடைய சுயவிளம்பரங்களுக்காகவும் அரசியல் இலாபம் கருதியும் இவ்வாறான இன ஐக்கியத்தை சிதறடிக்கக் கூடிய அறிக்கைகளை விடவேண்டாம் என்பதேயாகும்.

1990ம் ஆண்டு ஒக்டோபர் 30ம்திகதி புலிகளினால் எமது வாழ்வுரிமை பறிக்கப்பட்டு சிறு வயது முதல் தேடிய தேட்டங்கள் சூறையாடப்பட்டு 2 மணி நேர அவகாசத்தில் 200/= பணத்தோடு தென்பகுதி நோக்கி வந்தபோது, பல்வேறு பகுதி மக்களும் முஸ்லிம் இயக்கங்களும் அரசு சார்பற்ற நிறுவனங்களும் குறிப்பாக சேர் அல்ஹாஜ் ஏ.டபிள்யு.எம். அமீர் தலைமையிலான ஆர்.ஆர்.ஓ. இயக்கமும் இன்னும் பல அமைப்புக்களும் எமது மக்களுக்கு பல்வேறு வகையிலும் உதவிக் கரங்களை நீட்டின. அதற்காக நாம் அவர்களுக்கு என்றென்றும் நன்றிக் கடப்பாடுடையவர்களாக இருக்கிறோம் எங்களை வெளியேற்றியமை பிழையென்று புலிகளுக்கு சுட்டிக்காட்டி, அவர்களுடன் எமக்காக வாதாடிய யாழ் தமிழ் மக்களையும், தமிழ்த் தலைவர்களையும், பத்திரிகைகளையும், கட்டுரைகள் தீட்டியவர்களையும், கவிதைகள் படைத்தவர்களையும் யாழ் பல்கலைக் கழக மனித உரிமைக்குழுவையும் நாம் மறந்து விட முடியாது.

கடந்த ஆட்சிக்காலத்தில் பாராளுமன்றத்தில் யாழ் மாவட்ட உறுப்பினர் நவரட்ணம் அவர்கள் வெளியேற்றப்பட்ட வடபகுதி முஸ்லிம் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 25,000/= ரூபா முதற் கொடுப்பனவாக கொடுக்கவேண்டும் என்று குரல் எழுப்பினாரே, அவ்வேளையில் எந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களாவது அவருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தார்களா? தற்போது பழைய ஐ.தே.க. அமைச்சர்களைக் குறைகூறுபவர்கள் கூட அப்போதைய அரசுக்குச் சாதகமாகத்தான் மௌன விரதம் அனுஷ்டித்தனர். இலங்கையில் எந்தவொரு மூலைமுடுக்கிலாவது முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டாலும் அதை நான் உலகிலுள்ள 57 முஸ்லிம் நாடுகளுக்கும் எடுத்துச் செல்வேன் என்று சூளுரைத்த முஸ்லிம் தலைவர் என்று சொல்லிக் கொள்பவர் கூட, யாழ் முஸ்லிம்கள் தங்களது உயிரையும் மானத்தையும் தவிர மற்றவை யாவற்றையும் இழந்து வந்த நேரத்தில் அப்போது பாராளுமன்றத்தில் என்ன செய்து கொண்டிருந்தார்? எந்த முஸ்லிம் நாட்டுக்கு எமது பிரச்சினையை எடுத்துச் சென்று யாழ் முஸ்லிம்களின் துயர் துடைத்தார்? காலங்காலமாக இலங்கையில் முஸ்லிம்களுக்கு இன்னல்கள் நேர்ந்தபோதெல்லாம் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தவர்களில் முக்கியமானவர்கள் தமிழ்த் தலைவர்களே என்பதை எந்த ஒரு முஸ்லிமும் மறப்பதற்கில்லை.

இலங்கையில் பல்வேறு பகுதிகளில் பெரும்பான்மை இனத்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும், கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் பற்பல இனக்கலவரங்கள் வெடித்ததை நாம் அறிவோம். ஆனால, யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் எந்த ஒரு இனக்கலவரமும் ஏற்பட்டதை எமது வாழ்நாளில் நாங்கள் சந்தித்ததில்லை சிறுபான்மையின மக்களின் உரிமைக்காகப் போராடுகிறோம் என்று கூறிக்கொள்ளும் ஒரு ஆயுதக்குழுவினரே சிறுபான்மையினரான எங்களை ஆயுதமுனையில் வெளியேற்றினார்களே தவிர யாழ் தமிழ் மக்கள் அல்லர். அதுவும் எமது உயிரும் எமது பெண்களின் மானமும் காக்கப்பட்ட நிலையிலேயே வெளியேற்றப்பட்டோம். யாழ். முஸ்லிம்கள் எவ்வாறு அங்குள்ள தமிழ் மக்களோடு அந்நியோன்யமாக, ஒருவர் சுக துக்கங்களில் மற்றவர் பங்கு கொண்டு ஒரு தாய் பெற்ற பிள்ளைகள்போல் வாழ்ந்தோம் என்பதை ஒவ்வொரு யாழ் முஸ்லிமும் - தமிழ் மகனும் நன்கறிவான். இங்கிருந்து அறிக்கைகள் விடுபவர்கள் யாழ் முஸ்லிம் - தமிழர் அந்நியோன்ய உறவுகளை புரிந்து கொள்வதற்குச் சந்தர்ப்பமில்லை. நாங்கள் வெளியேற்றப்பட்ட 90ம் ஆண்டுவரை தென்பகுதியிலுள்ள சில முஸ்லிம்களுக்கு யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் இருந்தார்களா என்பது கூடத் தெரியாது.

நாங்கள் அங்கு வாழ்ந்த காலத்தில் சகல விதமான உரிமைகளும் வழங்கப்பட்ட நிலையிலே தான் வாழ்ந்து வந்தோம். பாராளுமன்றத்தில் யாழ்ப்பாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமரர்களான ஜீ.ஜீ.பொன்னம்பலம் முஸ்லிம் எம்.பி. என்று வர்ணிக்கப்பட்ட அல்பிரட் துரையப்பா, சி.எக்ஸ். மாட்டின் ஐயா நண்பர் வி. யோகேஸ்வரன் ஆகியோரும் ஏனைய தமிழ்க் கட்சித் தலைவர்களும் எங்களது கோரிக்கைகளை தட்டிக் கழிக்காது நிறைவேற்றித் தந்தனர். சமூக ரீதியாகவோ, அரசியல் ரீதியாகவோ முஸ்லிம் மக்கள் புறக்கணிக்கப்படவில்லை. முஸ்லிம்களை சிறுபான்மையினர் என்று ஒதுக்கி விடாமல் சமமாகவே நடத்தி வந்துள்ளனர். வட்டக்கச்சி, பூநகரி, பொம்மைவெளி, காக்கைதீவு குடியேற்றத் திட்டங்கள் இவற்றிற்கு சான்றாகும். கல்வியிலோ, விளையாட்டுத் துறையிலோ, சுகாதாரம், குடிநீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளிலோ எவ்வித குறைபாட்டையும் நாங்கள் கண்டதில்லை. வடபகுதியில் உள்ள ஏனைய மக்கள் பார்த்து பொறாமை கொள்ளும் அளவிற்கு இரவு நேரங்களில் முஸ்லிம் வட்டாரம் ஜெக ஜோதியாகப் பிரகாசிக்கும். இதை இலங்கையில் ஏனைய சில நகரங்களில் கூட காணமுடியாது.

யாழ் மாவட்ட தமிழ் மக்களால் முஸ்லிம்கள் எவ்வாறு கௌரவிக்கப்பட்டோம் என்பதற்கு சில கடந்த கால நிகழ்வுகள்:

1. யாழ் மாநகரசபைக்கு 15 அங்கத்தவர்கள் சுயேட்சையாக போட்டியிட்டு இரு முஸ்லிம் அங்கத்தவர்கள் அங்கம் வகித்த மாநகரசபையில் ஒரு முஸ்லிம் அங்கத்தவர் மாநகர முதல்வராகவும், மற்றவர் உதவி முதல்வராகவும் பதவி வகித்தமை, மர்ஹூம் எம்.எம்.சுல்தான் அவர்கள் முதல்வராக வருவதற்கு வழிவகுத்தவர் கார்த்திகேசு மாஸ்டர் என்று முஸ்லிம்களால் அன்பாக அழைக்கப்பட்ட கம்யூனிஸ்ட் பிரமுகர் அமரர் மு. கார்த்திகேசு அவர்களாகும்.

இதே முதல்வர் சுல்தான் அவர்கள் கொழும்பிலே நடைபெற்ற முதல்வர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற போது அம் மாநாட்டில் சிங்களம் மட்டும் ஆட்சி மொழியாக ஆக்கப்படுவதற்கு ஆதரவாக பிரேரணை கொண்டுவந்தபோது ''தமிழ் மக்களின் பிரதிநிதியான நான் இப்பிரேரணைக்கு ஆதரவளிக்க மாட்டேன்'' எனக் கூறி வெளிநடப்புச் செய்தார். யாழ்ப்பாணம் சென்ற முதல்வருக்கு தமிழ் மக்களால் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

2. யாழ். மாவட்டத்திலுள்ள ஒரேயொரு முஸ்லிம் உப தபாலதிபர் வடமாகாண தபாலதிபர் சங்கத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

3. தமிழ் - முஸ்லிம் மக்கள் அடங்கிய 19ம் வட்டாரத்தில் மர்ஹூம் எம்.ஏ.சி. எஸ்.ஏ.காதர் அவர்கள் போட்டியின்றி மாநகரசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.


4. யாழ் மாவட்ட சபையில் இறுதி இரண்டு வருட காலத்துக்கு ஜனாப் எஸ்.எம். சுல்தான் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது.

5. ஆயிரக்கணக்கான தமிழ்க் கல்விமான்கள் அங்கம் வகித்த வடமாகாண ஆசிரியர் சங்கத்தில் ஒரு முஸ்லிம் ஆசிரியரை கல்விச் சபைச் செயலாளராக தெரிவு செய்தனர்.

6. கல்வியிலே பெயர் போன யாழ் மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தில் ஒரு முஸ்லிம் ஆசிரியர் உதைபந்தாட்ட செயலாளராகக் கடமையாற்றினார்.

இவை போன்றே இன்னும் பல நிகழ்வுகளும் தமிழ் - முஸ்லிம் ஐக்கியத்திற்கு சிகரம் வைத்தாற்போல் அமைந்துள்ளன.

தமிழர் - முஸ்லிம்கள் உறவு பேணப்பட வேண்டும் என்ற காரணத்துக்காகவே 1994ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பங்கு பற்றக்கூடாது என்று தேர்தலை



பகிஷ்கரித்தோம். யாழ் மாவட்ட வாக்காளர்களில் 1 1/2 வீதமே உள்ள முஸ்லிம்கள் தேர்தலில் போட்டியிடுவது எந்த வகையிலும் நியாயமற்ற செயலாகும். நடந்து முடிந்த பொதுத்தேர்தலின் முடிவுகளின்படி, நாங்கள் ஒரு குழு அமைத்து போட்டியிட்டிருந்தால், நிச்சயமாக 3 அங்கத்தவர்கள் பாராளுமன்றம் சென்றிருப்போம். எங்களில் அரசியல் வாதிகள் உள்ளனர். கல்விமான்கள் உள்ளனர். புத்திஜீவிகள் உள்ளனர். எங்களுக்கு யாரும் அரசியல் கற்பிக்க வேண்டியதில்லை. தமிழ் மக்கள் முற்றுமுழுதாக பங்கு பற்ற முடியாத தேர்தலில் நாங்கள் பங்குபற்றி தமிழ் மக்களின் முதுகில் குத்தி அங்கத்தவர்களாகி சந்தர்ப்பவாத அரசியல் நடத்த நாம் விரும்பவில்லை. யாழ் மாவட்ட சபையில் பிரதிநிதித்துவம் அளித்த தமிழ் மக்கள் மாகாண சபையிலோ, பாராளுமன்றத்திலோ பிரதிநிதித்துவம் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. எமது வருங்கால சந்ததியினர் தலைநிமிர்ந்து வாழ வேண்டும். தமிழர் - முஸ்லிம்கள் ஐக்கியம் தொடர்ந்தும் பேணப்படவேண்டும் என்ற காரணத்துக்காகவே நாங்கள் 94ல் தேர்தலில் ஒதுங்கியிருந்தோம்.

வடபகுதியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்களே உண்மையான அகதிநிலைக்காளானவர்கள். அதிலும் 2 மணி நேரத்தில் 200/= பணத்துடன் விரட்டப்பட்ட யாழ் முஸ்லிம்களே முதல் நிலை அகதிகள். அப்படிப்பட்டவர்களில் ஒரு சிலரைத்தவிர மற்றவர்கள் அகதி முகாம்களில் முடங்கிக் கிடக்கின்றனர். அடிப்படைத் தேவைகள் கூட பூர்த்தி செய்யப்படவில்லை. எமது சிறார்கள் மாலை நேரப் பாடசாலைகளுக்குச் செல்வதால் பூரணமான கல்வியைப் பெறமுடியாதுள்ளது. எமது இளைஞர்களுக்குரிய வேலைவாய்ப்பு புறக்கணிக்கப்படுகின்றது. இந்நிலையில் யாழ் முஸ்லிம்களுக்கான பிரதேச சபை அமைத்துக் கொடுப்பதோ கிராம சேவகர் பிரிவுகளை கூட்டிக் கொடுப்பதோ தேவையற்ற செயலாகும். யாழ் முஸ்லிம்கள் அங்கு சென்று மீளக் குடியமர்ந்த பின்னர் தேவைப்பட்டால் பேசித்தீர்மானிக்கலாம். இவ்வாறான சிக்கலான பிரச்சினைகளை முன்நிறுத்தி யாழ் முஸ்லிம்கள் மீளக் குடியேறுவதில் தடங்கல்களை ஏற்படுத்த வேண்டாமென சம்பந்தப்பட்டவர்களை வினயமாக வேண்டிக் கொள்கிறோம்.

யாழ்ப்பாண வரலாறும் அங்கு தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒரு தாய் பிள்ளைகள் போல் வாழ்ந்து வந்த சரித்திரமும் அகில உலகுமே ஆச்சரியப்படத்தக்க ஒரு பொற்காலமாகும். எக்காலத்திலும் யாழ் முஸ்லிம்கள் இலங்கைப் படையினருக்கோ, இந்திய அமைதி காக்கும் படையினருக்கோ அல்லது எந்த ஒரு தமிழ் இயக்கங்களுக்கோ (ஒரு கால கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் 33 இயக்கங்கள் இருந்தன) மாறாக நடந்தவர்களுமல்ல, காட்டிக்கொடுத்தவர்களுமல்ல, துரோகமிழைத்தவர்களுமல்ல, இதற்கு சரித்திரம் சான்று பகரும். இதற்கு ஆதாரமாக த.வி.கூட்டணித்தலைவர் மு. சிவசிதம்பரம் அவர்கள், புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் அளித்துள்ள பேட்டிகளின் முக்கிய விடயங்களை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.




***மு. சிவசிதம்பரம்:***

''வடபகுதி முஸ்லிம் மக்களுக்கு நடந்தவை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் மனவேதனையையும் தந்தன. இச்சம்பவங்களால் நாம் தமிழர் என்ற நிலையில் வெட்கப்படுகிறோம். இந்நிகழ்வுகள் நியாயமற்றவை என்பதைப் பூரணமாக ஒத்துக் கொள்வதோடு, இது பற்றி பொது மேடைகளிலும் நாம் கூறிவந்துள்ளோம். எம்மைப் பொறுத்தவரையில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதற்கு எக்காரணத்தையும் நாம் காணவில்லை. ஏனெனில் வடபகுதி முஸ்லிம்களும் தமிழர்களும், பரஸ்பர அன்புடனும் ஒற்றுமையுடனும் நம்பிக்கையுடனும் காலங்காலமாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அப்படி யாராவது காரணம் கற்பித்தால் அது உண்மையல்ல என்பதே எமது நிலைப்பாடாகும்.''

(நன்றி: அகதி)

***அன்ரன் பாலசிங்கம்:***

5-11-95ல் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் பி.பி.ஸிக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியதாவது, ''வடபகுதியிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதானது (GREAT MISTAKE- இவ்வாறுதான் ஆங்கிலத்தில் கூறினார்.) ஒரு பெரிய தவறாகும். அவர்கள் எந்நேரமும் வடபகுதிக்குத் திரும்பி வரலாம். அவர்களுக்குரிய உரிமைகளும் சலுகைகளும் வழங்கப்படும்.

மேற்கூறிய கூற்றுகளிலிருந்து நாம் அங்கு எவ்வாறு தமிழ் மக்களோடு அந்நியோன்யமாக வாழ்ந்து வந்தோம் என்பது வெள்ளிடைமலை.

இவ்வேளையில் எதுவித தவறும் இழைக்காத யாழ் முஸ்லிம்கள் சார்பில் புலிகளை மிகவும் தயவுடன் வேண்டிக் கொள்வது என்னவென்றால், தங்கள் வசம் இருக்கும் 35 யாழ் முஸ்லிம் இளைஞர்களையும் விடுதலை செய்யுங்கள் பிள்ளைகளைப் பிரிந்த ஏக்கத்தில் சில பெற்றோர் மரணித்தும் விட்டனர் இவர்களைப் பிரிந்து வாழும் பெற்றோர்களும், மனைவியரும் பிள்ளைகளும் கொட்டில்களில் துன்பம் நிறைந்த அகதிவாழ்க்கை வாழ்ந்தாலும் இவர்களது வரவால் மகிழ்ச்சியடைவர். எவ்வித ஆபத்துமேற்படாமல் தங்கள் வசம் அவர்கள் உள்ளனர் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அவர்களை விடுதலை செய்யுமாறு மீண்டும் தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நாம் வெளியேறிய பின் யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து வெளியேறிய எமது சகோதர தமிழ் மக்கள் எமது வீடுகளில் வந்து தங்கியிருந்ததினால் எமது வீடுவாயில்கள் பற்றிய கவலையில்லாது நிம்மதியாக இருந்தோம். ஆனால் அவர்களும் அங்கிருந்து வெளியேறி விட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் மூலம் அறியக்கிடைக்கிறது. எனவே எமது வீடுகள், வியாபார நிலையங்களின் நிலைபற்றி அறிந்து வருவதற்காக யாழ் முஸ்லிம் குழு ஒன்று யாழ்ப்பாணம் சென்றுவர தீர்மானித்துள்ளது.

யாழ் முஸ்லிம்கள் சார்பில் இறுதியாக வேண்டிக்கொள்வது என்னவென்றால், நாட்டில் நிரந்தரமான அரசியல் தீர்வு ஏற்படவேண்டும். வடபகுதியில் தமிழ் மக்கள் இயல்பான வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு அரசும், தமிழ்க் கட்சிகளும், இயக்கங்களும் வழிசமைக்க வேண்டும். அப்போதுதான் அங்கு சென்று முஸ்லிம்கள் நிம்மதியாக இன ஐக்கியத்துடன் வாழமுடியும். அதுவரை வடபகுதி முஸ்லிம்களுக்கு உங்களால் இயலக் கூடிய உதவி ஒத்தாசைகளை வழங்குங்கள். ஆனால், கிழக்கில் தமிழர் - முஸ்லிம்களுக்கிடையே ஏற்பட்டுள்ள இன விரிசலைப்போன்று வடக்கிலும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். தமிழர் - முஸ்லிம் இன ஐக்கியம் சீர்குலைய இடமளிக்கவேண்டாம்.

யாழ் முஸ்லிம்கள் அங்குள்ள தமிழ் மக்களுடன் ஒட்டி வாழவிரும்புகிறார்களே ஒழிய வெட்டி வாழ விரும்பவில்லை!

யாழ் முஸ்லிம்களின் தலைவிதியை நிர்ணயிக்க வேண்டியவர்கள் யாழ் முஸ்லிம்களே!!

**ஒப்பம்:**

*ஜனாப் எஸ்.எ.சி.முபீன்*
**அமைப்பாளர்**
**இடம் பெயர்ந்த வடமாகாண முஸ்லிம் புனர் வாழ்வுக் கழகம்**

*ஜனாப் எம். ஜி. பஷீர்* ஜே.பி.
**முன்னாள் உதவி முதல்வர்**
**யாழ். மாநகரசபை**

*ஜனாப் கே.எம்.எஸ். ஹமீட்*
**முன்னாள் யா/ மாநகரசபை உறுப்பினர்**
**இளைப்பாறிய உபஅதிபர்**

*ஜனாப் ஆர். எம். இமாம்*
**சட்டத்தரணி**
**முன்னாள் யா/ மாநகரசபை உறுப்பினர்**

*ஜனாப் எம்.யூ.எம் தாஹிர்*
**செயலாளர்**
**யாழ் முஸ்லிம் லொறி உரிமையாளர் சங்கம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






எமது இளமைக்காலக் கல்வியின் போது, கோபத்தை எப்படி வாழ்க்கையின் ஒரு அம்சமாக ஏற்றுக்கொண்டு அதை அணுக முடியும் என்று எமக்கு போதிக்கப்படுவதில்லை. கோபம் ஒரு வகையான குற்றவுணர்வுக்குரிய அம்சமாகவும், அதை வெளிப்படுத்துவது பாவகரமான காரியமாகவும் உணர்வதற்கே நாம் பயிற்றப்பட்டிருக்கிறோம். கோபம் கொள்வது தவறானது என்று நம்பும் விதத்திலேயே நாம் வழிநடத்தப்பட்டு வந்துள்ளோம். கோபம் கொள்வது ஒரு துர்நடத்தை மட்டுமல்ல, அது ஒரு பெரும் குற்றச்செயலுமாகும் என்றே எமக்கு ஊட்டப்பட்டிருக்கும் அறிவு கூறுகிறது.

எமது குழந்தைகளுடன் நாம் அமைதியாக இருக்க விரும்புகிறோம். எமது அமைதி எவ்வளவுக்கு அதிகமாக இருக்கின்றதென்றால் ஒரு கட்டத்தில் எம்மால் கட்டுப்படுத்த முடியாமல் குமுறி வெடிக்க வேண்டிய அளவுக்கு அமைதியாக இருக்கிறோம். எமது கோபம் குழந்தைகளுக்கு தீங்கிழைத்துவிடலாம் என்று அஞ்சுவதால், சுழியோடிகள் தமது மூச்சை அடக்கி வைத்திருப்பதைப்போல் அவற்றை பிரயாசையுடன் அடக்கி வைத்திருக்கிறோம். ஆனால், எவ்வாறாயினும் இந்தச் சந்தர்ப்பங்களில் இவ்வாறு அடக்கி வைத்திருக்கும் எமது சக்தியானது எல்லையற்ற ஒன்று ஆக இருப்பதில்லை. அது மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகவே உள்ளது.

கோபம், சாதாரண தடிமல் போன்று ஒரு மிகச் சாதாரணமாக அடிக்கடி வருகிற பிரச்சினையாகும். நாம் அதை விரும்பாமல் இருக்கலாம். ஆனால், எம்மால் அதைப்புறக்கணித்து விட முடிவதில்லை. எமக்கு அதைப்பற்றி மிகவும் நன்றாகவே தெரிந்திருக்கலாம்; ஆனாலும் அது வருவதைத் தவிர்த்துக்கொள்ள முடிவதில்லை. கோபம் எதிர்பார்க்கக் கூடிய ஒழுங்கிலும், சந்தர்ப்பங்களிலும் வருகின்றது என்ற போதும் அது பெரும்பாலும் திடீரென சற்றும் எதிர்பாராத விதமாக வருவதும் உண்டு. கோபம் நீண்ட நேரம் நீடித்திருக்காத ஒன்றாக இருக்கலாம். ஆனால், அது வருகின்ற கணத்தில் மிகவும் சக்தி மிக்கதாக இருக்கிறது.

நாம் எமது கட்டுப்பாட்டை இழந்து கோபமுறும் போது, எமது அறிவை இழந்து விட்டவர்களாக நடந்துகொள்கிறோம். நாம் எமது எதிரிகளிடம் காட்டத் தயங்குபவற்றை எமது குழந்தைகளுக்கு சொல்லவோ, செய்யவோ செய்கிறோம். நாம் திட்டுகிறோம்; அவமதிக்கிறோம்; அவர்களது பலவீனத்தின் மீது தாக்குகிறோம். எல்லாம் முடிந்ததும் நாம் குற்ற உணர்வுக்குள்ளாகி கவலைப்படுகிறோம். இனிமேல் இவ்வாறானதொரு செயலில் ஈடுபடப்போவதில்லை என்று தீர்மானம் எடுக்கிறோம். ஆனால், திரும்பவும் கோபம் வருகிற சந்தர்ப்பம் விரைவிலேயே வந்துவிடுகிறது; எமது நல்ல நோக்கங்களையெல்லாம் தூக்கி வீசிவிடுகிறது. மீண்டுமொருமுறை எவருக்காக எமது வாழ்க்கையையும் வளங்களையும் அர்ப்பணித்துள்ளோமோ, அவர்களை தாக்கி விடுகிறோம்.

'இனிமேல் கோபிப்பதில்லை' என்று தீர்மானிப்பது என்பது பயனற்றது என்பதை விடவும் மோசமானது. இவை எரிகிற நெருப்புக்கு மேலும் நெய்யூற்றுகின்ற வேலையையே செய்கின்றன. கோபம் ஒரு சூறாவளியைப் போன்று வாழ்க்கையின் ஒரு அம்சமாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டியது. அதை எதிர்கொள்ள நாம் எம்மை தயார் படுத்திக் கொள்ள வேண்டும். அமைதியான குடும்பம், யுத்தமற்ற உலகினை எதிர்பார்ப்பவர்களைப் போன்று, மனிதனது இயற்கையில் திடீர் மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையின் மீது கட்டியெழுப்பப்படுவதில்லை. அது திட்டமிட்ட நடைமுறைகளிலும், நெருக்கடிகளை அவை வெடிப்பதற்கு முன்பாகவே தணிக்கின்ற படிமுறையான முயற்சிகளிலுமே தங்கியிருக்கிறது.

குழந்தைக் கல்வியில் பெற்றோரின் கோபத்திற்கும் ஒரு இடம் இருக்கிறது. உண்மையில் கோபப்படவேண்டிய சந்தர்ப்பங்களில் கோபப்படாமல் இருப்பது குழந்தைகளுக்கு எல்லாம் சரிதான் என்ற அல்லது எதுவுமே சரியல்ல என்பது போன்ற ஒரு செய்தியையே வழங்குகிறது. எனவே, குழந்தைகளில் அக்கறையுள்ளவர்கள் ஒரு போதும் கோபத்தை முழுமையாக அடக்கி விட' முடியாது. ஆனால், இதன் அர்த்தம் குழந்தைகளால் மட்டுமீறிய கோபத்தையும், வன்முறையையும் தாங்கிக் கொள்ள முடியும் என்பதல்ல. இது எதைத் தெரிவிக்கின்றது என்றால், 'என்னுடைய பொறுமைக்கும் எல்லையுண்டு' என்ற செய்தியை வெளிப்படுத்தக்கூடிய அளவு கோபத்தை குழந்தைகளால் புரிந்து கொள்ள முடியும் என்பதை மட்டுமே.

பெற்றோர்களைப் பொறுத்தவரை கோபம் என்பது ஒரு பெறுமதிமிக்க உணர்ச்சியாகும். எனவே, அதன் பெறுமதி பயனுள்ளதாக இருக்க வேண்டுமானால், கோபம் ஒருபோதும் லாபமில்லாத போது பாவிக்கப்படக் கூடாது. கோபம் அது வெளிப்படும் விதத்தில் மேலும் அதிகரிக்கக்கூடிய ஒன்றாக ஒரு போதும் அமைதல் கூடாது. வைத்தியம் ஒரு போதும் நோயின் அளவை மிஞ்சியதாக இருக்கக் கூடாது. கோபமானது பெற்றேருக்கு அமைதியையும், குழந்தைக்கு கொஞ்சம் அறிவையும் தருவதாக வேறெந்தப் பக்கவிளைவுகளையும் தராததாக இருத்தல் வேண்டும். எனவே, நாம் ஒரு போதும் குழந்தையை அதன் நண்பர்கள் முன் ஏசக்கூடாது. ஏனென்றால், இது அதனை இன்னும் மோசமாக நடக்கத் தூண்டுகிறது. பதிலாக நாமும் மேலும் அதிகமான கோபத்துக்குள்ளாகிறோம். கோப அலைகளை உருவாக்குவதோ, எதிர்த்தலோ அல்லது தாக்குதல் நடத்துவதோ எமது நோக்கமல்ல; எமது நோக்கமெல்லாம் எமது எதிர்பார்ப்பு நடைபெறவேண்டுமென்பதும், நெருக்கடி நிலை தணிய வேண்டும் என்பதுதான்.

***கோபத்தை கையாள மூன்று படி முறைகள்:***

எம்மை, நெருக்கடி நிறைந்த நேரங்களை அமைதியாக எதிர்கொள்ளும் விதத்தில் தயார்படுத்திக்கொள்ள வேண்டுமாயின் நாம் கீழ் வரும் விடயங்களை அங்கீகரித்தாக வேண்டும்.

1. குழந்தைகள் எம்மை கோபமூட்டுவார்கள் என்ற உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

2. நாம் எமது கோபத்திற்கு உரித்துடையவர்கள். அதற்காக எந்தவித அவமானத்துக்கோ, குற்ற உணர்வுக்கோ உட்பட வேண்டியதில்லை.

3. நாம் எவற்றை உணர்கிறோமோ அவற்றை வெளிப்படுத்தும் உரித்து எமக்கு உண்டு. பாதுகாப்பு விடயம் தவிர்ந்த எல்லா அம்சங்களிற்கும் இது பொருந்தும். நாம் எமது கோப உணர்வுகளையும் வெளிப்படுத்த முடியும். ஒரு குழந்தையின் ஆளுமை மற்றும் இயல்பு (பண்பு) என்பவற்றின் மீதான தாக்குதலாக அது இல்லாதவரை கோப உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியும்.

இந்த அனுமானங்கள் கோபத்தைக் கையாள்வதற்காக ஸ்தூலமான வழிமுறைகளில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், கொந்தளிக்கும் உணர்வுகளைக் கையாளுவதற்கான முதலாவது படி அவற்றை தெளிவாக இனங்காணுவதாகும். இது ஒருவருக்கு தமது உணர்வுகளை திருத்திக்கொள்ள அல்லது வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எடுக்க வேண்டியதை இனங்காட்டுகிறது.

'எனக்கு சினமாக இருக்கிறது'
'எனக்கு எரிச்சலாக இருக்கிறது'

இத்தகைய சிறிய வார்த்தைகளும், முகத்தை கடுமையாக வைத்துக் கொள்ளலும் எத்தகைய அமைதியையும் தராவிடில் நாம் இரண்டாவது படியை நோக்கிச் செல்லலாம்.

'எனக்கு கோபமாக இருக்கிறது'
'எனக்கு சரியான கோபம் வருகிறது'
எனக்கு படு பயங்கரமான கோபம்'
'எனக்கு கொதி வருகிறது'

சிலவேளைகளில் எமது உணர்வுகள் பற்றி இத்தகைய வசனங்கள் (எவ்வித விளக்கமும் இல்லாமல்) குழந்தைகளின் நடவடிக்கைகளை நிறுத்தி விடக்கூடும். அல்லாத போது மூன்றாவது படிக்கு நாம் போக வேண்டி இருக்கும். இது எமது கோபத்தின் காரணத்தையும் எமது எதிர்ப்புணர்வையும் கூறுவதாகும். கூடவே எமது அடுத்த நடவடிக்கை பற்றிய அறிவிப்பாக இது இருக்கும்.

''சப்பாத்து, கால்மேஸ், ஷேர்ட் எல்லாம் அங்குமிங்குமாய் சிதறுப்பட்டிருப்பதைப் பார்க்கிறபோது எனக்கு கோபம் பொங்கிக்கொண்டு வருகிறது. எல்லாவற்றையும் தூக்கி றோட்டிலே வீசி விட வேணும் போல இருக்கிறது''

''நீ உனது தம்பியை அடிக்கும் போது எனக்கு கோபம் வருகிறது. எனக்குள்ளே பயங்கரமான ஆத்திரம் வருகிறது. இனி ஒரு நாளும் நீ அவனை அடிப்பதை அனுமதிக்க மாட்டேன்''

,சாப்பிட்டது சாப்பிட முதலே கோப்பைகளையும் தட்டுக்களையும் அப்படியே மேசையில் விட்டு விட்டு நீ ரி.வி. பார்க்க ஓடுகிறபோது எனக்கு சகிக்க முடியாத எவு கோபம் வருகிறது. எல்லாப் பாத்திரங்களையும் தூக்கி ரி.வி. மீது வீசி உடைத்துவிடலாம் போல கோபம் வருகிறது....''

''நான் சாப்பிடக் கூப்பிட நீ வராமல் இருக்கும்போது எனக்கு சரியான கோபம் வருகிறது. இவ்வளவு கஷ்டப்பட்டு ஒரு நல்ல சாப்பாட்டை நான் செய்து வைத்திருப்பது வந்து சாப்பிட்டு அதைப்பாராட்ட வேண்டுமென்றே ஒழிய, இப்படிக் கவலைப்படுவதற்காக அல்ல...''

இந்த அணுகுமுறை பெற்றோர்களுக்கு தமது கோபத்தை எத்தகைய பாதிப்பும் இல்லாமல் தணித்துக்கொள்ள உதவுகிறது. மறுபுறத்தில் இது எவ்வாறு கோபத்தை பாதுகாப்பான முறையில் வெளிப்படுத்தலாம் என்ற கல்வியையும் குழந்தைகட்கு ஊட்டுகிறது. குழந்தை தனது கோபத்தை யாரையும் காயப்படுத்தாத விதத்தில் வெளிப்படுத்தலாம் என்பதை இதன் மூலம் விளங்கிக் கொள்ளக் கூடும். இந்த விளக்கத்தை அது பெறுவது என்பது பெற்றோர்களின் (வெறும்) கோபத்தை வெளிப்படுத்தும் முறையினால் மட்டும் சாத்தியமில்லை. இது பெற்றோர்கள், கோபத்தை வெளிப்படுத்தும் ஏற்புடைய முறைகளை குழந்தைகட்கு சுட்டிக்காட்டுவதிலும், கோபத்தை தணிப்பதற்கான கௌரவமான வழிவகைகளை விளக்குவதிலும் கூட தங்கியுள்ளது.

(வரும்)

**ஆங்கிலமூலம்:**
**டொக்டர் ஹெய்ம் ஜீ ஜினோல்ட்**
**தமிழில்: அருண்**




நெஞ்சுள் தொலையாதிருந்து
ஒரு சிற்றாறாய் ஊருகின்ற
என் முதல் காதல் பெட்டை......
ஒரு வழியாய் உன் சேதி அறிந்தேனடி.
பேய்கள் கிழித்தெரிக்கும் எம்முடைய தேசத்தின்
வன்னிக் கிராமத் தெருவொன்றில்
வெள்ளிச் சருகை மினுங்கும் தலையும்
பொன் சருகை கலையா முகமும்
இன்னும் ஓயாமல் முந்தானை திருத்த எழும் கையுமாய்
போனாயாம் உந்தன் பூப்படைந்த பெண்ணோடு
போட்டிச் சிறு நடையில்.
அது என்ன போட்டி?

காவலிலே உன் அன்னை தோற்றதறிவாய்.
அவளிடத்தில் உன் பாட்டி தோற்றதையும் நீ அறிவாய்.
என்றாலும் வாழ்வின் சுழற்தடத்தில்
இன்று நீ அன்னை.....
நீ தோற்க வாழ்வு மேலும் ஒரு வெற்றி பெறும்.
ஆனாலும் நீ எனக்கு இன்னும் சிறுக்கி தான்.
இன்னும் விடாயும் அச்சமுமாய் மிரண்டடிக்கும்
குளக்கரையின் மான்குட்டி.

நானுமுன் நெஞ்சத்தில் சிற்றாறா
இன்னும் காலில் விழுந்து கையேந்தி இரக்கின்ற
திருட்டுச் சிறுபயலா.....
அஞ்சி அஞ்சி நாங்கள் அன்று
உடற்கடலில் கை நனைத்து கால் நனைத்து
நீந்த முயன்றதெல்லாம் எண்ணில்
மேனி இன்பத் துணுக்குறுதே.

எறிகுண்டாய் வானத்தியமன்
கூரைபிரித்துப் பின் வீட்டில் இறங்கிய நாள்
உன் முன் வீட்டுப் பிள்ளை தொலைந்தாளாம்.
பின் ஒரு நாள் ஊர்காண
காக்கி உடையோடு வந்து காட்டோரம் பூப்பறித்து
கூந்தலிலே சூடி நடந்தாளாம்...
தெருவெல்லாம்
நீ உனது பூப்படைந்த பெண்ணின் காவலிலே
நிழலாய் திரிகிறியாம்......
இது பெருங் காவல்.
எல்லாம் அறிந்தேன்.

எங்கிருந்தோ வந்து
நம் தெருவோர மரக்கிளையில் குந்தி
தேவதையின் கூந்தலெனத்தன் பூவால் அசைத்த
அந்தக் குருவியைப் போல்
காணாமல் போனதடி காலங்கள்



வ.ஐ.ச. ஜெயபாலன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சு.வியின் காலத்துயரும் தமிழ்க் கவிதையும்

சேரமான் கணைக்கால் இரும்பொறை




ஈழப்போரின் குரூரச் சுவடுகளின் பதிவாக வந்துள்ள மற்றுமொரு கவிதைத்தொகுதி ''காலத் துயர்'' யுத்தம் நமது மண்ணின் எஞ்சியுள்ள வனப்புகளையும் அழித்து விடும் முனைப்புடன் மும்முரமாக நிகழ்த்துவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நமது தெருக்களில் கைகளை அகல விரித்து நடக்கும் சுதந்திரத்தை நாம் தொலைத்திருக்கிறோம். நீளப்பரந்து நெடுகச் செல்லும் நமது கடற்கரையின் குருத்து மணல்கள் நாம் உறங்கிக் கிடக்கத் தக்கதாக இல்லை. நமது காற்றின் சுகந்தத்தை நமது உடல் சுகிக்க மறுக்கப்பட்டுள்ளோம். நம் பனந்தோப்புகளும், தென்னஞ் சோலைகளும் முகாம்களுக்குக் குற்றிகளாகிப் போய்க் கொண்டிருக்கின்றன.

நட்சத்திரங்கள் எண்ணி, முகில் பார்த்து, நமது சனம் குடும்பத்தோடு வாசலில் இன்புற்றுக் கிடந்திருந்த காலங்கள் போயின. நம் குழந்தைகளின் நிலாச் சோறும் இல்லத்துப் போயிற்று.

இவற்றைவிட எத்தனையாயிரம் உயிர்களை இப்போர் தன்னுடைய கொடிய இராட்சதப் பாதங்களின் கீழ் போட்டு நசித்துக்கொன்று விட்டது. எத்தனையாயிரம் இளைஞர்களின் எதிர்காலம் சிறைக்கூடக் கம்பிகளின் பின்னால் இருண்டு போய் விட்டது. இன்னொரு புறம் இலட்சக்கணக்கில் புலம் பெயர்ந்து சுயமிழந்து அகதி முகத்துடன் யார் யாராகவோவெல்லாம் உருமாறிப் போனோம் நாம்.

சொல்லியோ எழுதியோ முடிவுறாத துயரம்; மீளாத வடு. இத்தனைக்குப் பிறகும் போர் தன்னுடைய வெறியாட்டத்தை நிறுத்திய பாடில்லை. வெளியிலும் உள்ளுக்குள்ளும் காயங்களை விதைப்பதில் தீவிரத்துடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது அது. போர் விதைத்த உட்காயங்களினால் சு.வி. அவர்கள் பட்ட நோவுகள் அவருடைய எழுத்துக்களில் தெரிகின்றன.

தாய் போன்ற தன்னுடைய அழகிய சின்னஞ்சிறு தீவினைப் பிரிந்தமை, அங்குள்ள தனது உயிரான உறவுகளின் பிரிவு, தன் பிரதேச மக்கள் படும் துயர் அனைத்தும் சேர்ந்து அவரை வருத்துகின்றன. கவிஞரின் உச்ச மனத்தின் கண்ணுக்குப் புலப்படாத புள்ளியொன்றிலிருந்து கட்டி கட்டியாக இரத்தம் வருகிறது. அந்த இரத்தக் கட்டிகளாகத்தான் இருக்கிறார். ஈழத்துச் சனங்களின் ஏக பிரதிநிதியாக அவரது கவிதைகள் முழுச் சோகத்தையும் உரத்துப் பேசுகின்றன.

''காலத்துயர்'' தொகுதியின் மொத்ததொனியும் போர் திணித்த காயங்களின் வெளிக்கிளர்வுகள் தான். எனவே உள்ளடக்கத்தைப் பொறுத்த மட்டில் சு.வி. காலத்தோடு ஒன்றி நிற்கின்றார். இதை சு.வி.யின் கவிதைகளைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

இது சு.வி. க்கு மட்டுமான துயரமல்ல. ஈழத்துக் குடிமகன் ஒவ்வொருவனதும் துயரம். பேரினவாதம் தன்னுடைய அரக்கக் கரங்களால் ஈழவன் ஒவ்வொருவனதும் குரல்வளையையும் தான் நசித்துக் கொண்டிருக்கின்றது. சு.வி. கவிஞனாக இருப்பதால் தான் சக மனிதனிலிருந்து அவர் வேறுபடுகிறார். அவருடைய துயரம் அழகிய துயரம். சாதாரணர்கள் போல் கூறியோ, குமுறியோ,அழுதோ வற்றிப் போகாமல் அவரதுஉள்மன வெம்மை எழுதித் தணிகிறது. போரின் சுவட்டை அவர் இலக்கியமாக்கி ஒரு ஆவணப் படுத்தலாகவும் நாம் கொள்ள முடியும். வடகிழக்கு மக்களின் அரசியலைக் கருதி இந்தப் பதிவுகள் முக்கியத்துவம் மிக்கனவாகின்றன. ஆனால், கவிஞன் எதையும் ஆவணப் படுத்த வேண்டும் என்ற இலக்கில் திட்டமிட்டு செயற்படுபவனல்ல. கவிஞனது வேலையும் அதுவல்ல. அவன் வாழ்க்கையைப் பாடும் போது அது பதிவாகி விடுகிறது. அவ்வளவுதான். நிஜக்கவிஞனின் இயல்பே அது. சு.வியும் அவ்வாறேதான் எனவே உள்ளடக்க அளவில் இத்தொகுதி தன்னுடைய பொறுப்பைச் சரியாகத்தான் செய்திருக்கிறது. ஆனால், தமிழ்க் கவிதைக்கு இத்தொகுதி என்ன செய்திருக்கிறது என்பதுதான் கேள்வியாகத் துருத்திக் கொண்டு முன்னிற்கிறது.

இந்தியத் தமிழ்க் கவிதைகளை (?) விடுவோம். 90களின் ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் தன் பழைய சட்டகங்களிலிருந்து விடுபட்டு புதிய பல பரிமாணங்களைக் காண்பித்துச் சென்று கொண்டிருக்கிறது. இன்றைய ஈழத்தின் முக்கிய கவிஞர்களின் கவிதைகளை தொடந்து வாசித்து வரும் எவருக்கும் இக்கருத்து குழப்பத்தை விளைவிக்க இயலாது. சுருக்கமாகச் சொன்னால் ஈழத்துத் தமிழ்க் கவிதை ஓர் உன்னதமான நிலையை எய்திக் கொண்டிருக்கிறது. எனவே இன்னும் நாம் 'குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக்கொண்டிருக்க முடியாது' உலகக் கவிதைகளின் தரத்துடன் தமிழ்க் கவிதையை இணைத்துப் பேசவேண்டிய காலம் வந்து விட்டதென்று தான் கூற வேண்டியிருக்கிறது. நமது கவிதைகளுடன் நமது கவிதைகளையே ஒப்பிட்டு 'சா!' என்று எவ்வளவு காலம் தான் சிறுபிள்ளைத்தனமாக நாம் புல்லரித்துக் கொண்டிருப்பது?

வெளிப்பாட்டு முறையைப் பொறுத்த மட்டில் 'காலத்துயர்' போன தலைமுறைக்குரிய இடத்தில்தான் நிற்கிறது. சொல்வதற்கு சங்கடமாக இருந்தாலும் 90களில் இக்கவிதைகள் எழுதப்பட்டிருப்பதால் இது குறிப்பிடத் தவறவிடமுடியாத விடயமாக இருக்கிறது. அகவயப்பட்ட உணர்வுகள் சார்ந்தும், புதிய புதிய கோணங்களிலும் இதே காலப்பகுதிக்குரிய ஈழத்துக் கவிதைகள் நவீன வாகனங்களிலேறி உலா வந்து கொண்டிருக்கும் போது சு.வி. தனது பழைய பரிவாரங்களுடனேயே இன்னமும் பவனி வந்து கொண்டிருப்பது தமிழ்க் கவிதைக்கு ஆரோக்கியமானதாக இல்லை. சு.வி. கவிஞர் என்பதிலோ அவரது எழுத்துக்கள் கவிதைகளா என்பதிலோ விவாதங்களுக்கு சொட்டும் இடமில்லை.

ஆனால், சிறந்த கவிஞரான சு.வியிடமிருந்து தமிழ்க் கவிதை எதிர்பார்த்த அளவிற்கு இக் கவிதைகள் ஏமாற்றத்தையே தருகின்றன. இன்னும் சொன்னால் இதைத் தருவதற்கு சு.வி. தேவையில்லை.

சு.வி யின் பார்வைகள் மாறுபட வேண்டும். உணர்திறன் மிக்க கவிஞரான சு.வி. தன் உணர்வுகளை புதிய புதிய கோணங்களில் வெளிப்படுத்த வேண்டும். நவீன தமிழ்க் கவிதையை மற்றுமொரு உச்சத்தை நோக்கிப் பெயர்த்துச் செல்வதற்கு சு.வியினது கவிதைகளும் தேவை. அந்த சு.வி. தான் தமிழ்க் கவிதைக்குத் தேவை. 'காலத்துயரி'ன் பதிவுகள் வேண்டுமானால் இந்தத் தலைமுறையின் அவல வாழ்வை அடுத்த தலைமுறைக்கு படம் பிடித்துக் காட்ட உதவ முடியும். ஆனால், இது தமிழ்க் கவிதையின் பரிணாம வளர்ச்சிக்கு எந்தவிதத்திலும் உதவப் போவதில்லை.

மற்றப்படி சு.வி. யின் கவிதைகளின் மொழியடர்த்தி என்னே! வரிகளிலே ஒழிந்தொழிந்து நெளிந்து செல்லும் மரபின் ஓசையின் நயம்தான் என்னே! போரின் அவலத்தை இவ்வளவு உருக்கமாகச் சொன்ன கவிஞன் வேறு யார்! என்றெல்லாம் வேண்டுமானால் அவரது எதிரிகள் யாரும் எழுதி அவரை உச்சி குளிரச்செய்யட்டும். என்னைப் பொறுத்தவரை சு.வியின் இத் தொகுதியிலுள்ள கவிதைகள் போன தலைமுறைத் தமிழ் கவிதைப் பாரம்பரியத்தின் எச்ச சொச்சங்களேயல்லாமல் வேறில்லை. அந்தத் தலைமுறைக்குப் போய் நின்று விமர்சித்தால் வேண்டுமானால் இத்தொகுப்பிலுள்ள அதிஉச்சக் கவிதையாக ''காலத்துயர்'' என்ற தலைப்பிலான கவிதையைக் குறிப்பிட முடியும். மற்றது, இன்னுமொன்று; 'துளி முகத்துள் கங்கை' போன்றவற்றைப் போல் சு.வி. இன்னமும் பொன் மொழிக் கவிதைகள் எழுதிக் கொண்டிருந்தால் அவரது சிறந்த கவிதைகளால் கூட அவரைக் காப்பாற்ற முடியாமல் போய் விடும்.

---

**செட்டை கழற்றிய நாங்கள்**
**(கவிதைகள்)**
**ரவி (பாலமோகன்)**
**வெளியீடு: விடியல் பதிப்பகம்.**
**விலை: 20/= (இந்திய ரூபாய்)**

புலம் பெயர் இலக்கிய நூல் வரிசைகளில் புதிய வரவு பெற்றுள்ளது 'மனிதம்' பாலமோகனின்(ரவி) 'செட்டை கழற்றிய நாங்கள்' என்ற கவிதைத் தொகுதி.

சோலைக்கிளியை ஞாபகமூட்டுகிற தலைப்போடும் அழகிய அட்டைப்படத்தோடும் வெளிவந்துள்ள இந்நூலை விடியல் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இப்பதிப்பகத்தின் இன்னொரு வெளியீடாக சோலைக்கிளியின் 'பனியில் மொழி எழுதி' என்ற கவிதை நூலும் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

''தனிமனித எல்லையைத் தாண்டி சமூக அனுபவம் என்கிற எல்லையைத் தொடுகின்ற நல்ல கவிதைகள் உட்பட எல்லை தாண்டாத சிலதும் இருக்கின்றன. எனினும் கவிஞர் பயப்படும் அளவு பத்தோடு பதினொன்றாகப் போய்விடாது காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கையையும் இக்கவிதைத் தொகுப்பிலுள்ள சில கவிதைகள் தருகின்றன.


மேதாவித்தனமற்ற என்னுரையும் ஊறுவிளைவிக்கா 'புலம் பெயர்ந்த வாழ்வும் புலம் பெயரா நினைவுகளும்' என்ற அ. மார்க்ஸ்ஸின் முன்னுரையும் கட்டாயம் வாசிக்கப்படவேண்டியன. படைப்பிலக்கியவாதியல்லாத ஒரு விமர்சகரான இவரை முன்னுரைக்காகத் தேர்ந்திருப்பதும் வித்தியாசமான பதிவுகளைப் பெற உதவுகிறது.... ''எல்லாக் கவிதைகளும் பழமை ஏக்கங்களில் தேங்கி விடுவது சேரன் தோற்றுவித்த கவிதைப் பாணிக்குள் சுழன்று சுழன்று நின்று விடுவது...'' என்ற அவரின் விமர்சனம் குறிப்பாக புலம் பெயர்ந்து வாழும் கவிஞர்களின் அவதானிப்புக்குரியது.

....எதையும் இந்த மனிதர்களால்
நியாயப்படுத்திக் கொள்வதற்கு
கற்பிதங்கள் விளை நிலமாயிற்று
எனதுபேனா இந்தச் சேற்றில் கவிதைகளாக
வளர்ப்பதாக இல்லை
எதிர்முனையில் அது வேர் கொண்டு
வளரட்டும்
அதை
உனக்குக் காணிக்கையாக்குகிறேன்

என்று முடிக்கும் இவரும் ஒரு நம்பிக்கையான 'வரவு'.

-நில்ஷா-

---




நீண்ட காலமாகவே ஈழத்தில் ஒரு மத்தியம இலக்கிய இதழுக்கான தேவை இருந்து வருகின்றது. தமிழகத்தில் 'கணையாழி' நீண்ட காலமாகவே ஒரு மத்திம இதழாக இருந்து வருகின்றது. அதனைவிட இடையிடையே 'இனி' என்னும் சஞ்சிகையும் 'சுபமங்களா' என்ற சஞ்சிகையும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இப்பணியைச் செய்து இன்று வெளிவாராது போய்விட்டன.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'அலை', 'புதுசு' முதலிய சஞ்சிகைகளும் கிழக்கிலிருந்து வெளிவந்த 'வியூகம்', 'இருப்பு' போன்ற சஞ்சிகைகளும் சிறுபத்திரிகை என்று வகையீட்டுக்குள்ளேயே வரக் கூடியவை. இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக 'மல்லிகை' வெளிவருகின்ற போதிலும் ஒரு மத்திம சஞ்சிகையாக அதனைக் குறிப்பிட முடியவில்லை.
இப்போது கொழும்பிலிருந்து பௌசர் என்ற இளைஞர் மத்திம இதழுக்குரிய குணாம்சங்களுடன் 'மூன்றாவது மனிதன்' சஞ்சிகையை வெளிக்கொணர்ந்துள்ளார். இரு மாத இதழான இச்சஞ்சிகையின் முதலாவதான மே - ஜூன் இதழ் கவர்ச்சியான அட்டைப்படத்துடன் வெளிவந்துள்ளது. கவிஞர் ஜெயபாலனின் நேர்காணலும், சினிமா பற்றி இரண்டு கட்டுரையும், இரண்டு மொழிபெயர்ப்புச் சிறுகதை கட்டுரைகளும், சில கவிதைகளும், தீர்வுத் திட்டம் மற்றும் ஜே.விபியின் மீள்வருகை பற்றிய இரு அரசியல் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.
எனினும், 'மூன்றாவது மனிதன்' தொடர்ந்து வெளிவரவேண்டும். என்பதுதான் முக்கியம்.


ந.செ.

---

**சமாதானத்துடன் சில கதைகள் (சிறுகதைகள்)**
**வெளியீடு:மக்கள் சமாதான இலக்கிய மன்றம்**
**52, தர்மரட்ன மாவத்தை**
**மாத்தறை.**

'சமாதானத்துடன் சில கதைகள்' என்ற தலைப்பில் சிறுகதைகளின் தொகுப்பொன்றை வெளியிட்டுள்ளது 'மக்கள் சமாதான இலக்கிய மன்றம்'. முன்னுரையில் ரஞ்சகுமார் குறிப்பிடுவதுபோன்று - இது இந்நூல் பற்றிய சிறந்த சிறு விமர்சனமுமாகியிருக்கிறது. - ''சமாதானத்திற்கான தேவை மிக உக்கிரமாக உணரப்படுகின்ற காலகட்டம் இது. எனினும், சமாதானம் எனும் பதத்திற்கு ஒவ்வொரு சாராரும் ஒவ்வொரு விதமாக அர்த்தம் கற்பிக்கவும் 'சமாதானம்' என்பதற்கூடாக தமக்குச் சாதகமான நிலைமைகளைத் தோற்றுவிக்கவுமே ஆவலாயிருக்கின்றனர்.''

இந்தக் கதைகளிலும் இதுவே நடந்திருக்கிறது. இதில் கதைகளை எழுதிய எல்லோரும் சமாதானம் பற்றிய தங்கள் அபிப்பிராயங்களை எழுதியிருக்கிறார்கள். ஒருவர் கூட இலங்கையில் சமாதானம் பற்றிப் பேசப்படுவதற்கான அடிக்காரணிகளைத்தேடியதாக இல்லை. சமாதானத்திற்காக பெரும்பாலானோர் முன்வைத்திருப்பது கலப்புத் திருமணம். இது முன்னுரையில் ரஞ்சகுமார் சொல்வது போல் 'சிறுபான்மை இனங்களைக் கலைத்தலாய்த்'தான் போய்முடியும்'. ராமேஸ்வரன் பாலுவுக்கும் ரோஹினிக்கும் திருமணம் முடித்து வைக்கிறார். குணநாதன் 'ரஹ்மானுக்கும், தயானிக்கும் திருமணம் செய்விக்க முயன்று தோற்றுப் போகிறார். பரமேஸ்வரன் சரத் என்ற இராணுவ வீரருக்கும் சுமதிக்கும் திருமணம் செய்து வைக்கிறார். இர்பானா ஜெப்பார் மாற்றுமதச் சகோதரர்களான சரத்துக்கும் நந்தினிக்கும் திருமணம் செய்து வைப்பதில் - கவனிக்க எல்லாம் சினிமாப் பாணியில் பெற்றோர்களின் எதிர்ப்புக்குள்ளாகித்தான் வெற்றி பெறுகிறது. - முன்னின்று Escape ஆகிறார்.




மற்றைய கதைகளில் உள்ளடக்கம் வேறுபடினும் சமாதானச் சாதக முயற்சிதான் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பாக்கியராஜன் அனுராதாவின்கதை எல்லாம்மீறி மனதைச் 'சில்லிட'வைக்கிறது. நஸூபர் பஸ்ஸுக்குள்நடைபெறும் உரையாடலில் சமாதானத்தைத் தேடுகிறார். ஒவ்வொருவரின் உள்ளத்திலும் சமாதானம் உள்ளதாக இனங்காண்கிறார். இவருங் கூடத் தோற்றுப்போகிறார். ஷம்ஸின் கதையில் பன்சலைக்குப் பக்கத்து இடத்தை முஸ்லிம்களுக்கு விட்டுக் கொடுப்பதில் சமாதானம் உணரப்படுகிறது. சிறு துண்டு நிலத்திற்காய் உறவுகள் கூட வெட்டிக்கொண்டு சாகிற பெரும்பாலும் உண்மையான இன்றைய யதார்த்தத்தில் இது சமாதானத்திற்கான பிரமாண்டத்தை ஏற்படுத்துவதில் வியப்பில்லைதான். அறபாத்தின் கதை செயற்கைத்தனமான சமாதானத்தை தேடுவதிலிருந்து சற்றுத்தள்ளிப்போயிருக்கிறது. ஏனையவற்றிலிருந்து வித்தியாசமான- அனுகல் சிறாஜ்டீனின் கதையும்தான் ... நிகழ்வுகளை உள்வாங்கியிருக்கிறார்கள் போல்தெரிகிறது.
கதைக்கரு இப்படிப் போகிறதென்றால் சிறுகதையின் ஏனைய அம்சங்கள்.
ரஞ்சகுமார் சொல்கிறார்... ''சமாதானத்துடன் சில கதைகள்'' எனும் இத்தொகுப்பிலுள்ள ஏதாவது ஒரு கதையாவது தற்காலத் தமிழ்ச் சிறுகதைகளின் தரத்துடன் ஒப்பிடக்கூடியதா? என்ற கேள்விக்கு 'இல்லை' என்ற பதிலையே எந்தவொரு சீரிய வாசகனும் தருவான்.
அழகியல் அம்சத்திலும் சரி. (கதைக்கரு) கதை கூறுமுறைமை, மொழி ஆளுமை என்பவற்றிலும் சரி மிகவும் பலவீனமானதொரு நிலையிலேயே இருக்கின்றன. ஒரு ஆரம்பநிலை எழுத்தாளன் எழுதிப்பயின்ற கதைகளாகவே இவை தோற்றம் பெறுகின்றன...''
உண்மைதான், எத்தனைபேர் தமிழ்ச் சிறுகதை எனும் இலக்கிய உலகோடு ஆத்மார்த்த தொடர்பைக் கொண்டிருக்கிறார்கள்?

-நில்ஷா-

www.tamilarangam.net



# சானா
# வானொலி நாடக விழா நாடகங்கள்: தேறுவதற்கு என்ன வழி?



மேடை நாடகங்களைப் போல வானொலி நாடகங்கள் விமர்சிக்கப்படுவதில்லை. தொடர்ச்சியாக வானொலி நாடகங்களைக் கேட்பதோ, கேட்டவற்றை மனதில் பதித்து அவற்றைச் சீர்தூக்கி ஆராய்வதோ விமர்சகர்களுக்கும் சிரமமான காரியமாக இருந்திருக்கலாம். ''சானா' நினைவு நாடகப் போட்டியொன்றை நடாத்தி, நாடக விழாவாக ஏழு நாடகங்களை ஒலிபரப்பியதன் மூலம் இத்தகைய ஓர் ஆய்வுக்கு வழிகோலியமையால் தமிழ்ச் சேவையினரை முதலில் பாராட்டி விடுவோம்.

வானொலி நாடகங்களுக்கு மதிப்பையும் வரவேற்பையும் ஏற்படுத்திக்கொடுத்த பிதாமகர் காலஞ் சென்ற 'கலாஜோதி' சானா அவர்களே. அவரது காலத்தில் தரமான பல நாடகங்களும், நாடக எழுத்தாளர்களும் நாடக நடிகர்களும் உருவானார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையே. தென்னிந்திய சினிமாக்களின் கதை, நடிப்பு, உரையாடல் பாணியில் இருந்து ஈழத்தமிழர் நாடகங்களை மீட்டு, இயல்பான வட்டாரப் பேச்சுவழக்குக்கு அதை மாற்றிய பெருமையும் அவரையே சாரும். இலங்கையர்கோன் முதலான மூத்த எழுத்தாளர்களின் பங்களிப்பும் இதில் கணிசமானது.

பல்வேறுபட்ட அரசியல் சூழ்நிலைக் காரணங்களால் மேடை, தொலைக்காட்சி, நாடகங்கள் வளர்ச்சியடைய முடியாது தேக்க முற்றுள்ளன. ஆனால், வானொலி நாடகங்கள் தொடர்ச்சியாகப் பல ஆண்டுகளாக ஒலிபரப்பாகி வருகின்றன. மற்றைய ஊடகங்களைப் போல ஒலிபரப்பாவதில் இவை பெரிய தடைகள் எதையும் எதிர்கொள்ளவில்லை. தமிழில் காலத்துக்குக் காலம் புதிய எழுத்தாளர்களையும் நடிகர்களையும் தயாரிப்பாளர்களையும் உருவாக்கக் கூடிய சக்தி வாய்ந்த ஒரே சாதனமாகத் திகழ்வது வானொலியே. அவ்வகையில் எத்தனை புதிய எழுத்தாளர்கள், நடிகர்கள் உருவாகியுள்ளார்கள் என்பதற்கு அறியும் பதச்சோறாக இந்நாடக விழாவைக் கொள்வோமாயின் எமக்குக் கிடைப்பது ஏமாற்றமே.

நல்லதொரு கதைக்கரு; கட்டுக்கோப்பான கதையமைப்பு; கதைக்கு வலுவூட்டும் சம்பவங்கள்; தேவைக்கதிகமில்லாத அளவான, இறுக்கமான, இயல்பான உரையாடல், முன்னுக்குப்பின் முரணில்லாத பாத்திர வார்ப்பு; பாத்திரங்களின் முரண்பாடுகளை குணஇயல்புகளை உணர்ச்சி பேதங்களை பிசிறில்லாத, தெளிவான குரலில் தேவையான ஏற்ற இறக்கங்களுடன் வெளிக்காட்டும் நடிப்பு; நாடகம் நிகழும் களத்தை அச்சூழலைப் பாதிக்கும் ஒலிமாற்றங்களை - தெளிவாக இனங்காட்டும் ஒலிக்குறிப்புக்கள்; காட்சியுடன் ஒன்றிக்க வைக்கும் பின்னணி இசை, இவை ஒரு வானொலி நாடகத்துக்கு இன்றியமையாத சட்டகங்களெனலாம். இவற்றை அளவுகோலாக வைத்துக்கொண்டு ஒலிபரப்பான நாடகங்களைப் பற்றி இனி ஆராய்வோம்.

*மனிதன் என்பவன் தெய்வமாகலாம்:*

முதலாவது பரிசைத் தட்டிக்கொண்ட நாடகம் 'மனிதன் என்பவன் தெய்வமாகலாம்' சுயலாபங் கருதி அகதிகளையும் அகதிச் சிறுவர்களையும் வேலைக்கமர்த்தி அவர்கள் உழைப்பைச் சுரண்டும் ஒரு முதலாளி. அவர் மகனுக்கு இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்து போக அகதித் தொழிலாளியான ஒருவன் தனது சிறுநீரகத்தைத் தானஞ் செய்து அவன் உயிரைக் காப்பாற்ற அதனால், ஞானோதயம் பெறும் முதலாளி அகதிகளுக்காகத் தனது காணிகளைத் தானஞ் செய்கிறார். இதுதான் கதை. 'தன்வினை தன்னைச்சுடும்'' பழைய கருத்துத்தான்.

முதலாளி, ரவி, டொக்டர், மனேஜர் என்று அனைத்துப் பாத்திரங்களுமே பழைய கால மேடை நாடகப் பாணியில் நீண்ட 'லெக்சர்' அடிக்கின்றன. நீண்ட வசனங்களில் மாறி மாறி 'அலட்டப்படும்' இயல்பு மீறிய உரையாடல்கள், எழுத்து வழக்கில் மட்டும் பயிலப்படும் புழக்கத்தில் இல்லாத பல 'சொல்லமைப்புக்கள் (உ+ம் - வாழ்க்கை நீரோட்டம், நவீனப்படுத்தல், ஸ்தாபனம் போன்றன.), சம்பவங்களாலன்றி வெறும் சொல்லாடல்களால் நகர்த்தப்படும் காட்சிகள் நாடக ஓட்டத்துக்கு முட்டுக்கட்டை போடுகின்றன. அகதிகளின் அவலங்கள் பற்றி வெறும் அனுதாப வசனங்களும், சிறுநீரக ஒப்பரேஷன் பற்றிய விளக்கங்களும் கைத்தொழில்கள் பற்றிய விபரிப்புக்களும் கலந்துரையாடல் போல மாற்றி விடுகின்றன. இதனால் பாத்திரங்கள் யாவும் உயிர்த்தன்மையற்றனவாக, ஆசிரியரின் கருத்துக் குவியல்களை வெறுமனே ஒப்பிக்கும் உரைஞர்களாக மாறி - நாடக அனுபவத்தைத்தரத் தவறிவிடுகின்றன.

குடிகார சுப்பவைசரின் பாத்திரம் மட்டும் இதிலிருந்து விலக்குப் பெறுவதால் யோகராஜாவுக்கு மட்டும் கொஞ்சம் நடிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. மற்ற எவரது நடிப்பும் சோபிக்க முடியாமற் போனமைக்குக் காரணம் நாடகப் பிரதியின் பலவீனமே. 'நடுவர்கள் என்பவர்களும் குருடர்களாகலாம்' என்பதற்கு உதாரணமாக அமைந்த நாடகம் 'மனிதன் என்பவன் தெய்வமாகலாம்'.

*குருவிக்கூடு:*

இரண்டாவது இடத்திற்குத் தெரிவான நாடகம் காலஞ்சென்ற கலைஞர் எஸ். எஸ். கணேசபிள்ளை அவர்கள் கடைசியாக எழுதிய ''குருவிக்கூடு''. குருவிக்கூட்டிலிருந்து சிறகு முளைத்தவுடன் குஞ்சுகள் பறந்து போய்விடுவதுபோல், இலட்சாதிபதி ஒருவரின் மகனும் மகளும், அவர் கட்டிய ஆடம்பரமான வீட்டில் குடியிருக்க விரும்பாது தனித்தனியாக குடித்தனம் சென்றுவிட இலட்சாதிபதி 'மண்டையைப்போட்டு விடுவது' தான் கதை. தலைப்புக்காக ஒரு கதை பண்ணி ஒப்பேற்றியிருக்கிறார் கதாசிரியர். அதுவும் பரிசொன்றைத் தட்டிகொண்டு விட்டது. எந்த அடிப்படையில் நடுவர்கள் பரிசுக்குரிய நாடகங்களைத் தெரிந்தெடுத்தார்களோ அது அவர்களுக்கே வெளிச்சம்.

எந்த வித எதிர்பார்ப்புக்களுக்கும் இடமளியாது சில சம்பவங்களின் தொடராக நகர்த்தப்படும் கதை முன்னையதைப் போலவே சப்பென்று முடிகிறது. வலுவான எந்த ஒரு காரணமுமின்றியே மகன் சத்தியன் திடீரென வீட்டைவிட்டு மனைவியுடன் வெளியேறுகிறான். கருணாகரன் அடிக்கொருதரம் நினைவுகூரும் அந்தக் குருவிக்கூடு தலைப்பைக் காப்பாற்றத்தான் அந்த வெளிநடப்பு. தந்தை கட்டிய வீட்டை தங்கைக்கு கொடுக்காது, தனக்கு எழுதித் தரும்படி மகன் கேட்பது யாழ்ப்பாண சமூகத்தில் யதார்த்தமானதல்ல.

நடிப்பைப் பொறுத்தவரை ஜெகசோதி பாத்திரத்தை உணர்ந்து ஒன்றித்து நடித்தார். பிராங் புஷ்பநாயகம் வழமை போல. எழில்வேந்தன் தனது தயாரிப்பில் தானே நடித்து மகிழ்ந்தார். அந்தளவுக்கு வானொலியில் நடிகர் பஞ்சம். சித்தார்த்தன் இன்னும் நன்றாக வாசித்திருக்கலாம். (!) நல்ல நடிகர்கள் பலர் பங்கேற்றும் குருவிக்கூடு 'வெறுமை'யாகப் போய்விட்ட உணர்வு தான் மிச்சம்.

*கல்வியா? கனடாக் கல்யாணமா?*

மூன்றாவது பரிசை சுவீகரித்த அராலியூர் சுந்தரம்பிள்ளையின் 'கல்வியா? கனடாக் கல்யாணமா?'வும் குருவிக்கூடுபோல் தான். கதைக்கருவை தலைப்பிலேயே தொக்கவைத்துவிட்டார். பத்துப் பாத்திரங்களை வைத்துப் பேய்க்காட்டி வளவள வென்று அங்குமிங்குமாக இழுத்தடித்து பட்டிமன்றத் தலைப்பைப் பூர்த்தி செய்ய கதாநாயகி ராஜினியை கனடாவுக்கு கலியாணம் முடித்து அனுப்பி வைத்து அலுப்பைத் தீர்க்கிறார். இதைவிட எத்தனையோ நல்ல நாடகங்களை அராலியூராரே எழுதியிருக்கிறார். விசேஷமாக ஒன்றுமில்லாத இந்த நாடகத்தை எழுதி அன்று விதைத்ததற்கு இன்று அறுவடை செய்திருக்கிறாரோ?

வழமைபோல கமலினியின் கொஞ்சலும், கெஞ்சலும் இயைந்த நயமான நடிப்பும் கலகலப்பான குடும்பத்தவரின் உரையாடலும் நாடகத்தை இருந்து ஒருமுறை யாவது கேட்க வைக்கின்றன.

ராஜினி கனடா போகமாட்டேன் என்றவுடன் அடுத்த 16 வயது மகளை நீ போகிறாயாடி எனக் கேட்பதும் மற்றப்பிள்ளைகளுக்கு அதற்கான வயது காணாதே எனத்தாய் அங்கலாய்ப்பதும் கொஞ்சம் ரஸக்குறைவாக சிவப்பு விளக்குப் பகுதி அம்மாவை நினைவூட்டுவதாக இல்லையா? கனடாவில் வீடு, கார் என்று உள்ள ஒரு மாப்பிள்ளைக்கு ராஜினியை விட்டால் அழகான பெண் இல்லை என்பது போல் காட்டுவதும், சாத்திரம் பொருந்தாததால் மாப்பிள்ளைக்கு பெண் கிடைப்பதில்லை எனக் கூறும் தரகர் பேருக்குத்தன்னும் ராஜினியின் சாதகத்தைக் கேட்காதிருப்பதும் கனடாவில் போயும் கூட கல்வி கற்கலாம்தானே என்று ஒருவர் கூட ராஜினிக்கு ஆலோசனை கூறாததும் சின்னச் சின்ன ஓட்டைகள்.

*மனக்கதவு:*

ஆறுதல் பரிசு பெற்ற ஞானசேகரனின் 'மனக்கதவு' - பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட காதல் தோல்வியால் மனமுடைந்த ஒருத்தி மூடிய தனது மனக்கதவைத் திறக்கும் வேளையில் எதிர்பாரா ஓர் ஏமாற்றத்தால் மீண்டும் அதை இறுக மூடிக்கொள்ளும் கதை.

முதல் மூன்றும் போலல்லாமல் இந் நாடகம் கொஞ்சம் விறுவிறுப்பாக சில திருப்பங்களுடன் நகர்த்தப்பட்டிருந்தன. நல்ல நடிகர்கள் நடித்திருந்தால் நாடகம் மேலும் மெருகேறியிருக்கலாம். ஆயினும், ரவீந்திரனைத் தவிர்ந்த மற்றவர்கள் தம்மால் இயன்றளவு சிறப்பாகவே நடித்திருந்தனர்.

தமக்கையும் தம்பியும் தத்தம் காதல்பற்றி உரையாடுவதும், மோகனாவுடன் கற்பிக்கும் சக ஆசிரியர் சரவணன், தனக்கு மாப்பிள்ளை பார்க்க அன்று போகிறார்கள் என்று கூறியதன் பின்னரே முதற்தடவையாக தனது காதலை வெளிப்படுத்துவதும் நெருடலாய் உள்ளன.

மோகனா சரவணனின் சம்மதம் கேட்க முன்வரும்போது ஒரு முறைதான் காதல் மலர் பூக்கும் அது இப்போது வாடி விட்டதென வசனம்பேசி தட்டிக்கழிப்பது திடீர் திருப்பத்திற்காகக் கதையை மாற்றும் சினிமாத்தனமான பழைய உத்தி.

*துறவு:*

ஆறுதல் பரிசு பெற்ற மற்றொரு நாடகம் 'துறவு' வெளிப்பகட்டில் மயங்கும் ஒரு சராசரி யாழ்ப்பாணப் பெண் ஈஸ்வரி ஒரு அப்பாவி. ஆனால் தனது திறமைகளில் அதீதநம்பிக்கை கொண்டவள். அவளை உள்ளும் புறமும் அறிந்த அவள் கணவன் நாதன் நாலும் தெரிந்த ஒரு நல்ல மனிதன். கனடா போகும் கனவுகளுடன் கொழும்பில் வீடெடுத்து தங்கும் அவளுடன் ஒட்டிக்கொள்ளும் மகேஸ்வரியும், நாதனின் அண்ணன் மகன் சத்தியனும் குழையடித்து தமது சுயநல நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்கின்றனர்.

கனடா சென்று தனது பிள்ளைகளையும் அழைத்துவிடும் தமக்கை மகேஸ்வரியை நம்பி ஏமாறும் ஈஸ்வரி - மனைவியின் நடவடிக்கைகளால் விரக்தியுற்று தனது வீடு வளவுகளை அநாதை இல்லத்திற்கு எழுதிவைத்து விட்டு - 'துறவை மேற்கொள்ளும் நாதனின் முடிவு அறிந்து அதிர்கிறாள்.

நல்லதொரு கரு. வெளிநாட்டு மோகத்துடன் இயங்கும் தன்னல நோக்கங் கொண்ட மாந்தர்களை யதார்த்தமாகத் தோலுரித்துக் காட்டும் - மெல்லிய எள்ளலுடன் கூடிய உரையாடல். பிசிறில்லாத பாத்திரப் படைப்பு. கணேஸ்வரனின் சிறப்பான நடிப்பு - யாவுமிருந்தும் நாடகம் பூரண நிறைவை அளிக்கமுடியாமற் போனமைக்கான காரணம் சோமண்ணையாக நடித்த கே.ரி. சிவகுருநாதனின் தெளிவில்லாத குளறல் தொனியுடன் கூடிய இழுவல் நடிப்பாகும். தனது பாத்திரத்தை உள்வாங்கி கணேஸ்வரன் மிக இயல்பாக நடித்து நாடகத்தை உயர்த்த முயல - சோமண்ணை வசனங்களைத் தின்று தொலைத்து அவரையும் கவிழ்த்து விட்டார். கே.டி. எஸ்ஸுக்கு ஓர் அன்பான வேண்டுகோள். தயவு செய்து எழுதுவதுடன் நிறுத்திக் கொண்டால் பெரிய புண்ணியம். பிற்பகுதியில் யமுனா சர்வானந்தா ஏனோ சோர்ந்து போய் விட்டார். புஷ்பராணியும் ஜெயரஞ்சனும் நிறைவாகவே செய்தார்கள்.

யாழ்ப்பாணத்தவரின் தற்போதைய இடர் மிகு வாழ்க்கை பற்றி வழமையாக நாடகங்களில் இருட்டடிப்பு செய்யப் பட்டு விடும். ஆனால், அதிசயமாக இதில் துணிந்து சில சங்கதிகள் பேசப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் வானொலியாரின் மௌனம் கொஞ்சம் கலைந்திருக்கிறதெனலாம். புதிய எழுத்தாளரான பளையூர் சுந்தரம்பிள்ளை நிச்சயம் பாராட்டுக்குரியவர்.

*புதிய தீர்மானங்கள்:*

ஆறாவது நாள் ஒலிபரப்பான 'புதிய தீர்மானங்கள்' கே.டி. சிவகுருநாதன் எழுதியது. முன்னாள் காதலியை மறக்க முடியாத காரணத்தால் ஒருவனது குடும்பவாழ்வு சீர்குலைவதும் அதைச் சீர்செய்ய நண்பனொருவன் முனைவதும் - மீண்டும் பழைய காதலியின் சந்திப்பும் - அவள் மனோதத்துவ டொக்டர் ஒருவரின் மனைவியாக வாழ்வதும் - புதிய தீர்மானத்துக்கான அத்திவாரம் அவள் மூலம் போடப்படுவதும்தான் கதை.

வழமையான ஒரு தமிழ்ச் சினிமாப் பாணிக் கதை. தோற்றுவிக்கப்பட்டு அவிழ்க்கப்படும் முறை நன்றாக உள்ளது. கதாநாயகன் ரவியாக - அருணா செல்லதுரை, உணர்ச்சிக் குமுறல்கள் திறம்பட வெளிப்படுத்தி பாத்திரத்திற்கு உயிரூட்டினார். குமுதினி, செல்வசேகரன் ஆகியோரது நடிப்பும் குறைசொல்ல முடியாதவை. ரேகாவாக நடித்த நாகராணி நடிப்புப்பற்றிப் 'புதிய தீர்மானம்' தான் எடுக்க வேண்டும்.

இறுதி நாளில் ஒலிபரப்பான நாடகம் 'ஒரு பனிப்போர் முடிவடைகிறது' எழுதியவர் ஜி.பி. வேதநாயகம். ஒரு சிறு சந்தேகத்தால் கணவன் - மனைவிக்கிடையில் ஏற்படும் விரிசலே கதையின் கருப்பொருள். இந்நாடகத்தின் சிறப்பம்சம் உரையாடலும் தொய்வில்லாத சம்பவத் தொகுப்புக்களும், நகைச்சுவை இழையோடும் இயல்பான எளிமையான வசனங்கள். கதையின் முடிச்சு அழகாகப் போடப்பட்டு அவிழ்க்கப்படும் விதத்தில் சாதுர்யம் தெரிகிறது. அனாவசியமான 'இழுவல்' சமாசாரங்களில்லை, விறுவிறுப்புக் குன்றாமல் வேகமாகவே செல்லும் இந்நாடகத்தில் பாத்திரவார்ப்பும் கச்சிதமாகவே அமைந்திருப்பதால் நடிப்புக்கான சந்தர்ப்பமும் நிறையவே இருக்கிறது.

துரதிர்ஷ்டவசமாக யாழ்ப்பாணத் தமிழைப் புதுவிதமாகச் 'சொல்லும்' ஒரு சில நடிகைகளின் வாயில் புகுந்து புறப்பட்டமையால் உரையாடல்கள் ஜீவனிழந்து போயின. தயாரிப்பு தரமாக இருந்தது. இவ்வொரு நாடகத்தில் மட்டுமே நடிகர்கள் எவரும் தடுக்கி விழாமல் ஒழுங்காக வாசித்தார்கள்.

கடைசி இரு நாடகங்களும் முதலிரு நாடகங்களும் மட்டுமே குறிப்பிட்ட கால எல்லையைத் தொட்டன. மற்றவை 35 - 40 நிமிட நேரங்களுள் முடிவடைந்தன.

மொத்தத்தில் நாடக விழாவில் இடம் பெற்ற நாடகங்கள் ஏமாற்றமளிப்பனவாகவே இருந்தன. வழமையாக சனிக்கிழமைகளில் ஒலிபரப்பப்படும் நாடகங்களை விட எவ்விதத்திலும் இவை சிறப்பானவையாக இருக்கவில்லை. சொல்லப்போனால் பரிசுபெற்ற நாடகங்கள் தரம், தயாரிப்பு, நடிப்பு எனும் அனைத்து அம்சங்களிலும் நாலாந்தரத்தனவாகவே இருந்தன எனலாம்.

ஒலிபரப்பானவற்றுள் கொஞ்சம் தரமானவை; 'துறவு', ஒரு பனிப்போர் முடிவடைகிறது, 'புதிய தீர்மானங்கள்' போன்றன. விடுபட்டுள்ள ஏனைய நாடகங்களுள் தரமான சில நாடகங்களும் இருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.

மலையக, மட்டுநகர் வழக்கு நாடகங்களோ இலக்கிய நாடகங்களோ ஒன்றேனும் தெரியப்படாத காரணமெதுவோ? திறமையான நாடக நடிகர்களுள் இன்றும் இலங்கையில் இருந்து வரும் நடராஜசிவம், ராஜகோபால், மார்க்கண்டு, வேதநாயகம், மயில்வாகனம், போன்றோர் ஓரங்கட்டப்பட்டுள்ளனர் போல் தெரிகிறது.

தங்களை வென்ற ஜாம்பவான்கள் இல்லையென்று தங்களைத் தாங்களே முதுகில் தட்டிக்கொள்ளும் ஒரு சிலரின் ஆதிக்கத்தின் கீழ் இந்நாடகக்கலை நலிவுறுவது வேதனைக்குரியது.

நாடக அரங்கு வளர்ந்தோரின் 'சிறுவர் மலராக' மாறிவருவது ஆரோக்கியமானதல்ல. புதியவர்களுக்கு வாய்ப்பளித்துப் பழையவர்கள் ஒதுங்கிக் கொள்வார்களாயின் சில வேளை தமிழ் வானொலி நாடகக்கலை தப்பிப் பிழைக்கலாம். தங்கள் குரலைத் தவிர ஏனையவர்களின் குரலைக்கேட்கச் சகிக்காத வானொலிக்காரர்களுக்கு இதுவும் காதில் விழாமல் போகலாம்.

**சித்திர புத்திரன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தயிர்ச் சட்டியின் வடிவத்தில் வானில் கிடந்தது நிலா. கொட்டி வைத்த இடத்தில் சற்று நேரம் இசகாமல், பிசகாமல் உறைந்திருக்கும் எருமைத் தயிரைப்போல் ஆடாமல் இருந்தது அதன் வடிவம். வெண்ணிற மேகங்கள் நிலவை மூடி மூடி ஆலிங்கனம் செய்கையில் உறை தயிரின் பாலாடையோ என வியக்க வைத்தது அதன் அழகு.

தூரத்தே சீறும் கடலின் சீற்றம் துல்லியமாய் கேட்டது. முற்றத்தில் நிற்கும் ஜேம்மரம் பழுத்து அதன் சிவப்பு நிறப்பழங்கள், நிலாவொளியில் கொச்சிப்பழமாய் தெரிந்தன. சற்றுத் தள்ளி நிற்கும் மாமரத்தின் பூக்கள் காற்றுக்கு உதிர்ந்து ஓலைக் கூரைக்கு மேல் நச்சென்று விழுந்தன. சம்பந்தமில்லாமல் நாய்கள் ஊளை யிடுவதும், தனகித் திரிவதும், ஒழுங்கைக்குள் ஒன்றையொன்று துரத்திக் கடிப்பதும் மிகத் தெளிவாகத் தெரிந்தது.

மூத்தம்மா வரும் வரை நான் பந்தலின் கீழ் தொங்கிய ஊஞ்சலில் இருந்தேன். ஏன் மடிக்குள் சின்னத் தங்கச்சி இருந்தாள். மஞ்சோனா மரத்தில் பக்குல் கத்தியது. பயத்தில் உறைந்தது போய் ''மூத்தம்மோய்'' என்றேன். ''என்னமனெ இந்த பக்குல துரத்துகா'' ஒரு சிரட்டையில் நெருப்புத் தணலை நிறைத்துக் கொண்டு வெளியே வந்தா, பந்தலின் கீழ் அதை வைத்து விட்டு உப்புக் கட்டிகளை நெருப்புத் தணலின் மேல் போட்டா. பட் பட்டென பெரும் சத்தத்துடன் வெடித்தது. பக்குல் பறந்ததாக தெரியவில்லை. எனினும் அது கத்துவதை நிறுத்திக் கொண்டதில் எனக்குத் திருப்தி.

மறுபடியும் மூத்தம்மா குடிலுக்குள் நுழைந்து ஒரு துண்டுப் பாயுடன் வெளியே வந்தா. மஞ்சோனா மரத்தின் கீழ் பாயை விரித்து சாய்ந்து கொண்டா. இலைகளுக்கிடையே நிலவொளி கசிந்தது. மூத்தம்மா எப்போதும் கால்களை நீட்டி ஒரு காலுக்கு மேல் மறுகாலையும் போட்டு ஆட்டியவாறு தான் அமர்ந்திருப்பா. வெற்றிலைப்பெட்டி அருகில் இருந்தது. படிக்கத்தை காணவில்லை. வெற்றிலையை இடித்துத் தூளாக்கும் சிறிய இடி உரலும் ஆணியும் கூடவே இருந்தன.

பாக்கை சீவலாக்கி அளவோடு ஏனைய கிராம்பு, சாதிக்காய் போன்றவற்றையும் சேர்த்து உரலில் போட்டு இடித்து துவையலாக்கித்தான் போடுவா.

ஊஞ்சலில் இருந்த நானும் தங்கச்சியும் மூத்தம்மாவின் விலாவில் போய் அப்பிக் கொண்டோம். நிலவு சற்று சரிந்திருந்தது. 'பெக்டரி' விசில் சத்தம் கேட்டது. ''எத்தின மணிகா'' என்றேன். ''ஒன்பது மணி'' என்றா. இந்த விசில் சத்தமே ஒரு வகையான கிலியை உண்டு பண்ணும். அடிவயிற்றில் உரல் உருளுவதைப்போல இதைக்கேட்கும் போதெல்லாம் நெஞ்சுக்குள் உதைக்கும்.

மூத்தம்மா வெற்றிலை எச்சிலை சற்று தள்ளி மண்ணைக் கெல்லி துப்பிக்கொண்டா. மஞ்சோனா மரத்திலிருந்து இப்போது தான் பக்குல் பறந்து போகிறது. போடியாரின் வீட்டு மாமரத்திலிருந்து அது கத்துவது கேட்டது. ''ஏன்கா ராவயில மட்டும் பக்குல் கத்துது'' அடக்க முடியாமல் கேட்டேன். ''அது மனே நம்மட ஊருக்குள்ள குடும்பத்துக்க ஆராவது மௌத்தாகப் போறாங்கண்டு சொல்லுவாக, அதான் இந்த பக்குல் வாசலுக்கு வாசல் கேவித்திரியுதாம்.'' ''அப்ப ஏன்கா நம்மட உம்மா மௌத்தா போன அண்டக்கி இது கத்தல்ல. கத்திருந்தா நும்மட உம்மா ஊட்டுக்கு ஒளிச்சி வச்சிருக்கலாம் ஏன்கா''.


மூத்தம்மா என்னை இறுக அணைத்துக் கொண்டா. தங்கச்சி அவட மடிக்குள் விழுந்து தூங்கிக் கொண்டிருந்தாள். வாப்பா புதுசா ஒரு உம்மாவை கொண்டு வந்தார். மூத்தம்மாவை பிரிந்து போக விருப்பமில்லை என்பதால் எங்களை இவ்விடமே விட்டுவிட்டார்.

கொல்லைப்புறத்தில் கட்டியிருக்கும் மாடுகள் இரண்டும் மூச்சுவிடும் சத்தம் கேட்டது. நுளம்பு கடிக்காமல் அதுகளுக்கு மூத்தம்மா புகை மூட்டியிருந்தா. கொட்டிலுக்குள் மாடுகள் வாலால் 'விசிக் விசிக்'கென்று நுளம்பு விரட்டும் மெல்லிய சத்தம் கேட்டது. மூத்தவாப்பாவின் வண்டில் ஓரமாய்க் கிடந்தது. மேலே கம்பு வளைத்து கிடுகு மேய்ந்திருந்தார். வண்டியின் கீழ் அரிக்கன் லாம்பு பிரகாசமாய் தொங்கியது. நேற்றும் அவருடன் விறகெடுக்க காட்டுக்கு போயிருந்தேன். மழைக்கும், வெய்யிலுக்கும் தாக்குப்பிடிக்கவே கூடாரமடித்திருப்பதாக தனது, வண்டியைப் பற்றி பெருமைபேசிக்கொண்டு வருவார்.

சுருட்டுப் புகைப்பார். நான் ஓரத்தில் போய் இருந்து கொள்வேன். ''வாவன்டா மனெகிட்ட'' கூப்பிடுவார். சுருட்டு நாத்தம். மூக்கைச் சுழிப்பேன். தன் வாயில் இருக்கும் யாழ்ப்பாணப் பாணிச்சுருட்டை தூர வீசுவார். காட்டுக்குள் வெகுகுஷியாய் விறகு பொறுக்குவேன். விளாம்பழம் குவிந்திருக்கும். சில சமயங்களில் நாகப் பழமும் பழுத்துச் சொரிந் திருக்கும். வண்டிலின் கீழ் தொங்கும் குட்டிச்சாக்கில் அவற்றைப் பொறுக்கிப் போட்டுக் கொள்வேன். மூத்தம்மா நாகப்பழத்தை உப்புத்தண்ணீரால் கழுவித்தருவா. ருசியாய் இனிக்கும்.

மூத்தவாப்பாவிடம் ஒரு 'வட்டுவும்' இருக்கும். மேல் வாய் சுருங்கி இருபக்கமும் நாடாவை இழுக்க அகன்று கொள்ளுமாப்போல் அதை வைத்திருப்பார். அதற்குள் வெற்றிலை பாக்கு சாமான்களைப் போட்டு எந்நேரமும் தோளிலேயே மாட்டிக் கொண்டிருப்பார். றகுமா மாமியின் பாணிச்சேவல் கூவுது. இது இப்படித்தான் நேரந்தெரியாமல் கூவிக்கொண்டே இருக்கும். மூத்தம்மா கதைசொல்லவும் இல்லை. அதனால் எனக்கு தூக்கம் வரவுமில்லை. எனது தலையைத் தடவிக் கொண்டும் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டும், ஏதோ யோசனையில் இருந்தா. மூத்தவாப்பாவின் இருமல் கூட்டுக் கரத்தைக்குள்ளிருந்து கேட்டது. மனுஷன் அந்த வண்டிலுக்குள்ள தான் எப்பவும் தூங்குவார்.

''கத சொல்லன்கா'' சிணுங்கினேன். ''இப்ப ஏலாமனே நேரம் பெய்ட்டு நாள ராவக்கி சொல்றன், வா படுப்பம்.'' சாக்கு கட்டிலை விரித்து என்னை படுக்க வைத்து துப்பட்டியால் போர்த்தி விட்டா. அவ கீழே தங்கச்சியுடன் படுத்துக்கொண்டா. கால் மாட்டில் உம்மா வந்து நிற்பதைப் போல் தெரிந்தது. நிழல்மாதிரி அசைவதும்கிட்ட வருவதைப்போலவும் தெரிந்தது. ''மூத்தம்மோய் நானும் கீழே படுக்கன்'' வியர்த்துக் கொட்டியது. மூத்தம்மாவை இறுக அணைத்துக் கொண்டு கண்களை மூடினேன். என் கனவு நிறைய உம்மா வந்தா. கூப்பிட்டா, கட்டிப் பிடித்து கொஞ்சினா, விடிய விடிய இப்பிடித்தான்.




மூத்தம்மா செவத்தாள் பசுவில் பால் கறப்பதை பார்ப்பதற்கென்றே நான் அதிகாலையில் எழுந்து கொள்வேன். தொடையை தட்டி கால்களை அகல நட்டு வைப்பா. செவத்தாள் அசையாமல் நிற்கும். முலைகளை கழுவி விடுவா. குந்திக்கொண்டு அவவின் முழங்கால்களுக்கிடையில் வாளியை இடுக்கியவாறு ஒவ்வொரு முலைக்காம்பாய் மேலிருந்து கீழ் இழுத்து நுனியை நசுக்கி விடுவா. கிர் கிர்ரென்ற ஓசையுடன் விழும் பால். கொதிக்க வைத்து பெரிய கிளாசில் ஊற்றி உள்ளங்கையில் சீனியைக் கொட்டி எனக்கும் தங்கச்சிக்கும் தருவா. சுவையாய் இருக்கும்.

இன்றைக்கென்னவோ செவத்தாள் பால் கறக்க விடவில்லை. உதைத்துக் கொண்டும் மூத்தம்மாவைப் பார்த்து தலையை சிலுப்பி சீறிக்கொண்டும் நின்றது. என் மூத்தம்மாவை நினைக்கையில் எனக்குப் பெருமை வரும். சுருக்கம் விழுந்தாலும் என்ன மிடுக்காய் நடக்கிறா. பால் கறப்பதிலிருந்து மாட்டுக்குத் தீனி போடுவது வரை ஒரு மிருக வைத்தியரைப்போல் நடந்து கொள்கிறா. அரிசி இடித்து மாவாக்கி ரொட்டியோ, பிட்டோ தின்னத் தருகிறா. பனை மரத்தின் ஓலையை சீவி விதம் விதமாய் பெட்டியும் தட்டும் செய்கிறா.

ஒரு நோய் வந்தா ஆஸ்பத்திரி மருந்து என்று அலைய மாட்டா. ஆடாதோடையும் கொத்தமல்லியும் அவித்துக்குடித்து எழுந்து நடக்குறா. அக்கம் பக்கத்தில் நோய் விழுந்தாலும் ஓடிப்போய் வைத்தியம் செய்வா. ஊரில் எது நடந்தாலும் மூத்தம்மா தான் முன்னுக்கு நிற்பா. பெண்கள் மௌத் தாகினால் குளிப்பாட்டவும் கபனிடவும் மூத்தம்மா வைத்தான் முன்னுக்கு விடுவார்கள். ஊருக்கு பொதுமனுஷியா எல்லோருக்கும் தேவைப்படும் ஆளாய் மூத்தம்மா கருதப்பட்டா. நானும் மூத்தவாப்பாவும் காட்டிற்குப் போய் ஆமணக்கு கொட்டை பொறுக்கிக் கொடுப்போம். அதை உருக்கி எண்ணெயாக வடிப்பா. உளுவரிசியும் நன்னாரி வேரும் கலந்து ஊறப்போட்டு, அந்த எண்ணெ யைத்தான் தலைக்குத்தேய்ப்பா. நல்ல கருப்பா இருக்கும் மூத்தம்மாவின் முடி.

ஒரு நாள் கூட இடுப்பு வலி, கைவலி என்று படுக்கை யில் சுருண்டது கிடையாது. சதா எந்நேரமும் எதையா வது செய்து கொண்டிருப்பா. மூத்தம்மாவுக்கு பிள்ளை என்று உம்மா மட்டும் தானாம். அவவின் காதில் பெரியதோடுகள் மேலிருந்து கீழ் வரிசையாய் தொங்கும். கேட்டா ''அல்லுக் குத்து'' என்பா. மூக்குத்தி, கழுத்தில் கருகமணிமாலை, கையில் அகலக்காப்பு என அமர்க்களமாய் இருப்பா. புராண காலத்து ராஜபரம்பரை பற்றியும் அரசிகள் வாழ்வு பற்றியும் பள்ளிக்கூடத்தில் கதைசொல்லும் போது எனக்கு மூத்தம்மாவின் நினைவு வரும். இவவும் ஓர் அரசியாய் எனக்குத் தோன்றும். மூத்தவாப்பாவுக்கும் இவவுக்கும் தர்க்கம் ஏற்படுவதெல்லாம் அது இவவின் சுய வேலையில் அவர் தலையிட்டிருப்பார் என்பதைத் தவிர வேறொன்றுமிருக்காது.

நானும் மூத்தம்மாவைப் போல் சுயமாய் ஓர் இளவரசனாய் இயங்க விழைந்தேன். உன்னிப்பாக அவவைக் கவனித்தேன். எந்தக் காரிருளையும் கிழித்துக்கொண்டு குடு குடுவென நடக்கும் மனோ தைரியம் அவவுக்கு. நானும் அவ்வாறு நடந்து பார்த்தேன். பயம் வரவில்லை. மஞ்சோனா மரத்தின் கீழ் தனியே இருக்கப் பழகினேன். மூத்திரம் முடுத்தால் மூத்தம்மாவை எழுப்பிக்கொண்டு போக வில்லை. ஆந்தை முக்கினாலும் பக்குல் கத்தினாலும் ஓடிப்போய் உள்ளுக்கு முகம் குப்புற படுக்கத் தோண வில்லை. இந்த ராஜ்யத்தின் அரசியைப் போல் நானும் படிப்படியாய் இளவரசனானேன். அவ்வப்போது அச்சம் வரும். கூடவே மூத்தம்மாவை சடுதியாய் நினைப்பேன். புஜங்கள் புடைத்து மோதி முட்டி பெயர்ப்பதற்கு துடித்து நிற்கும் எருதாய் உரம் வரும்.

பாடசாலை விட்டு வந்துகொண்டிருந்தேன். மூத்தம்மா காலையில் தேய்த்து விட்ட எண்ணெய் வெய்யிலுக்கு உருகி முகத்தில் வழியவாரம் பித்தது. படலையைத் தள்ளினேன். திண்ணையில் தெரிந்தா. தங்கச்சியை மடியில் வைத்து சோறு தீத்திக் கொண்டிருந்தா. அவவின் முகம் வாடிப்போய் இருந்தது. எனக்கும் சோறு போட்டுத் தந்தா. என்று மில்லாதவாறு மஞ்சோனா மரத்தின் கீழ்ப்போய் அமர்ந்து கொண்டா.

''ஏன்கா ஒரு மாதிரியாய் இருக்காய் சொகமில்லையா?'' ''ஓம்மனெ காய்ச்சாலா இருக்கு, நீ போய் கடயில ஒரு ஊறல் பக்கட்டு வாங்கிட்டு வா'' ஊறல் போட்டு குடித்துவிட்டு இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்துவிட்டா. இன்று தான் நோய் என்று பாயில் சுருண்டிருப்பதை பார்க்கிறேன். இனந் தெரியாத அச்சம் என்னைக் கவ்விக்கொண்டது. மூத்தவாப்பா குளிர் காய தீ மூட்டினார். அண்ணாவி மாமா வந்து ஊதிப்பார்த்தார். ''உச்சவுட கல்லு அவ்வுலியா''வுக்கு மூத்தவாப்பா நேர்ச்சை வைத்து மூத்தம்மாவின் கையில் ஒரு வெள்ளைத்துணியில் குற்றியை சுற்றிக் கட்டினார். மூத்தம்மாவின் விலாவில் நான் பிசகாமல் நின்றிருந்தேன். தங்கச்சி தன் பிஞ்சு விரலால் அவவின் நெற்றியை தடவிக் கொண்டிருந்தது.

மூத்தம்மா தங்கச்சியை வாரியணைத்து அழுதா. மறுநாள் வழக்கம் போல் எழும்பி, என்னையும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினா. என்றுமில்லாதவாறு என்னை இறுக அணைத்து கொஞ்சினா. பவுடர் போட்டு விட்டா.

இடைவேளை நேரம் யாசீன் பாவாட தோட்டத் திற்குள் நண்பர்களுடன் இருந்தேன். ''டேய் காசீம் உன்ட மூத்தாப்பா வந்திருக்காரு உன்ன வரட்டாம். கையிலிருந்த முந்திரிப் பழங்களை போட்டுவிட்டு ஓடினேன். முத்தவாப்பா 'கென்டினடி'யில் தளர்ந்து போய் நிற்பது தெரிந்தது. ''புத்தகத்த எடுத்திட்டு ஊட்ட வாமனெ'' ''பள்ளிக்கூடம் வுடலியே'' இழுத்தேன். ''நான் சேருகிட்ட செல்லிட்டன். நீ வாவன், அவசரமா ஒரு வேல இரிக்கி'' அவரைப்பின் தொடர்ந்தேன்.

வீட்டை நெருங்க நெருங்க வாசலில் சனங்கள் கூடியிருப்பதும், இன்னுமின்னும் வருவதுமாய் தெரிந்தது. மூத்தாம்மாவுக்கு காய்ச்சல் உரம் போல. முந்திரிக் கசறு வெள்ளை சேர்ட்டில் மறுப்போட்டி ருந்தது. கண்டா மனுஷி ஏசுவா, புத்தகத்தால் அதை சாதுர்யமாய் மறைத்துக்கொண்டே நுழைந்தேன். றகுமா மாமி ஓடிவந்து புத்தகங்களை வாங்கிக் கொண்டா. தங்கச்சி விரல் சூப்பிக்கொண்டு அங்குமிங்கும் ஓடித்திரிந்தது. றகுமா மாமி என் கையைப்பிடித்து ''வா மகன் மூத்தம்மாவ பாத்துட்டு வா உள்ளே ஓடிப்போனேன். குப்பென்றடித்தது சாம்பிராணி வாசம். வெள்ளைத்துணி உடுத்தி மூத்தம்மா தூங்கிக்கொண்டிருந்தா. ஓடிப்போய் அவவின் கால்களைக் கட்டிக் கொண்டேன். ''இஞ்ச எழும்பன்கா, எழும்பன்'' கத்தினேன். ''இஞ்சால வா மகன் மையத்த தூக்கப் போறாக'' என்னை இழுத்துக்கொண்டு வெளியே வந்தா றகுமா மாமி. மூத்தம்மா மௌத்தாகவில்லை. மூடி முக்காடிட்டு மூத்தப்பாவின் கூட்டுக் கரத்தையுள்ளிருந்து போவதாய்ப்பட்டது.

சந்தூக்கின் பின்னால் ஓடிச் சென்றேன். ''மனெநீ வெய்யிலுக்க வராம தங்கச்சிய பார்த்துக்க'' மஞ்சோனா மரத்திடியில் சுருக்கென்று நின்று கொண்டேன். நெஞ்சு வலித்தது. இளவரசனான நான் குலுங்கிக் குலுங்கி அழுகின்றேன். என்னை திரும்பிப் பார்க்காமல் மூத்தம்மா போய்க்கொண்டிருந்தா. ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முஸ்லிம் கிராமத்தில் காடைத்தனம்! மாகாணசபை உறுப்பினர் கைவரிசை!

அரசியல் வன்செயலற்ற, சர்வாதிகாரமற்ற சனநாயக சமூகத்தை உருவாக்குவதாகக் கூறி மக்கள் மத்தியில் அங்கீகாரம் பெற்ற பொதுசன முன்னணி அரசாங்கம் அரசியலில் அராஜகத்தையே மிஞ்சவைத்துள்ளது. இதற்கு இன்னொரு உதாரணம் நாம்புளுவ பஸ்யால பகுதியில் அமைந்துள்ள கெப்பிடிகொல்லவத்தையில் நடைபெற்ற வீடு எரிப்பு, சொத்து பறிமுதல் நிகழ்வுகளாகும். இக் கொடூரமான சனநாயக விரோத சம்பவங்களில் மேல் மாகாண சபை பொதுசன முன்னணி உறுப்பினர் பிரேமசந்திர ரணவீர ஆனந்த அவர்களின் நேரடிப் பங்களிப்பு காணப்பட்டது எனச் சொல்லப்படுகின்றது.

மேற்படி சம்பவம் தொடர்பாக முக்கியமான விபரங்களை பாதிப் படைந்த இரிபதுல் கைரிய்யா (வயது 65),எம்.எச். எம் நஸீம் (வயது 18) ஆகியோர் தெரிவிக்கையில் இந்தத் தோட்டம் குருநாகல பெருந்தோட்டத்துறை கம்பனிக்குச் சொந்தமானது. இந்நிலம் இப்போது கைவிடப்பட்டுள்ளது. பாவனைக்கு உதவாத இப் பகுதியினை வாழ்விடத்துக்காக பயன் படுத்துவதற்கு நாம் கோரி இருந்தோம். அக்கம்பனியும் நிலத்தை தந்துதவ முன்வந்தது. இது முன்னைய அரசாங்கத்தின் கீழ் நடந்தது. இதன் பிரகாரம் நாம் உத்தியோகபூர்வ அனுமதியுடன் தற்காலிக இருப்பிடங்களை செய்து முடித்தோம். 96 உபபகுதிகளாக பிரிக்கப்பட்ட கெப்பிடிகொல்லவத்தையின் இன்னொரு பெரும் பிரிவு வாசலயாகும். இந்தப் பெரும் பிரிவுப் பகுதியில் சிங்களவர்கள் பிற இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்டு குடியேற்றப்பட்டுள்ளார்கள். சிங்களவர்கள் வாழும் இந்தப் பகுதியில் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. 96 உப பிரிவுகளாகப்பிரிக்கப்பட்டு 96 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நிலப்பகுதியில் 40 முஸ்லிம் குடும்பங்கள் குடியேறி உள்ளன. இவர்கள் முறையே கொழும்பு, கொட்டியாகும் பரமல்வான போன்ற பகுதிகளில் இருந்து வருகை தந்த கஷ்டப்படும் முஸ்லிம்கள் ஆவார்கள். நாம் சிறிது காலம் பிரச்சினைகள் இன்றி நிம்மதியாக வாழ்ந்து வந்தோம் ஆயினும் நாம்புளுவ,பஸ்யால பகுதியில் வேரூன்றியுள்ள இஸ்லாமிய மதப் பிரிவினரான இஹ்வதுல் முஹ்மினீன்களின் அதிகாரப் போராட்டம் எமது சௌஜன்ய வாழ்வினை சீர் குலைத்தது. இப்பகுதியில் குடியேறிய எம்முடன் அவ் இஸ்லாமிய மதப்பிரிவினர் வஞ்சகம் கொண்டே செயல்பட்டனர். ஊரில், மஸ்ஜிதில் தமது ஆதிக்கம் குறைந்து விடும் என்ற அவர்களின் குறுகிய அச்சம் தான் அரசாங்க உறுப்பினர் ஆதரவுடன் நடைபெற்ற இச்சம் பவங்களின் பின்னணியாகும். எம்மை புலிகள் என்று குற்றம் சாட்டினார்கள். நாம் தமிழர்களுக்கு ஆதரவானவர்கள் என்று பிரச்சாரம் செய்தார்கள்.

இதன்பிறகு செப் 18 அன்று மேல் மாகாணசபை பொதுசன முன்னணி உறுப்பினர் பிரேமச்சந்திர ரணவீர ஆனந்தவும், அவரது கையாட்களுமாக முஸ்லிம் குடியேற்றவாசிகளது இருப்பிடங்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் இதில் மேல் மாகாண சபை உறுப்பினர் நேரடியாக பங்கு கொண்டார் இத்துப்பாக்கி பிரயோகத்தில் எவரும் மரணமாகவில்லையாயினும் சபீனா சில்மியா (வயது 16) என்ற பெண்பிள்ளை பலத்த காயங்களுக்குள்ளாகி 'வதுபிடிய' அரசாங்க ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டுள்ளார். இக்கோரச்சம்பவம் பொலிஸுக்கு அறிவிக்கப்பட்டது. ஆயினும் எந்தவொரு பாதுகாப்பு நடவடிக்கைகளும் பொலிஸாரால் உடனடியாக எடுக்கப்படவில்லை.

இச்சம்பவங்களின் தொடர்ச்சியாகவே ஏப் 2 சம்பவம் நடந்தது. இதுவே எமது இருப்பை கேள்விக்குள்ளாக்கியது. (சம்பவ இடத்துக்கு பகல் 2.00 மணியளவில் மேல்மாகாண சபை பொதுசன முன்னணி உறுப்பினர் தனது கையாட்களுடன் வருகை தந்தார். ஒருகையில் கைத்துப்பாக்கியையும் மறுகையில் 'செல்டல்' தொலைபேசியையும் வைத்துக் கொண்டே மேல் மாகாணசபை உறுப்பினர், வீடுகளில் இருந்து சகலரையும் வெளியேறுமாறு மிரட்டினார்.

''இது அத்தனகல்ல ஜனாதிபதியின் தொகுதி, இது எங்கள் அரசு'' எனக்கூறியபடியே வீடுகளை கையாட்களைக் கொண்டு தகர்த்தெறிந்தார். இதனைத் தடுக்க சூழவுள்ள முஸ்லிம் கிராமவாசிகள் முனைந்தனர். முனைந்தவர்களை நோக்கி மேல் மாகாண சபை உறுப்பினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். இச்சம்பவம் நடந்தேறிக் கொண்டிருக்கும் போது நிட்டம்புவ பொலிஸாருக்கு பல தடவைகள் முறையீடுகள் தொலைபேசி மூலமாகவும் நேரடியாகவும் கொடுக்கப்பட்டன. ஆனால் உடனடியாக சாதகமாக எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. 96 உப பிரிவுகளில் 40 வீடுகள் தற்காலிகமாக கட்டப்பட்டிருந்தன. இதில் 5 வீடுகள் முற்றாக உடைத்து தீர்க்கப்பட்ட நிலையில் ஆறாவது வீடு சேதப்படுத்தப்படும் போது நிட்டம்புவ பொலிஸார் மாலை 4 மணியளவில் ஸ்தலத்துக்கு வருகை தந்தனர். பொலிஸாரை நோக்கி மேல் மாகாண சபை பொதுசன முன்னணி உறுப்பினர் திரும்பவும் ''இது அத்தனகல்ல, ஜனாதிபதியின் நாடு இது, இது எங்கள் அரசு'' என்று கூறியவாறே மீண்டும் வீடுகளைச் சேதப்படுத்தினார்.

இந்நிலையில் பொலிஸார் வீடுகளைச் சேதப்படுத்துவதனை தடுக்குமாறு உறுப்பினரை வேண்டினர். ஆனால் மேல் மாகாணசபை உறுப்பினர் அதனை நிராகரித்தார். பொதுச் சொத்துக்களைத் தொடர்ந்து சேதப்படுத்தினால் துப்பாக்கிப் பிரயோகத்தை எதிர்நோக்க வேண்டிவரும் என்று எச்சரித்ததன் பின்னரே மேல்மாகாண சபை உறுப்பினர் தனது செயற்பாடுகளை நிறுத்திக் கொண்டார். இந்த மோசமான சம்பவங்களால் சம்பந்தப்பட்ட மக்களுக்கு எட்டு இலட்சத்துக்கு மேலாக நஷ்டம் ஏற்பட்டுள்ளது.





இவ்வாறு நடந்த சம்பவத்தை இந்தப்பகுதியில் இஸ்லாமிய சமய அதிகாரத்துக்காக செயற்படும் **இஹ்வதுல் முஃமினின்** அமைப்பினரே மேற்படி கோரமான, மனித நாகரிகமற்ற சேதங்களுக்கு தூபமிட்டுள்ளார்கள் என்று இங்குள்ள முஸ்லிம்கள் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள்.

இஸ்லாத்தை தூக்கிப் பிடித்துள்ளதாக தம்மைத்தாமே கூறிக் கொள்பவர்கள் அந்நிய அரசியல்வாதிகளுக்கு கப்பம் கொடுத்து சகோதர முஸ்லிம்களையே பழிவாங்க நினைப்பது இஸ்லாமிய சகோதரத்துவமா?

பாதிப்படைந்த மக்கள் தற்போது இருப்பிடங்களை இழந்து பொது இடங்களில் தவியாய்த் தவிக்கிறார்கள்.

வட,கிழக்குக்கு வெளியே உள்ள முஸ்லிம்களுக்கும் தாமே பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ளும் முஸ்லிம் காங்கிரசும் இந்த விவகாரத்தில் மரண அமைதியை கடைப்பிடித்துவருவது குறித்து இங்குள்ள முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் அதிருப்தி அடைந்துள்ளார்கள்.

மத ஆதிக்கத்தைப் பலப்படுத்த அதிகார அரசியலைப் பயன்படுத்த முனைந்ததே கோர சம்பவங்களுக்கு காரணமென்று மிக மோசமாக பாதிப் படைந்து அகதிமுகாமில் வசிக்கும் எம் எஸ்.எம் காசீம் கூறி நின்றது. சம்பவங்களின் அகோரத்தை, மத உணர்வின் வெறியினை தெளிவாய் வெளிப்படுத்துகிறது.

-ஆர்.எம்.ஈ.எஸ்

# மூளைச்சலவையும் சுதந்திர சிந்தனையும்!

## ("-1" பங்காளிகளின் கட்டுரைக்கு ஒரு எதிர்வினை)

அரங்காடிகளின் '-1' நாடகம் பற்றி நான் தெரிவித்த கருத்துகளில் தமக்கு உடன்பாடற்ற கருத்துக்களை பற்றி -1 பங்காளிகள் சரிநிகரில் கேள்வி எழுப்பியிருந்தார்கள். அக்கேள்விகளுக்கு விளக்கமளிப்பதே இதன் நோக்கமாகும்.

நான் 'நச்சுக்கருத்துகள் குறியீட்டு நாடகத்தினூடாக மக்களை சென்றடைதலை எவ்வாறு தடுக்கலாம்' என்று பொதுவாக எல்லா நாடகவியலாளர்களையும் நோக்கியே கேள்வியைத் தொடுத்திருந்தேன். முதலாளித்துவத்திற்கு எதிரானதை மட்டும்தான் சமூகத்தில் நச்சுக் கருத்தாகக் கொள்ள முடியாது. சமூக உறவுகள், சமூகத்தின் தனிமனித உறவுகள், கலாசாரம், பண்பாடு இவைபற்றியும் நச்சுக்கருத்துகள் நாடகத்தினூடாகப் பரப்பப்படமுடியும். நான் மீண்டும் கேட்கிறேன் அவ்வாறு நச்சுக் கருத்துகள் ஒரு குறியீட்டு நாடகத்தில் இருந்தால் அதை மறைமுகமாக மக்களிடையே விதைக்க முனைந்தால், அதை இனம்காண்பது எப்படி? தடுப்பது எப்படி?

அரங்க அளிக்கை என்பது அரங்க நிகழ்வு, அதன் பின்பான கலந்துரையாடல், விமர்சனங்கள் எல்லாவற்றையும் சேர்த்துதான் என்பது உண்மை. ஆனால் அரங்க நிகழ்வு (நாடகம்) ஏற்படுத்தும் தாக்கத்தை ஏனையவற்றால் ஏற்படுத்த முடியாது என்பதும் உண்மை. அப்படியென்றால் வினாக் கொத்தினால் எழுப்பப்பட்ட வினாக்களை ஏன் (நாடக மூலம்) அரங்க நிகழ்வினால் எழுப்ப முடியவில்லை? பங்காளிகளின் கடந்தவாரப் பதிலில் இருந்து பங்காளிகளின் முக்கிய நோக்கமான 'மானிடத்தை உயர்த்தல்' இந்தக் கேள்விக் கொத்தினால் அடையப்படுவதாக உணரமுடிகிறது. அப்படியென்றால் அந்தப் பிரதான நோக்கத்தை அடைவதற்கு அரங்க நிகழ்வைப் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

அரங்க நிகழ்வு ஒரு குறித்த நோக்கத்துடன் குறித்த இடத்தில் முடிவடைகிறது. அதாவது அரங்க நிகழ்வுமூலம் ஒரு முடிவைச் சொல்லி விட்டு அதனைப்பற்றிப் பின்னர் கேள்வி எழுப்பப்படுகின்றது. இது' கிட்டத்தட்ட மூளைச்சலவை (Brain Wash) செய்துவிட்டு அவர்களிடம் இருந்து விடையை எதிர்பார்ப்பதற்கு சமனாகும்.

இன்றைய காலகட்டத்தில் வித்து என்ற ஒன்று உள்ளதா என்று கேள்வி எழுப்புவது பங்காளிகள் யதார்த்தமாகச் சிந்திக்கிறார்களா என்ற கேள்வியை எழுப்புகிறது. யதார்த்தத்திற்கு அப்பால் சென்று வலியுறுத்தப்படும் எந்த ஒரு கருத்தும் ஏன் நச்சுக் கருத்தாகக் கொள்ளப்பட முடியாது.

பங்காளிகள் நெறியாளரை நிராகரிக்கிறார்கள். ஆனால் நிச்சயமாக ஒரு வழிகாட்டி நாடகத்துக்கு இருந்திருப்பார். மூலக்கருவை யாரோ ஒருவர் தான் முன்வைத்திருக்கமுடியும். அதை யொட்டியே நாடகம் நகர்த்தப்பட்டிருக்கும் எனவே நாடகம் திசைப் படுத்தப்படுகிறது. மேலும் இவ்வாறான நாடகப் பட்டறை முறையிலான நாடகத்தில் ஒத்த கருத்துள்ளவர்கள் (அல்லது சொன்னதை திருப்பிச் சொல்லக் கூடியவர்கள்) மட்டுமே ஒன்று கூடுவார்கள். அப்படி என்றால், அந்தப் பத்துப் பேரின் கருத்து நச்சுக் கருத்து அல்ல என்று வாதிட முடியுமா? எல்லாவற்றிற்கும் மேலாக நான் அரங்க நிகழ்வின் முடிவில் -1 இல் நடித்த பெண் நடிகையை அணுகி சில விளக்கங்கள் கோரியபோது அவர் ஒரு குறித்த நபரைச் சுட்டிக்காட்டி, "அவர் கூறினார் நாங்கள் செய்தோம்" என்று கூறினார். (ஒருவேளை அவர் தான் தப்பிப்பதற்காக அப்படிக்கூறினாரோ என்று எனக்குத் தெரியாது) அந்தப் பெண்ணே அப்படிக் கூறுவார் என்றால், அந்தப்பாலகன்...... அவன் மனதில் நாடகத்தால் விதைக்கப்பட்ட கருத்துகள்?? (அவை நச்சுக்கருத்துகளாக இருந்தால்) ஆனால் '-1 பங்காளிகள், பங்காளிகளின் கருத்து சுதந்திரம் பற்றிக் கூறுகிறார்கள். இங்கே நான் பங்காளிகளின் நேர்மையை கொள்கையளவில் தவிர்க்க முடியாது கேள்விக்குள்ளாக்குகிறேன்.

எந்த ஒரு சந்தையும் திறந்த சந்தையாக இருப்பதற்கு கொள்கையளவில் கூட சில அடிப்படைக் காரணிகள் திருப்திப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் கட்டுப்பாடற்ற திறந்த சந்தை இறுதியில் முறிவடைந்து (Collapse) விடும். இது கருத்துக்களின் சந்தைக்கும் பொருந்தும். கருத்துக்களை பகுத்துணரும் நிலை. எல்லோராலும் எட்டப்படும் வரை எல்லாக் கருத்துக்களையும் சந்தையில் அனுமதிக்கக் கூடாது. தேவையேற்பட்டால், கருத்துகளைப் பகுத்துரைக்க கூடியவர்கள் - பிரித்தெடுக்க முடியுமாயின் - அவர்களுக்கிடையில் எந்த ஒரு கருத்தையும் அனுமதிக்கலாம். இதுதான் நடைமுறை சாத்தியம். இதைவிடுத்து மாக்ஸ் லெனின் ஜெப்ரி. தொம்சன் (Jeffry Thomson) கூறினார் என்று யதார்த்தத்திற்கு அப்பால் சென்று கொள்கைகளில் வாழ முற்படுவது அபத்தமானது.

பரிசோதனை முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டியவை. அதிகரிக்கப்பட வேண்டிய நாடக உலகு மாற்றங்களை வேண்டி நிற்கிறது. 'உண்மை' ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் பயிற்றப்படாத பங்காளிகள் இசையும் வகையில் மாற்றங்கள் நகர்த்தப்படவேண்டும். மக்களை நோக்கிப் படைப்புகள் செல்வதா? படைப்புகளை நோக்கி மக்கள் செல்வதா? என்றால் மக்களின் மட்டத்திற்கு படைப்பாளி இறங்கினால் படைப்பாளி வளரமுடியாது. படைப்புகள் எட்டாத உயரத்தில் இருந்தால் மக்கள் விளங்கிக்கொள்ள முடியாது. நிராகரித்து விடுவார்கள். எனவே படைப்புகள் சற்று உயரமாக மக்களுக்கு எட்டும் உயரத்தில் இருக்க வேண்டும். உண்மையில் சாதாரண ரசிகனுக்கு கொள்கரியே எட்டாத உயரம். விளங்குவதற்கு சற்று சிரமமாக இருக்கிறது. கொள்கரியே தேறா வடிவமாக இருக்கும் போது நாங்கள் கொள்கரியைக் கேள்விக்குள்ளாக்குகிறோம் என்கிறார்கள். பங்காளிகள் ஒரு பரிசோதனைக்கும் அடுத்தபடியை நோக்கிய மற்றைய பரிசோதனைக்கும் இடையில் இயன்ற அளவு கால இடைவெளியையும் சில படைப்புகளையும் வழங்குங்கள். பார்வையாளர்களையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். இதுதான் எனது கோரிக்கை.

இறுதியாக இவை எனது தனிப்பட்ட கருத்துக்கள். பங்காளிகளுடன் பரிமாறுவதற்காக எழுதப்பட்டவை. முடிந்த முடிபு அன்று. மேலும் எந்த ஒரு நல்ல கருத்தும், நல்ல படைப்பும் விமர்சனங்களுக்கு அப்பாலும் பிழைத்து வாழும் என்பது நடைமுறையில் இருந்து எழுதப்பட்ட விதியாகும். இது பங்காளிகளுக்கும் பொருந்தும்.

-டி.வி.ஆர்.எஸ்

பேராதனை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலையக வேலைநிறுத்தம்: உண்மையில் வெற்றியளித்ததா? அல்லது மாற்றுவழி ஒன்று தேவையா?

கடந்த சரிநிகர் இதழ்களில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து பல பத்திகள் வெளியாகியிருந்தன. அப்பத்திகள் ஆர்வத்துடன் தொழிலாளர் பக்கம் சார்ந்து இருந்தமை மகிழ்ச்சி அளித்தது.

பலரது பார்வையில் ''வேலைநிறுத்தம்'' பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை இருந்தது. ஆசிரியரின் பத்தி கூட அவ்வாறு தான் அமைந்திருந்தது. எனது அறிவுக்கு எட்டியவரை மலையக தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய ஆயுதமாக வேலை நிறுத்தத்தை இனி கையாள்வதில் தாக்கத்தை ஏற்படுத்த முடியாது.

சான்றாக முடிந்த வேலை நிறுத்தப் போராட்டத்தையே குறிப்பிட முடியும். ஆறு நாட்கள் வரை நீடித்த வேலை நிறுத்தத்தால் அரசுக்கோ, கொம்பனிகளுக்கோ நஷ்டம் ஏற்படவில்லை. பொருளாதார ரீதியில் நஷ்டம் ஏற்பட்டிருக்குமாயின், உடன் இவைகள் ஆராயப்பட்டிருக்கும். உண்மையான ஒரு தாக்கம் ஏற்பட்டிருக்குமாயின், தொழிலாளர்களின் கோரிக்கைகள் வெல்லப்பட்டிருக்கும்.

ஆறுநாட்களின் பின்னர் வந்த ஏழாவது நாளான ஞாயிற்றுக்கிழமை தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றனர். ஒரு நாள் ஊதியம் பெற தொழிலாளி ஒருவர் 20 கிலோ கொழுந்து பறிக்க வேண்டும். மேலதிகமாக பறிக்கப்படும் ஒரு கிலோவுக்கு 4/= தரப்படும் என்று பேராசை காட்டப்பட்டதும், வறிய தொழிலாளர்கள் 20 கி.கி. வரை பறித்தனர். தவிர ஆண் தொழிலாளர்களும் வளர்ந்த கொழுந்துகளை பறிக்கவே பயன்படுத்தப்பட்டனர். ஆறு நாட்களில் பெறப்பட வேண்டிய தேயிலைக் கொழுந்துகள் ஒரு வாரத்துக்குள்ளேயே பெறப்பட்டது. அரசாலும் கொம்பனிகளாலும் கூறப்பட்ட நஷ்டம் 90% மேல் சமப்படுத்தப்பட்டுள்ளது.

சில தோட்டங்களில் கோடை காரணமாக கொழுந்துகள் சரிவர வளரவில்லை. ஆறு நாள் வேலைநிறுத்த இடைவெளியில் கொழுந்துகள் செழித்திருந்தன. சாதாரண நாட்களில் கொடுக்கப்படும் கூலியைக்கொண்டே கூடுதலாக பறித்துக்கொண்டனர்.

எனவேதான், 'வேலைநிறுத்தத்தில்' ஒரு தாக்கம் ஏற்படப்போவதில்லை என்று கூறுகிறேன். அதேவேளை வேலை நிறுத்தத்தின் பின்னர் தொழிலாளர்கள் தமது சம்பள உயர்வு கூடும் வரை வேலை நிறுத்தநேரத்தை அல்லது பறிக்கப்படும் கொழுந்தின் நிறையை குறைப்பது என்று முடிவு செய்து நடைமுறைப்படுத்தி இருக்கலாம். அல்லது பெறப்பட்ட தேயிலைக் கொழுந்துகளை அரைக்க விடாமலோ, அல்லது அரைத்த தேயிலையை தாமே பகிர்ந்து எடுத்துக் கொள்வதன் மூலமோ கொம்பனிகளுக்கு அல்லது அரசுக்கு ஒரு பாடம் கற்பித்திருக்க முடியும்.

பறித்த கொழுந்தை அரைக்க விடாமல் அல்லது தேயிலையைத் தொழிலாளர்களே பகிர்ந்து கொள்வது காந்திய போர்வை போர்த்திய அட்டைகளுக்கும், பிழைப்புவாத தலைவர்களுக்கும் பயங்கரவாதமாக தெரியும் ,அப்படியே பிரச்சாரம் செய்யும்.

அல்லது வேலை நிறுத்த நாட்களை அதிகரிக்க வேண்டும். தமது உரிமைகள் கோரிக்கைகள் வெல்லப்படும் காலம் வரை நீடிக்க வேண்டும். ஆனால், இதற்கு இந்த வறிய தொழிலாளர்கள் ஈடுகொடுப்பார்களா என்பது சந்தேகம் தான்.

இலங்கைத்தீவில் நேற்று புதிதாக குடியேறிய சிங்களவருக்கு சொந்தமாக ஒரு வீடு காணி இருக்கும். அதை அடகு வைத்தாவது அவரால் பணம் பெறமுடியும். இரு நூற்றாண்டுகளை எட்டிப்பிடிக்கப்போகும் மலையகத் தோட்டத்தொழிலாளர்களுக்கு ''அடகு'' வைக்கவாவது என்ன இருக்கிறது? (முன்னைய அரசாங்கம் வீடு சொந்தம் என்றது. ''பழசும்'' ஆமாம் போட்டது. சொந்தமா என்வீடு? எதைக்கொண்டு உறுதி செய்வேன்?)

ஆக, பொருளாதார பலமே அற்ற, சரியான நேர்மையான அரசியல் தலைமைத்துவம் கிடைக்கப்பெறாத இந்தத் தொழிலாளர் படை தமது உரிமைகளையும்; கோரிக்கைகளையும் வென்றெடுக்க மாற்று வழி ஒன்றைப்பற்றி ஆராயவேண்டும். அல்லது வேலை நிறுத்தப் போராட்டத்தை மேலே சொன்னதைப்போலவோ அதை விடச் சிறப்பாகவோ திருத்தத்திற்கு உட்படுத்த வேண்டும். அது அவசரமானதும் அவசியமானதுமான ஜீவமரண யுத்தம்.

அடுத்து, சரிநிகர் 97வது இதழில் வேலைநிறுத்தப் போராட்டத்தின்போது பாதிவழியில் பாய்ந்து போன சந்திரசேகரன் பற்றிப் பல விதமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. சந்திரசேகரனின் பரிசுத்தம் பற்றி இப்போது தான் பலருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

சந்திரசேகரன் மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டது பற்றி சிந்திக்க வேண்டும். தோரணம், இசைக்கச்சேரிகள், பிரச்சார வேடிக்கைகள், வாக்குறுதிகள் என்பன நிறைந்ததொரு காலகட்டத்தில் போஸ்டரை மட்டும் பார்த்து வாக்களித்தனரே ஏன்? சந்திரசேகரனின் பேச்சைக் கேட்காத, ஏன் நேரடியாக முகத்தையே பார்க்காத பலர் பல எதிர்ப்புக்களின் மத்தியில் பெருமையாகவும் ஒளிந்தும் வாக்களித்தது ஏன்?

மலையகம்; அட்டைகளின் அராஜகத்தை ஒழிக்கவும், மாற்றுசிந்தனையாளரையும் புரட்சிகர சிந்தனையாளரையும் வேண்டியுமே சிறையில் வாடிய 'அண்ணன் சந்திரசேகரனுக்கு' வாக்களித்தனர். சிறையில் இருந்தபடி மாற்று அரசியலை / ஒடுக்கப்பட்டவர்களின் நலனுக்கான; மீட்சிக்கான அரசியலை வற்புறுத்தினர். மக்கள் ஏற்றுக்கொண்டனர்.

பூத்தது புதுவாழ்வு. இந்த தொழிலாளத் தோழர்களுக்கு அவர் தந்த பரிசுகள் ஏராளம். பிரதானமானது இரண்டு; ஒன்று, அவசரகால சட்டத்துக்கு ஆதரவு தருவது. மற்றது, வேலைநிறுத்த போராட்டத்தில் தொழிலாளர் நலனுக்காக எந்த முயற்சியிலும் இறங்காமல் காலை வாரியது.

''அவசரகால சட்டம்'' மூலம் பாதிக்கப்படுவது சிங்களவர்களோ முஸ்லிம்களோ அல்ல. தமிழர்களே. அப்பாவி மலையக, வடக்கு - கிழக்கு தமிழ் இளைஞர்களே

அவசரகால சட்டம் நீடிக்கும் வாக்களிப்பில் ஆதரவு காட்டும் பச்சோந்தி தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் அணியில் சந்திரசேகரர் சேர்ந்து கொண்டது எண்ணிப்பார்க்கவே முடியாத ஒன்று.

அவசர காலச் சட்டத்தின்வாயிலாக, உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட சந்திசேகரனே அரசின் பக்கம் நின்று அவசரகால சட்டத்துக்கு ஆதரவு காட்டி வருகின்றார் என்றால்.... சுயநலம் மிக்க யூதாஸ், புரூட்டஸ்... சந்திரசேகரன் என்று சொன்னால் தவறாகுமோ?

தான் சிறையிலிருக்கும் போதும், வெளியே வந்தபின்னரும் தனதும் தனது சகாக்களின் மீதும் கருணைகாட்டாத/ விடுதலை பற்றி குரல் தராத தொழிற் சங்கங்கள், அரசியல் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது கடுமையாக சாடி அவைகளின்/ அவர்களின் மீது வெறுப்பைஏற்படுத்திய சந்திரசேகரன், இன்று பயங்கரவாத முலாம் பூசப்பட்டு சிறையில் வாடும் மலையக அப்பாவி தமிழ் இளைஞர்கள் பற்றி எதுவித அக்கறையும் எடுத்துக்கொள்ளாமல் இருப்பது அவரது வார்த்தைகள் எத்தனை போலியானது என்பதனை காட்டுகிறது.

மலையகத்தில் தனக்கு பின் எவரும் அரசியல் செய்யக்கூடாது என்ற தொண்டமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வரும் சந்திரசேகரனுக்கு, எப்படி உங்களை கொணர்ந்தோமோ அதைவிட வேகமாக இன்னொரு சூரியனை கொணர்வோம். அதற்கு நாம் தயாராகிவிட்டோம் என மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

சந்திரசேகரன் தனது வேலை நிறுத்தப் போராட்டத்தில் பாதியில் விலகிக் கொண்டமைக்கான புளுகை தன் அடியார்களுக்கு விளங்கபடுத்திப் பிரச்சாரப் படுத்தி வருகிறார்.

''அரசாங்கம் டிசம்பருக்கு முன்னர் ஆறு அம்சக் கோரிக்கைகளை நிறைவு செய்து கொடுக்கும். எட்டு ரூபா உயர்வும் முழுமையாக கிடைத்துவிடும்.. அரசாங்கம் சொன்ன பிறகு வற்புறுத்தக் கூடாது வற்புறுத்தியும் பிரயோசனமில்லை.''

டிசம்பர் மாதத்திற்கு முன்னர் அல்லது அதற்கு அடுத்த மாதமே அத்தியாவசிய பொருட்களின் விலையை அரசு அதிகரிக்காதா? வாழ்க்கைச் செலவு உயரும் போது எட்டு ரூபா அதிகரிப்பு எதற்கு? அதற்கு பின்னர் என்ன செய்வதாம்? இவை கேள்விகள்.

இறுதியாக, தோட்டத் தொழிலாளர்கள் தமது உரிமைகள் கோரிக்கைகளை வென்றெடுக்க சுயமாக சுயாதீனமாக, போராட வேண்டும். ''வேலை நிறுத்தம்'' என்று சொல்லிவிட்டு இந்தியாவுக்கு தாவிப்போகும் சந்தர்ப்பவாதியான தொண்டமானையோ, அரசு மீது பரிவு காட்டும் சந்திரசேகரன் போன்றோரையோ நம்பி தோல்வியைத் தழுவிக் கொள்வதில் ஆகப்போவது என்ன?

பொருத்தமான வழியினை மலையக புத்திஜீவிகள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், சரிநிகர் போன்ற பத்திரிகைகள் மேர்ஜ் போன்ற அமைப்புகள் ஆராய்ந்து உதவ வேண்டும். அப்போதுதான் வறிய தோட்டத் தொழிலாளிகளின் அடிமை வாழ்வில் திருப்பத்தைக் காண முடியும்.

*இதயன்,*
*டிக்கோயா.*

## சொல் - வதை தவிர வேறில்லை!

சரிநிகர் இதழ்97 ஐ படித்தேன். 'அபூநிதால்' என்ற இனங்காணப்படாத விமர்சகரின் கருத்துக்களை ஜீரணிப்பதென்பது உண்மையில் எல்லோராலும் இயலாத காரியமே. அவர்கள் எதிர்பார்ப்பது விமர்சனமற்ற செயற்பாடுகளையே அன்றிவேறில்லை. அவர்களது அரசியல் தலைமைப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் பற்றிய 'இமேஜ்' எவ்வாறெனில்; அவர்கள் குற்றமே புரியாத அமரர்கள், தேவவாக்குகள் அவர்களின் வார்த்தைகள் அவர்களின் கனவுகூட, மறுக்க முடியாத உண்மையாகும் என்ற கற்பனை வாதத்திலேதான் பெரும்பாலான பாமர படித்த 'ஞானிகள்' வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கெல்லாம் அபூநிதால் சமாளிக்கவியலாத ஒரு சவாலாக தோற்றம் கொடுக்க ஆரம்பித்துள்ளார் என்பதைத் தவிர வேறொன்றும் நானறியேன். அதை அபூநிதாலின் வார்த்தையில் கூறினால், சொல்வதைத் தவிர வேறொன்றுமில்லை தான். ஜீரணிக்கவியலாதவர்களுக்கு அவ்விமர்சனங்கள் 'சொல் - வதை' தவிர வேறொன்றுமில்லை என்பேன் நான்.

*ஒட்டமாவடி அறபாத்*

## அஷ்ரஃப் மீது அதிக அக்கறை அபூநிதாலுக்கே!

கடந்த மே மாத 97 வது இதழ் பார்த்தேன். 'அபூநிதால் யார்' என்ற தலைப்பில் கல்முனையைச் சேர்ந்த பி.எம்.எம்.காதர் என்பவர் தனது கட்சிப் பற்றையும், அஷ்ரஃப் அவர்கள் மீதான அன்பையும் வெளிப்படையாக பேனா வரிகளால் வெளிக்கொண்டு வந்திருந்தார். பாராட்டுகிறேன். உண்மையில் அஷ்ரஃப் அவர்கள் மீது அதிக அக்கறை கொண்டுள்ளவர் அபூநிதால் தான் என்பது எனது அபிப்பிராயமாகும். காரணம், தலைவர் அஷ்ரஃப் அவர்கள் தவறுவிடும் போது நன்கு ஆராய்ந்து விமர்சிப்பவரேயன்றி (வீணாக அஷ்ரஃப் அவர்கள் மீதுள்ள அக்கறையால் விமர்சிக்கும் விமர்சகர்களை, யார் எனவும் தமிழரா, முஸ்லிமா என ஆராய்வதிலும் என்ன பலனிருக்கிறது?) அவர் அஷ்ரஃப் அவர்கள் செய்வதெல்லாவற்றையும் சரிகண்டு கொண்டிருப்பவரல்ல....

ஒன்றை மட்டும் பி.எம்.எம். காதர் , எம்.ஏ.எம். மர்சூக், எம்.ஐ.கபீர் போன்றோர் புரிந்து கொள்ள வேண்டும். எனக்கு 'அபூநிதால்' நண்பனோ, தெரிந்தவரோ அல்ல. கட்டுரைகள் வாயிலாக அறிந்தவரை சிறந்த விமர்சகன். அபூநிதால் யார் என்பதை விடுத்து அவரது ஆக்கபூர்வமான விமர்சனங்களுக்கு தகுந்த நியாயமான விடை கொடுங்கள். வீணாக அலட்டிக்கொள்ளாதீர்கள். 'சரிநிகர்' வாயிலாக உங்கள் பதில்கள் பிரதிபலிக்கட்டும். நான் என்ன அபூநிதாலே நியாயமானதெனில் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

*எம்.எஸ்.எம். பாயிஸ்,*
*காத்தான்குடி.*

## உண்மையின் வாயினைப் பூட்டிவிடாதீர்கள்!

எனது இந்தக் காலதாமதமான வாசகர் கருத்து கடிதத்திற்கு வருந்துகிறேன். நான் வெளிநாட்டில் தொழில் நிமித்தம் இருந்தாலும் இலங்கையின் உண்மை நிலையை அறிந்துகொள்ள, ஒரு கலங்கரை விளக்காக திகழ்வது சரிநிகர் செய்தித்தாள்தான். இலங்கையில் பல செய்தித்தாள்கள் மும்மொழிகளிலும் வந்தாலும், ஒரே செய்தியை சிலவேளை பலவிதமாக திரித்து இனரீதியாகவும், இனங்களுக்கிடையே துவேஷ உணர்வைத் தூண்டும் வகையிலும் வெளியிடுவதில் இலங்கை பத்திரிகைகளின் கைங்கரியத்தை சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. அநேகமாக பத்திரிகைகள் தங்கள் சுயலாபம் கருதி இனத்துவேஷத்தையும் மதவாதத்தையும் வால்பிடித்து செய்திகளை வெளியிட்டு நாட்டின் நல்லெண்ணத்தையும் எதிர்காலத்தையும் சூனியமாக்கிக் கொண்டிருக்கின்றன.

சரிநிகர் தமிழ் வாசகர்களுக்கு சிங்கள புத்திஜீவிகளின் கருத்துக்களை அறிந்து கொள்ள ஒரு பாலமாக விளங்குகிறதென சொல்லலாம். இலங்கை மக்களுக்கு, எங்கு எந்த சாராருக்கெதிராக பாகுபாடோ அடக்குமுறை அட்டகாசங்களோ இடம் பெற்றால் அவற்றிற்கெதிரான வலுவான எதிர்ப்பை சரிநிகர் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்கின்றது, அம்மக்களின் சார்பாக.

இவையெல்லாவற்றையும் விட மனித நேயத்திற்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் ஒரு சிறப்பம்சமாகும். ஜனநாயகத்திற்கும் சமாதானத்திற்கும் பாடுபடும் தனிநபர்களை கிண்டலடிக்கிறது என்பது சுத்தப்பொய். அத்தகைய தனிநபர்கள் ஒரு மாற்றுக் கருத்தை, தெரிந்தோ தெரியாமலோ விட்ட பிழைகளிலிருந்து சரிப்படுத்திக்கொள்ள உதவுவதாக ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது. தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை

அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எழுதுவதை தமிழினவாதமென்பது என்ன நியாயம்? இதற்கு நீண்ட விளக்கங்கள் எழுதலாம். ஆனால், அவசியமில்லை. சரிநிகர் வாசகர்கள் நன்குணர்வார்கள்.

எனவே சரிநிகர் மேர்ஜ் நிறுவனத்தின் நல்நோக்கங்களை முன்னெடுத்துச் செல்லும் பணியை சிறப்பாகவே செய்துவருகின்றது. இலங்கைப் பத்திரிகைத்துறையில் சரிநிகர் ஒரு புதிய மைல்கல். சிங்கள மொழியில் இதுபோன்ற பல முற்போக்குப் பத்திரிகைகள் இருக்கின்றன. ஆனால், தமிழில் சரிநிகர் மட்டுமே! எனவே உண்மையின் வாயைப் பூட்டி விடாதீர்கள என்பது எனது நண்பர்களினதும், எனதும் அன்பான வேண்டுகோள்.

*ச. சபா,*
*ஜப்பான்.*

www.tamilarangam.net

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

சரிநிகர்
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

## நியாயாதிக்கம் என்பது யாது?

சில நாட்களுக்கு முன்பு நடந்த பத்திரிகையாளர் மகா நாடொன்றில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த நீதி, அரசியல் யாப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் அவர்கள் யாழ் குடாநாட்டை அரசின் நியாயாதிக்கத்திற்கு உட்படுத்துவது ரிவிரச இராணுவ நடவடிக்கைகளின் நோக்கமென கூறியிருந்தார். மறுபுறத்திலே தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி கருத்து தெரிவிக்கும் போதெல்லாம் தமிழ் மொழியில் கருமமாற்றும் உரிமை, வேலை வாய்ப்பு, குடியேற்றம் போன்ற பிரச்சினைகளைத் தான் தமிழினத்தின் பிரச்சினைகளாக குறிப்பிடுவது அவரது வழக்கமாகும்.

பல இன. மத அடிப்படையிலான மக்கள் வாழ்கின்ற ஒரு பல்லின ஜனநாயக சமூகத்தில் அரசானது இன மத மொழி சார்பற்றதாகவும் அந்நாட்டின் அனைத்து பிரஜைகளினதும் முழுமையான சமத்துவத்தை அங்கீகரிக்கின்றதாகவும் அந் நாட்டில் வாழ்கின்ற வெவ்வேறு இன, மத மொழி குழுக்களை சமத்துவமாக நடத்தக் கூடியதாகவும் அமைதல் வேண்டும். இப்படியாக அமையும் பொழுது தான் அரசானது அந்நாட்டின் அனைத்து பிரஜைகளினதும் அரசு என்ற மனநிலையை பிரஜைகள் மத்தியில் தோற்றுவிப்பதற்கும் அதேநேரத்தில் அவ் அரசின் நியாயாதிக்கத்தை சவால்களின்றி நிலை நாட்டிக்கொள்ளவும் முடியும்.

சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாற்றிலே இதுவரை காலமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த ஒற்றையாட்சியும் அதன் விளைவாக மேலோங்கிய பெரும்பான்மையினர் ஜனநாயக நடைமுறைகளும் (Majoritarian Democracy) இந் நாட்டின் சிங்கள பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தை அரசியல் ரீதியாக நிலைநாட்டுவதற்கு உதவி வந்துள்ளது. மறுபுறத்தில் சிறுபான்மை தேசிய இனங்களின் ஜனநாயக அபிலாசைகளும் சமத்துவமும் முற்றாக புறக்கணிக்கப்பட்டு சிங்கள பெளத்த இன மத ஆதிக்கத்தை அங்கீகரிக்கின்ற இந்நாட்டின் அடிப்படை சட்டமான அரசியல் யாப்புகள் 1972 ஆம் 1978 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்டன.

தமிழ் மக்களின் அபிலாசைகளை புறக்கணித்ததனாலேயே இந்த இரு யாப்புகளையும் தமிழ் மக்கள் நிராகரித்தனர். இதை ஜனநாயக கோட்பாடு ரீதியாக கூறுவதேயானால் 1972, 1978 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட யாப்புகளின் அடிப்படையில் பதவிக்கு வந்த அரசுகள் தமிழ் மக்கள் மீதான நியாயாதிக்கத்தை இழந்தவை என்பதாகும், எனவே இந்த இனவாத நியாயாதிக்கத்திற்கு அடிபணிய மறுத்த தமிழ் மக்களின் குரலாகத் தான் சமஷ்டி ஆட்சி முறை தனித் தமிழீழம் போன்றவை மேலெழுந்தன. இவ்வகையில் மேலெழுந்த தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கான குரல்களையும், போராட்டங்களையும் இராணுவ ரீதியாக முறியடித்து அரசின் நியாயாதிக்கத்தை தமிழ் மக்கள் மீது பலாத்கார வழிகளில் நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டு யுத்தம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக இனவாத முரண்பாடு இராணுவமயப்படுத்தப்பட்டு தமிழ் மக்கள் மத்தியில் இராணுவ ரீதியில் திறமைமிக்க சக்திகளின் ஆதிக்கம் தமிழ் பிரதேசங்களில் நிலைநாட்டப்படுவதற்கு வழிவகுத்தன. - விடுதலை புலிகளின் ஆதிக்கம் நிலைநாட்டப்படுவதற்கு முக்கிய காரணமாக அவர்களுடைய போராட்ட தன்மையை விட தமிழ் மக்களை அரசியல் ரீதியாக புறக்கணிப்பதற்கு அரசுகள் மேற்கொண்ட ஜனநாயக விரோத நடவடிக்கைகளே அமைந்தன. எனவே விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தை முறியடித்து அரச இராணுவத்தின் ஆதிக்கத்தை நிலை நாட்டியதன் மூலம் அரசின் நியாயாதிக்கத்தை நிலைநாட்டி விட்டோம் என்று கூறுவது முற்றிலும் தவறான ஒரு விடயமாகும். அரசு தமிழர்களினதும் நியாயமான அரசு என்பதை அரசியல் ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் நிலைநாட்டிக் கொள்ளாமல் இராணுவ ரீதியாக ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதை நியாயாதிக்கம் என ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே அமைச்சர் பீரிஸ் அவர்களே! உங்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறோம். சரியான மாற்றுத் தீர்வு முன்வைக்கப்படும் பட்சத்தில் தனித் தமிழீழ கோரிக்கையை கைவிட்டு இங்கை அரசின் நியாயாதிக்கத்தை ஏற்றுக்கொண்டு ஐக்கிய இலங்கையினுள் வாழ்வதற்கான தமது தயார் நிலையை தமிழ் மக்கள் தொடர்ந்து பிரகடனப்படுத்தி வந்துள்ளார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் சிங்கள பெளத்த ஆதிக்கத்தை நிலைநாட்ட மேற்கொள்ளுகின்ற எல்லா முயற்சிகளையும் தொடர்ந்தும் அவர்கள் எதிர்த்தே வருவார்கள். எனவே அரசின் நியாயாதிக்கத்தை பலாத்கார வழிகளில் தமிழ் மக்கள் மீது நிலைநாட்ட மேற்கொள்ளுகின்ற அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்தி ஜனநாயக நடைமுறைகள் மூலமாக உங்களது செயற்பாட்டை ஆரம்பியுங்கள். பல்லினப்பாங்கான ஆட்சி முறையை அங்கீகரிக்க கூடியதும் தமிழ் மக்கள் செறிவாக வாழ்கின்ற வட கிழக்கு பிரதேசங்களுக்கு தமிழ், முஸ்லிம் கருத்தொற்றுமையின் அடிப்படையில் ஆட்சி அதிகாரங்களை பகிர்ந்து கொள்வதோடு, மத்தியில் அனைத்து இனங்களும் பங்காளிகளாக உருவாகக் கூடிய வகையிலே, ஒற்றையாட்சி முறையையும் பெரும்பான்மையினரின் ஜனநாயகத்தையும் நிராகரிக்ககூடிய சமஷ்டி ஆட்சி முறையை உருவாக்குவதன் மூலமே இது சாத்தியமாகும். இதன் மூலமே சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே தோன்றியுள்ள இனவாதங்களையும், தீவிரவாதங்களையும் இல்லாதொழித்து சமாதான சமத்துவமான இலங்கையை கட்டியெழுப்ப முடியும்.

உங்களுடைய அரசு முன் வைத்த பிரேரணைகளானது மேற்கூறிய தீர்வை நோக்கி நகரக் கூடிய சில அடிப்படைகளை கொண்டிருந்த்ன எனினும் அப்பிரேரணைகள் சட்ட நகலாக வெளிவந்த பொழுது அதனுடைய தரம் குறைக்கப்பட்ட நிலையானது தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளதோடு இந் நடைமுறைகள் செயல் இழந்தவையாகவே காணப்படுகின்றன. என்வே தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை, ஜனநாயக நடைமுறையிலான பேச்சுவார்த்தைகள் மூலம் இனங்காணுவது தான் இன்று இருக்கின்ற ஒரே பணியாகும். பலாத்கார வழிகளில் தீர்வைக்காண விளைவதன் விபரீதங்களை தவிர்ப்பதற்கும் இதுவே வழியாகும்.

## மீதி 32 பேர் எங்கே?

ரிவிரெச-2 இராணுவ நடவடிக்கையின் போது யாழ்ப்பாணத்தில் வைத்து கைது செய்யப்பட்ட பல இளைஞர்களில் '60 பேர்' பற்றிய கதை பெரிதாக அடிபட்டு வந்தது அறிந்ததே. வேறு எவரும் கைது செய்யப்படவில்லை என்ற கதையும், மறுபக்கம், கைது செய்யப்பட்டோர் அதனிலும் அதிகம் ஆனால் அத்தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை என்பது போன்ற பல செய்திகள் ஆங்காங்கு அடிபட்டன. எவ்வாறிருந்த போதும் இந்த '60 பேர்' பற்றிய தகவலை மையமாக வைத்து தென்னிலங்கையில் சில தமிழ்த தலைவர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இந்த 60 பேர்களும் யாழ்ப்பாணத்தில் கைது செய்யபட்டு பலாலி இராணுவ தளத்திற்கு கொண்டு வரப்பட்டு சில நாட்கள் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தபின், காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தனர். அதன்பின் காங்கேசன் துறையிலிருந்து திருகோணமலைக்கு கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து இரகசியமாக கொழும்புக்கு கொண்டுவரப் பட்டிருந்தனர். கொழும்பில் இவர்கள் எங்கிருக் கிறார்கள் என அறிய பல மனித உரிமை அமைப்புகள் முயன்ற போதும் பொறுப்பான பதிலை அரசு அளிக்கத்தவறியது. இந்நிலையில் சில நாட்களின் பின்னர் ஒரு சில மனித உரிமை அமைப்புகளுக்கு மட்டுமே சில தகவல்களை தேடிப்பெற முடிந்திருந்தது. ஆயினும் கிடைத்த பூரணமற்ற தகவலைக் கூட வெளியிட முடியாத வண்ணம் பத்திரிகைத் தணிக்கை முறைக்டுமையாக அமுலில் இருக்கிறது. இந்த 60 பேர்களும் ஒரு சில நாட்கள் மட்டுமே கொழும்பில் தடுப்பு முகாமொன்றில் ஒன்றாக இருத்தப் பட்டிருந்தனர். அதன் பின்னர் இவர்கள் பல குழுக்களாக வேறுவேறாக பிரித்து வைக்கப்பட்டிருந்தனர்.

இறுதியாக இவர்களில் 28 பேர் மாத்திரம் விடுதலை செய்யப்படுவதற்காக யூன் 9ம் திகதி மீண்டும் திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் இவ் 28 இளைஞர்களும் தற்போது திருமலை நகரசபை மண்டபத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கப்பல் சேவையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக பாதுகாப்பு துறையினர் சொல்கின்றனர்.

### அந்த 28 பேர்

1.பழனி சற்குணராசா-காரைநகர்
2.சுவான்பிள்ளை ஜின்பிரவுன்-நாவாந்துறை
3.சுப்பிரமணியம் சிவகுமார்-கைதடி
4.ராமச்சந்திரன் சுரேஸ்குமார்-பளை
5.செபஸ்தியான்பிள்ளை தருமதாஸ்-குருநகர்
6.ஆறுமுகம் ராஜேந்திரன்-மட்டுவில்
7.கதிரவேலு நகுலேசன்-யாழ்ப்பாணம்
8.கிட்ணன் மகேந்திரன்-புத்தூர்
9.பூணான் சதீஸ்வரன்-புத்தூர்
10.சீவரத்தினம் நிரஞ்சன்-வேலணை
11.ஏகாம்பரம் ஜேதீஸ்வரராஜா-காரைநகர்
12.துரைசிங்கம் சபேசன்-குருநகர்
13.சின்னத்துரை குகானந்தன்-தெல்லிப்பளை
14.கிட்ணன் செல்வரத்தினம்-தெல்லிப்பளை
15.பசுபதி கதிர்காமநாதன்-வசாவிளான்
16.மகாலிங்கம் சத்தியேந்திரன்-சுன்னாகம்
17.திருபாதன் காண்டீபன்-நீர்வேலி
18.செல்வரத்தினம் ரூபிஸ்வரன்-அச்சுவேலி
19.நாகராசா ரவீந்திரன்-அச்சுவேலி
20.ராஜன் பிரபாகரன்-அச்சுவேலி
21.செல்சன் செல்வரூபன்-அச்சுவேலி
22.தேவேந்திரன் தேவமாகன்-புத்தூர்
23.ரட்ணம் யோகேஸ்வரன்-புத்தூர்
24.செல்வநேசன் இந்திரகுமார்-புத்தூர்
25.பொன்னம்பலம் சிவந்திநாதன்-புத்தூர்
26.சின்னையா மகேந்திரன்-கைதடி
27.சரவணன் ஞானேந்திரம் மானிப்பாய்
28.க.யோகராசா-தம்பலகாமம்

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் சிலரை சரிநிகர் நிருபர் சிரமப்பட்டு திருமலையில் வைத்து சந்தித்து கதைத்த போது யாழ்ப்பாணத்தில் தாங்கள் கடுமையான தாக்குதலுக்கு உள்ளானதாக தெரிவித்தனர்.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவ் 28 பேருக்கும் வீடியோ திரைப்படம் காட்டப்படுகின்றது என்றும் நகரசபை நூலகத்தில் வாசிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறதோடு குறிப்பிட்ட தூரத்துக்குள் உலாவவும் அனுமதியளித்திருக்கின்றனர் என்றும் இவ்வசதிகளை நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி செய்து கொடுத்துள்ளார் என்ற தகவல்களும் கிடைத்திருக்கின்ற போதும் பாதுகாப்பு துறையினரின் ஒட்டு மொத்த நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனிக்கின்ற போது இவை வெறும் கண்வித்தை என்றே சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது. இவ்விளைஞர்கள் பற்றிய பூரண விபரங்களை அரசு மறைத்தது ஏன்? பின்னர் அவை பற்றிய தகவல்கள் சிலவற்றை அறிந்த மனித உரிமை அமைப்புகள், தமிழ் அரசியல் தலைவர்கள் போன்றோர் மேலதிக தகவல்களை வினவிய போது பதில் சொல்ல மறுத்தது ஏன்?

'60 பேர்' பற்றி ஓரளவு அறிந்ததாலேயே மேலதிக தேடல்களை மேற்கொள்ள பலரால் முடிந்தது. இன்னும் ஆங்காங்கு கசிந்து கொண்டிருக்கும் ஏனைய 'இளைஞர்கள் கைது' பற்றிய உண்மைகள்தான் என்ன? இந்த 60 பேர் பற்றிய விபரங்களைக் கூட இன்னும் பொறுப்பாக தெரிவிக்காத அரசு ஏனையோர் பற்றிய தகவல்களை எப்படி வெளியிடும் என்று கேட்கிறீர்களா? அதுவும் சரிதான். மீதமுள்ள கேள்வி என்னவென்றால், எஞ்சிய 32 பேருக்கும் என்ன ஆனது? உயிருடன் தான் இருக்கிறார்களா? இருந்தால் எத்தனை பேர்? அவர்கள் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள்? எப்போது விடுதலை செய்யப் படுவார்கள்? இதுவே, அவலமே வாழ்வாகிப்போன அந்த இளைஞர்களின் தாய்மாரின் ஏக்கம்.

– விவேகி – சரா

## நீர்ப்பாசன புனரமைப்பில் இனசுத்திகரிப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 நீர்ப்பாசன குளங்களை புனரமைப்பு செய்வதற்கு நீர்ப்பாசன திணைக்களம் ஏற்கெனவே அனுமதி வழங்கியிருந்தது. அதில் 15 குளங்கள் தமிழ் பகுதிகளில் அமைந்துள்ளன. அவை களவாஞ்சிக்குடி, ஆரைப்பற்று, வெள்ளாவெளி, கரடியனாறு போன்ற பகுதிகளில் அமைந்துள்ளன.

முஸ்லிம் பகுதியில் அமைந்துள்ள குளத்தின் பெயர் ''மயிலன் கரைச்சக்குளமாகும். ஏற்கெனவே இதுவும் பாதுகாப்பான பகுதியில் அமைந்துள்ளது என்றும் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ளலாம் என்றும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போது தமிழ் பகுதிகளில் உள்ள 15 குளங்களுக்கும் பாதுகாப்பு உள்ளது என்றும், முஸ்லிம் பகுதியில் அமைந்துள்ள மயிலன் கரைச்சைக் குளத்தை புனரமைப்புச் செய்வதற்கு மட்டும்பாதுகாப்புஇல்லையெனமாகாண நீர்பாசன உதவிப் பணிப்பாளர் கே. வடிவேல் அவர்கள் தெரிவிக்கின்றார். இதனால்வேலைகள் தடைப்பட்டுள்ளன.

வடிவேல் ஐயா! சொல்லுவதெல்லாவற்றுக்கும் ஒரு நியாயம் வேண்டும். உங்களுடைய இனசுத்திகரிப்பை கழுவுவதற்கு கூட இந்த மயிலன் கரைச்சக் குளம் உதவலாம், வாழ்க! வடிவேல்ஐயா!, வளர்க தமிழ் - முஸ்லிம் உறவு! ஒழிக மயிலன் கரைச்சக் குளம்!

*அஹமட் ஹிஸாம்*

### நூல் வெளியீடு

திரு.வி.ரி.தமிழ்மாறனின்

**தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள்**
**மோதல்களும் தீர்வுகளும்**

தலைமை: பேராசிரியர்.சோ.சந்திரசேகரம் அவர்கள்
வெளியீட்டுரை: திரு.ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் பா.உ.
சிறப்புரை: பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள்
கருத்துரை: திரு.ஆ.சிவநேசச் செல்வன் அவர்கள்
நூலாய்வு: கலாநிதி எம்.ஏ.நுஃமான் அவர்கள்
திரு.டி.சிவராம் அவர்கள்
பதிலுரை: திரு.விடி.தமிழ்மாறன்அவர்கள்

**இடம்: வெள்ளவத்தை தமிழ்ச் சங்கம்**
**காலம்: 15.06.96 சனி. மாலை 6 மணிக்கு**

– அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் –

### நூல் வெளியீடு

ஜபாரின்

**தரப்பட்டுள்ள அவகாசம்**

*கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு*

தலைமை: திரு.சுந்தரம் டிவகலாலா அவர்கள்
(செயலாளர் -வட -கிழக்கு மாகாண கல்வியமைச்சு)
கருத்துரை: திரு.வ.ஐ.ச.ஜெயபாலன்அவர்கள்
விமர்சன உரை: திரு.சு.வில்வரத்தினம் அவர்கள்
பதிலுரை: திரு.ஜபார் அவர்கள்

**இடம்: திருமலை நகரசபை மண்டபம்**
**காலம்: 24.06.96, திங்கள் மாலை 5 மணிக்கு**

-அனைவரையும் அழைக்கிறோம்-

11061996

பிரதம ஆசிரியர்: சேரன், எல்லாத் தொடர்புகளுக்கும்: இல. 4, ... பாய, கொழும்பு-05, தொலைபேசி: 593615,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்